வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஐப்பசி திங்கள் 24-ம் நாள் (10—11—1963) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 22 | இதழ் 24

# இ. போ. ச. வில் தமிழர்களுக்கு இடைஞ்சல்


## உத்தியோக உயர்வுக்கு மந்திரியின் தடை

புதிய போக்கு வரத்து அமைச்சர் இலங்கைப் போக்கு வரத்துச் சபையில் உள்ள தமிழ் ஊளியர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்க வேண்டாமெனச் சபையின் பிரதம நிர்வாகிக்கு அறிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது. ஆரம்ப நாள் முதல் முக்கிய பதவி வகித்து அதன் வளர்ச்சிக்காகத் தங்கள் உடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணித்த தமிழ் ஊழியர்களை, அனுவசியமாக இன்னல்கட்குட்படுத்தி வெளியேற்றுவதே அமைச்சரின் நோக்கம் என்று தெரிகிறது.

தமிழ் ஊழியர்களின் எண்ணக் கோட்டைகள் யாவும் நகர்த்தப்பட்டு, சபையில் வெறுப்பும் ஏற்பட, அங்கு நடைபெற்றதாகக் கூறப்படும் பின்வரும் சில முக்கிய சம்பவங்களே காரணமாகும்:—

1. அண்மையில் சபை நான்கு பிரதேச நிர்வாகிகளைத் தெரிவு செய்தது.

(8-ம் பக்கம் பார்க்க)



சாவகச்சேரித் தொகுதியில் உள்ள கைதடி என்னும் கிராமத்தில் உள்ள சிறுர்கள், நாடெல்லாம் தமிழ் உரிமைப் போரின் அவசியத்தை உணர்த்தி வரும் பாதயாத்திரைக் குழுவை வரவேற்க மூவர்ணக்கொடி சகிதம் திரண்டு நிற்கிருர்கள். கோப்பாய்க் கிராமத்தில் மதிய உணவை முடித்துக் கொண்டு புறப்படுவதற்குத் தொண்டர்கள் தயாராகுகிருர்கள்.

# பாதயாத்திரை கைமேற்பலன்

## நேரடி நடவடிக்கைக்கு மக்கள் தயார்

யாழ்ப்பாணம், நவ. 7

ஆட்சியாளர் அடுத்து அடுத்து மறைமுகமாகவும் நேரடியாகவும் தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்து வரும் இன்னல்களை எடுத்துக்கூறி நடக்கவிருக்கும் நேரடி நடவடிக்கைக்கு மக்களைத் தாயர் செய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியினரின் பாத யாத்திரை, குடா நாட்டின் பெரும் பகுதியை சுற்றி வந்துள்ளது. இற்றை வரை இருநூறு கல் தொலைவுக்கு மேற்பட்ட தூரத்தைத் தொண்டர்களும தலைவர்களும் நடந்து கடந்துள்ளனர். தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் சென்ற இடமெல்லாம் சிறந்த வரவேற்புக் கிடைத்துள்ளது. மக்கள் இன்முகம் காட்டி இனிய மொழி கூறி நடக்கவிருக்கும் நேரடி நடவடிக்கைக்கு தமது முழு ஆதரவையும் தெரிவித்துள்ளனர்.

பாத யாத்திரை நிகழ்ச்சிகளின் விபரங்கள் வருமாறு:-

வெள்ளிக்கிழமை இரவு மண்டைதீவிலிருந்து பண்ணைப் பாலம் வழியாக யாழ்ப்பாணத்தை நோக்கி திவட்டி ஊர்வலமாக பாத யாத்திரைக் குழுவினர் புறப்பட்டனர். இரவு 12 மணிக்கு திவட்டிகள் தாங்கிய தொண்டர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். ஊர்காவற்றுறைத் தொகுதியின் பல இடங்களிலும் வரவேற்பளிக்கப்பட்டமையினுலும், தொடர்ந்து பெய்த மழையினுலும் எதிர்பார்த்தபடி ஊர்வலம் 7-30க்கு வர முடியவில்லை. இரவு ஜின்னு மைதானத்தில் நடைபெறவிருந்த பொதுக் கூட்டம் நடைபெறவில்லை. முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அமோக வரவேற்புடன் பாத யாத்திரை சென்று மீரானியாக் கல்லூரியில் இரவுப் பொழுதைக் கழித்தனர். இரவுப் போசனத்துக்கும், மீரானியாக் கல்லூரியில் தங்குவதற்கும், பிரபல வர்த்தகர் ஜனுப் மீராப்பிள்ளை ஹாஜியார் அவர்கள் சகல ஏற்பாடுகளையும் செய்தளித்தார். பாத யாத்திரைக் குழுவினரை வரவேற்று, முஸ்லிம் வட்டார மாநகரசபை உறுப்பினரான ஜனுப் வி. எம். எஸ். அபுசாலி ஹாஜியார், பிரபல வர்த்தகர் ஜனுப் உமர் அப்துல் காதர் ஹாஜியார் முதலியோர் உபசரித்தனர். முஸ்லிம் வட்டாரப் பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து உபசரித்து அடுத்த நாள் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் வழியனுப்பி வைத்தார்கள்.

### முஸ்லிம் அன்பர்கள் உபசாரம்

மீரானியாக் கல்லூரியில் முஸ்லிம் அன்பர்கள் அளித்த

(9-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சைக்குரிய ஆளடையாள அட்டை பற்றிய விபரம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது உயர்தர பாடசாலைப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தமிழ் மாணவ மாணவிகளிற் பலர் தமக்கு வழங்கப்படும் சிங்கள ஆளடையாள அட்டைகளை ஏற்க மனமில்லாது, இப்பிரச்சினைக்கு வழி என்னவென்று வினவிக் கடிதம் எழுதியிருந்தார்கள். அதற்கு ஆளடையாள அட்டைசம்பந்தமாகப்பரீட்சைப் பகுதியின் சுற்று நிருபத்தின் தமிழாக்கத்தைக் கடந்த 20-10-63 சுதந்திரன் எட்டாம் பக்கத்தில் பிரசுரித்திருந்தோம்.

அச் சுற்று நிருபத்தின் நாலாவது விதிக்கு ஏற்ப,

(9-ம் பக்கம் பார்க்க)

# அண்மையில் தேர்தல்

## ஆளும் கட்சியின் அவசரம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை பாராளுமன்றத் தொகுதிகளில் கட்சி அமைப்பை உடனடியாக பலப்படுத்தும்படி அவசர உத்தரவுகள் பிறப்பித்துள்ளதால் அடுத்த ஆண்டில் நிச்சயம் பொதுத் தேர்தல் நடைபெறுமென அரசியல் அவதானிகள் நம்புகின்றனர். யு. என். பியும், இடதுசாரி ஐக்கிய முன்னணியும் எந்தச் சமயத்திலும் பொதுத் தேர்தலை எதிர்பார்த்து, தத்தம் கட்சிகளை துரித வேகத்தில் பலப்படுத்தி வருகின்றன.

ஒவ்வொரு தொகுதிகளிலும் திட்டமிடப்பட்டுள்ள வேலைகளை கூடியளவு துரிதமாகச் செய்து முடிக்கும்படியும், சிம்மாசனப் பிரசங்கத்தில் கண்டுள்ள திட்டங்களை அவசரமாக நிறைவேற்றுமாறு இலாகாக்களுக்குக் கட்டளையிடும்படியும் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்கா மந்திரிகளுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## "மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலண்டர் No. 1 (சிகப்பு) | 1-85 |
| நன்மொழிக் கலண்டர் No. 2 | 1-05 |
| மாதக் கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்) | -65 |
| சிங்கள கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | 1-75 |
| ரேபிள் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | 4-75 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-10 |
| No. 1. பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக் கவருடன்) | 2-25 |
| No. 2. பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, | 1-75 |
| No. 3. பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 2-95 |
| No. 4. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1-75 |
| No. 5. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1-40 |
| No. 6. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-10 |
| No. 7. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 2-60 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்றிக் கவர்) | 2-95 |
| பிளாஸ்றிக் சிங்கள டயறி ,, | 1-75 |
| பேர்ஸ் சிங்கள டயறி | 2-60 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 4-50 |
| No. 1. பேர்ஸ் தமிழ் டயறி (பேர்ஸ் சகிதம்-With Purse) | 3-10 |
| No. 2. பேர்ஸ் திருக்குறள் டயறி ,, | 2-60 |
| No. 4. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 2-60 |
| No. 5. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 2-10 |
| No. 6. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-85 |
| No. 7. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 3-35 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 4-50 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 5-50 |
| ஜெம் டயறி (Gem Diary) | 1-35 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-05 |

இன்னும் பல உண்டு.

மற்றும் விபரங்களுக்கு

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை**

161, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

போன் : 79141

கிளை:

10, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(போன் : 236)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் உரிமை பெற்றுவாழ தாய்க் குலத்தின் ஒத்துழைப்பு அவசியம் வேண்டும்

## பட்டாடையும் பகட்டுவாழ்வும் நமக்கு வேண்டாம் என்ற மனநிலை உருவாகட்டும்

அம்மா! நான் தான் உனது எதிர்காலக் குழந்தை பேசுகிறேன். கருவாவது! பேசுவதாவது! என்றெண்ணிக் கன்னத்திலே கை வைத்துக் கலங்கவேண்டாம். உன் போன்றவர்கள் செய்யும் துரோகச் செயலைத் தடுக்க நாளைய நாங்கள் மட்டுமல்ல, நேற்றைய நம்மவர்கள் கூட முடியுமானால் கல்லறையிலிருந்து உயிர் பெற்றெழுந்து வந்து விடுவார்களே! வெறும் பிரமையாயிருக்குமோ என்றெண்ணிய உனக்குத் தொடர்ந்து நான் பேசுவதைக் கேட்க அடக்க முடியாத ஆச்சரியமும் அச்சமும் ஏற்படுகிறதல்லவா? உனக்கு அஷ்டவக்கிரன் கதை தெரிந்திருந்தால் நீ ஆச்சரியப்படமாட்டாய். ஆனால் ஆங்கில மோகம் பிடித்தலைந்த உனக்கு எங்கே எங்கள் தமிழ்க் கதைகள் தெரிந்திருக்கப் போகிறது?

### தவறிழைப்பவள்

கற்றறிந்த முனிவரொருவர். அவர் மனைவி எட்டு மாதக் கர்ப்பிணி. வேதம் ஓதிக்கொண்டிருந்த முனிவர் சிறிய தவறு செய்தார். உடனே அவர் மனைவியின் வயிற்றிலே வளர்ந்துகொண்டிருந்த அவரது மகன் அந்தத் தவறைத் திருத்திக் கூறினான். தகப்பனார் பொறுப்பாரா? அதிகப்பிரசங்கித்தனமாக மகனைச் சபித்தார். பிறக்கும்போதே அஷ்டவக்கிரனாகப் (எட்டுவித அங்கஹீனனாகப்) பிறப்பாய் என்ற தந்தையின் சாபத்தின் காரணமாகப் பாவம் அந்த முனி புதல்வன் மாபெரும் மேதையாக ஆனால் பார்ப்பவர் அருவருக்கக் கூடிய குரூபியாகப் பிறந்தானும். ஆனால் அம்மா! என்மேல் கோபம் கொண்டு எனக்கு நீ சாபமிட்டாலும் கூட அது பலிக்கப் போவதில்லை. ஏனென்றால் நீ தவறிழைப்பவள். உன் இனத்துக்கே துரோகம் செய்கிறாய். உன் உல்லாசத்திற்காகவும், சுகவாழ்விற்காகவும் உனது சமுதாயத்தையே நீ காட்டிக் கொடுக்கத் துணிந்துவிட்டாய். உனது இனத்தின் மானம், மரியாதை, மதிப்பு அத்தனையையும் காற்றிலே பறக்கவிட்டுப் பதவியிலே பற்றித் தொங்கிப் பகட்டாக வாழ விழைகிறாய்.

வேளைக்கொரு சேலையும் நாளுக்கொரு நகையும் விதவிதமாயணிந்து சிநேகிதைகளுடன் காரிலே சுற்றுவதுதான் சொர்க்கம் என்றெண்ணுபவள் நீ. அதே நேரத்தில் எம்முடைய பிறந்த பூமியிலே—ஈழத் தமிழ்நாட்டிலே ஆயிரமாயிரம் உன் போன்ற பெண்கள் வறுமையுடன் போராடுவதை நீ

— அறிவழகன் —

எண்ண மறுக்கிறாய். உன் போன்ற ஒரு சிலரின் நடத்தையால் எத்தனையோ பேரின் வாழ்வு நசுக்கப்படுமே என்று எண்ணத் தவறிவிட்டாய். உதட்டுச் சாயம், நகப் பூச்சு, பகட்டான பட்டு, நாகரீக நகையணிகள், வேளா வேளைக்கு உணவு, உல்லாசமான பொழுதுபோக்கு, இவற்றைத் தவிரத் தன்மானம் என்று ஒன்று இருப்பதாகவே உனக்குத் தெரியாது.

### இதுவும் ஒரு வாழ்வா?

இன்று கூட அப்பா சிங்களம் படியாமல் அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தால் ஓய்வு பெறும்படி நேரிட்டால் வாழ்வே அஸ்தமித்து விடும் என்று கூறுகிறாயே? சிங்களம் படிப்பதால் உன் இனத்தின் வாழ்வே அஸ்தமித்துவிடுமே என்று நீ ஒரு கணமாவது சிந்தித்ததுண்டா? ஓய்வு பெற்றால் நீ கூறுவது போல் பிச்சைக்கார வாழ்வா உனக்குக் கிட்டும்? உன் இனத்தின் சுயமரியாதையைக் காக்க நீ ஒரு சில சலுகைகளைத் தியாகம் செய்து வாழ்வதுதான் பிச்சைக்காரத்தனமா? வசதி என்பது மனதால் ஏற்படுவது. வயிற்றுக்கு உணவும், மானங்காக்க உடையும், பாதுகாப்புக்கு வீடும், கல்வியறிவும் போதும் என்று உன் மனம் எண்ணித்திருப்தியடைந்தால் அதுதான் வசதியான வாழ்வு. காலந்தவறுமல் வேளா வேளைக்கு விதவிதமாயுண்டு, உடலை வளர்த்து உள்ளத்தைத் தேய விடுவதுதான் வசதியான வாழ்வு என்று கருதும் நீ உனது கருத்தை நிச்சயம் மாற்றியே யாகவேண்டும். உன் போன்றோர் எங்கள் சமுதாயத்திலே வெகு சிலர். வசதி மிகுந்த அந்தச் சிலரால்தான் எமது போராட்டங்களுக்கு எதிர்ப்புக் கிளம்புகிறது. அந்த எதிர்ப்பு இறுதியில் உங்களையே அழிக்கும் கருவியாக மாறும்.

எங்கள் ஒரு கண்டத்திலே அன்று ஏகாதிபத்திய வெறிபிடித்த ஒருவனால் நடத்தப்பட்ட யுத்தத்திற்காக ஒரு பாவமும் அறியாத நம்மவர்களெல்லாம் பட்டினியால் வாடவில்லையா? துணிக்குத் திண்டாடவில்லையா? எத்தனையோ விதங்களிலே துன்புறவில்லையா? இன்று எமது சமுதாயத்தின் மானத்தைக் காக்க, அடிமைத் தளையை உடைத்தெறிய, புது வாழ்வு தர எம்மால் இயன்ற தியாகத்தைச் செய்யப் பின்வாங்கலாமா? எமது சமுதாயத்தின் தாழ்விலே வாழ்வு காண முயல்வது கயமையிலும் கயமையல்லவா? துரோகத்தின் பரிசாகக் கிடைக்கும் இந்தப் போலி வாழ்வும் ஒரு வாழ்வா? மானத்திற்கு வாய்க்கரிசியிட்டு, மனச்சாட்சிக்குக் கொள்ளி வைத்துப் பெறும் வாழ்வும் ஒரு வாழ்வாகுமா? கேவலம்! அதைவிடச் சாக்கடையிலே ஒரு புழுவாக நெளியலாமே அம்மா?

### வரலாற்றைத் திரும்பிப்பார்!

பெண் அணுவுக்கு நிகரானவளென்று கூறுவார்கள். அவளால் அழிக்கவும் முடியும். மாபெரும் ஆக்கவேலைகளைச் செய்யவும் முடியும். தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் அழிவிற்குக் காரணமாயிருந்ததாக இதுவரை சரித்திரம் கூறவில்லை. இனி மேலும் கூறக் கூடாது. தன் கணவன் கள்வனல்ல என்று நிரூபித்த கண்ணகியை நினைத்துப் பார். வெள்ளையரை விரட்டியடித்த வேலுநாச்சியை எண்ணிப்பார். மகாத்மா காந்தியினுயிரைக் குடிக்கப் பாய்ந்து வந்த வெள்ளையனின் துப்பாக்கிக்குண்டைத் தனது மார்பிலே ஏந்திக் கொண்ட வள்ளியம்மையை நினைத்துப்பார். இந்த வீரத் தமிழ்ப் பெண்களின் நினைவு-காலா காலமெல்லாம் வீரத்தையே வளர்த்து வந்த தமிழ்ப் பெண்கள் வழியிலே வந்தவளான உன்னிடம் உறங்கிக் கிடக்கும் வீர உணர்ச்சியைத் தட்டியெழுப்பவில்லையா? வீரத்தின் விளை நிலம் தமிழ்ப் பெண்கள் என்று கூறுவார்களே கற்ற அறிஞர்கள்? அந்த வீரத்தின் விளை நிலம் கோழைத்தனத்தின் பிறப்பிடமாக மாறலாமா? ஆக்கும் சக்தி அழிக்கும் சக்தியாக மாறலாமா?

(11-ம் பக்கம் பார்க்க)


**வேல் தைலம்**
**மிகச் சிறந்த சஞ்சீவி**

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள் கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**

34, செட்டியார் தெரு,

கொழும்பு-11.


## கவிதைப் பூங்கா

# வெற்றி நமதே!

—"வன்னியூர்க் கவிராயர்"—

உன்மொழியைத் தானழித்து உன்பிரதே சம்பறித்து
உன்னினத்தை முற்றும் ஒழித்திடவே—கன்னெஞ்சர்
சட்டமென்று போட்டசதித் திட்டமமு லாவதற்கு
விட்டாற்பின் நீயெங்கே விள்!

தெற்கிலொரு பேச்சு,வடக் கில்வேறு சொற்பொழிவும்
நற்றமிழ்இங்க் லீஷ்சிங்க ளப்பேப்ப—ரிற்றிரித்தும்
வெவ்வேறாய்ச் செய்திதந்த வீணர்களை நம்பிமண்ணைக்
கவ்வாமல் வாழவழி காண்!

எல்லாப் பிரச்சினைக்கும் என்றும் எவர்கட்கும்
வல்லவர்க்கப் போராட்டத் திற்தீர்ப்புச்-சொல்வோரும்
ஏற்றிடுஞர் சிங்களத்தை; ஏனோ? இனப்பக்தி
சாற்றுன்னினப் பக்தி தவறு?

ஈர்மொழிகள் பேசும் இரண்டினங்கள் வாழுகின்ற
ஓர்நாட்டிற் துப்பாக்கி யாலுறுத்தி—ஓர்மொழியை
ஆட்சிமொழி யாக அமுலாக்க விட்டுவிட்டால்
வீட்சியுற்றுப் போகாயோ விள்?

அன்னைமொழி, ஆட்சி அழியாத நம்மொழியை
என்னசெய்யுஞ் சிங்களமென் றேமாந்தால்—
நின்சிறுவர்
சிங்களம்மட் டும்படிப்பார் செந்தமிழுக் கப்போது
இங்கெங்கே சொல்லு இடம்?

தேர்தல்களி லேதமிழர் தீர்ப்புக்கூ றக்கூற
ஓர்மொழியிங் கொற்றுமையுண் டாக்கு மென்றால்
—யார்நம்பி
வாளாவிருந்தினத்தின் வாழ்வளிப்பர்? சிந்தித்து
வாழவழி தானமைத்து வாழ்!

'செல்வர்'வழி யாற்தமிழர் சிரடையா ரென்றுமட்டும்
சொல்வோ ருரிமைபெற வென்னவழி-சொல்கின்றார்?
ஒன்றுமிலை யன்னோர் உளறல்விடு; 'செல்வர்'வழி
சென்றுரிமை காக்கவழி செய்!

ஈழத்துக் காந்திவழி இந்நாட்டி லெல்லோரும்
வாழச் சிறந்தவழி யவ்வழியில்—தோழவுடன்
சொந்த நலன்துறந்து தொண்டாற்று வெற்றிகிட்டி
செந்தமிழர் வாழ்வர் திடம்!

வெற்றிமே தேதோழ விண்ஐயம் விட்டொழித்துச்
சற்றுந் தயங்கா திணைப்பாட்சி—பெற்றிடவே
சொந்த நலன்துறந்து தொண்டாற்று வெற்றிகிட்டி
செந்தமிழர் வாழ்வர் திடம்!

எம்மை அழிக்க எழுந்தகொடுஞ் சட்டங்கள்
தம்மை எதிர்ப்போம்; தரணிமுற்றும்-நம்மெதிர்ப்பை
கண்டிடட்டும்; ஆராய்ந்து காலம் தகுந்தபதில்
விண்டிடட்டும் இங்குண்மை வெல்க!

# உயிர் கொடுப்போம் வாரீர்

—நாவலூர்க்கேசரி—

செந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த செல்வமைந்தர்,
சீர்கெட்டு இவ்வுலகில் வாழ்வதென்றால்
விந்தையிது, பொறுக்கொணுத் துயரமய்யோ
வீறுகொண்டு எழுந்திடுவோம் வீரம்காட்ட
சிந்தையிலே செந்தேனும் தமிழையூற்றி
திக்கெல்லாம் தமிழ்மணக்கச் செய்வோம் வாரீர்
நொந்திருக்கும் உள்ளமதை உறுதியாக்கி
நொடிப்பொழுதில் புறப்படுவோம் விரைந்து வாரீர்.

எண்ணமதில் தமிழ்வீரம் தழைத்திருக்க
எடுத்திடுவோம் அகிம்சை எனும் ஆயுதத்தை
உண்ண ஒரு பிடிச்சோறு எடுத்தபோதும்
உள்ளமதில் சுதந்திரந்தான் வேண்டுமன்றே
திண்ணமிது, எம்கையில் வெற்றியுண்டு
செயல்தனிலே காட்டிடுவோம் வீரந்தன்னை
கண்ணிமைபோல் காத்திடுவோம் தமிழ் மொழியை
கன்னித்தமிழ் வீரர்களே! எழுந்து வாரீர்!

ஈழநாட்டில் சுதந்திரந்தான் நிலைப்பதற்கு,
எம்மினத்தார் உயிர்தனையும் மதிக்கவில்லை
வாழவழி காட்டிவிட்டோம் வாழ்கின்றார்கள்,
வாழ்விழந்து, செயலிழந்து, அலைகிறோம்நாம்
தோழமுடன் பழகிவந்தோம் துன்பம்மிச்சம்
தூயநம் உரிமைதனைப் பறித்துக்கொண்டார்
கோழைகளாய் வாழாமல் குருதிசிந்தி
குலத்திற்கு உயிர்கொடுப்போம் வாரீர் வாரீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆ. செல்லையா,
தெரணியகலை

கே: எதற்கெடுத்தாலும் அனுவசியமாகச் சிங்கள வார்த்தைகளை அள்ளிப்போட்டுச் சம்பாஷணை செய்யும் உள்ளூர்ச் சிங்களத் துரைக் குஞ்சுகளை என்னவென்று அழைக்கலாம்?

ப: சிங்களவர் சிங்களத்தில் பேசுகிறுர்கள், அதில் தவறில்லை. ஆனுல் சில தமிழர்கள் சிங்களத்தில் பேசிக்கொள்கிறுர்களே, அதற்கு என்ன சொல்லுகிறீர்!

ஃ

மு. யோகராசா,
யாழ்ப்பாணம்

கே: எதற்கெடுத்தாலும் பொருளாதாரத்தை இழுக்கும் 'பிரபல கதைத்திருட்டு' எழுத்தாளர்களான மு......போக்காளர்கள் அழுகிய முட்டையையும் பயன்படுத்துவது பொருளாதார அக்கறையினுலோ?

ப: ஆம். நல்ல முட்டையை வீசினுல் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்கப்படுமே!

ஃ

இ. தயாநிதி,
ஆனைக்கோட்டை

கே: என் நண்பர் ஒருவர் சிங்களம் படிக்கப்போகிறுராம். அவரை என்ன செய்யலாம்?

ப: படிக்கத் தொடங்கியதும், அவரைப் பகிஷ்கரியுங்கள். நிறுத்திவிடுவார்.

ஃ

ஆர். கணபதி, கேகாலை

கே: தமிழ் மக்கள் உரிமை காக்கச் சாத்விகப் போராட்டம் நடத்த ஆரம்பிக்கிறுர்களே, அது வெற்றிபெறும் என்பது எனது கருத்து. உங்கள் கருத்து?

ப: சத்தியாக்கிரகம் என்றுமே தோல்வியடையாது என்கிறுர் மகாத்மா. அதுவே என் கருத்து.

ஃ

காதலில் கட்டுண்ட பெண்,
காரைநகர்

கே: நான் ஒருவரைக் காதலிக்கிறேன். அவரும் என்னைக் காதலிக்கிறுர். நான் ஒவ்வொரு நாளும் அவர் இருக்குமிடம் வழியாகப் போய்வருகிறேன். ஆனுல் நான் அவரைப் பார்ப்பதற்கும் அவர் என்னைப் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை. இதற்கு ஓர் உபாயம் கூறும்?

ப: இங்கிருந்து உபாயமொன்றை வகுத்துக் கொடுக்க நீங்கள் கொடுத்துள்ள விபரம் போதாது. இடம், சந்தர்ப்பம், சூழ்நிலை ஆகியவைகளுக்கேற்ப ஓர் உபாயத்தை வகுத்துக் கொள்ள அங்கே உங்கள் நண்பிகளின் உதவியை நாடுங்கள்!

ஃ

தி. ஜ. வ. இரத்தினம்,
காண்டையடி

கே: தமிழரசுக் கட்சியிடம் ஏதேனும் பொருளாதாரத் திட்டங்களுண்டா?

ப: உண்டு, உண்டு! தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெற்றதும் இத் திட்டங்கள் அமுலுக்கு வரும்.

ஃ

ச. செபரெட்ணம்,
பெரியகல்லாறு

கே: தமிழை நன்ருகப் பேசவும், எழுதவும் தெரியாதவர்கள் இலக்கியம் படைத்தல்; தமிழ் மக்கள் நஞ்சென வெறுக்கும் சிங்களம் மட்டும் சட்டத்தைச் சம அந்தஸ்தைக் கைவிட்டு ஆதரித்தல்; கூழ் முட்டைகளையும், கதிரைகளையும் வீசிக் கூட்டம் கலைத்தல்; ஆசானையும் தெய்வத்தையும் நிந்தித்தல்; தீண்டாமையைப் பேணிப் பாதுகாத்தல்; இவையெல்லாம் என்ன?

ப: அவைதான் கொம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரையில் 'பாட்டாளிகளின் புரட்சி'க்கு அவசியமான அம்சங்கள்!

ஃ

நுணாவைச் செல்வம்,
மாதகல்-மேற்கு

கே: யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சியை எதிர்த்துக் கேட்பவர்களுக்கு அரசாங்கம் சலுகைகள் வழங்குமா?

ப: மறைமுகச் சலுகைகள் வழங்க இப்பொழுதே தொடங்கிவிட்டார்களாம்.

ஃ

விஜயலட்சுமி, வேலணை

கே: தனது தாரத்திற்கா, தனது தங்கைக்கா ஒரு மணமான ஆண் முதலிடம் அளிக்க வேண்டும்?

ப: சில விடயங்களில் தாரத்துக்கும் மற்றும் சில விடயங்களில் தங்கைக்கும் முதலிடம் அளிக்கலாம்.

ஃ

தாமரைநாதன்,
மாத்தளை

கே: இங்குள்ள கவிஞர் ஒருவர் பெண்களைக் கீழ்த்தனமான நிலையிலே வைத்துக் கவிதைகளைத் திட்டுகின்ருரே! தாய்க்குலத்தை நிந்திக்கலாமா?

ப: "யதார்த்த" இலக்கியம் படைக்கிருராக்கும்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் விஞக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ஃ

த. பே. ம. லட்சுமிதேவி,
காரை நகர்

கே: ரஷ்ய-சீனப் பிளவு இலங்கைக் கம்யூனிசத் தோழர்களின் பிளவுக்கு வழி கோலிவிட்டதாமே?

ப: "பிளவு"தானே கம்யூனிஸ்டுக் கட்சிகளை உடன் பிறந்து கொல்லும் வியாதி!

ஃ

"தமிழரசு அபிமானி",
இராமநாதபுரம்.

கே: என்னுடைய பெயரில் இங்குள்ள சிலர் தங்களுக்கு விஞ அனுப்புவதைக் கண்டுபிடித்துள்ளேன்.

ப. நீரும் வேருெரு பெயருக்குள்தானே ஒளிந்து கொண்டிருக்கிறீர்?

ஃ

எஸ். சிவசாமி, தெனியாய

கே: வெறுப்பை வெறுப்பால் ஒழிக்க முடியுமா?

ப: ஒழிக்க முடியாது. வளர்க்க முடியும், அன்பை அன்பால் வளர்ப்பதைப் போல.

ஃ

சுதந்திரதீபன், ஏழாலை தெற்கு.

கே: இராமநாதன் கல்லூரி பொன் விழாவில் திரு. நடேசபிள்ளை அவர்கள் தமிழரின் எதிர் காலம், இனிப் பிறக்கும் குழந்தைகளின் கையில் தான் இருக்கிற தென்று பேசி இருக்கிருர். இதன் அர்த்தம் என்ன?

ப: கர்ப்பத் தடைத் திட்டத்தை முதலில் தமிழ் மக்களிடமே அமுல் நடத்த வேண்டுமென்கிறது அரசாங்கக் கட்சிப் பத்திரிகையான "சிங்களே". இதைப்பார்த்த பிறகுதான் பிள்ளைவாள் அப்படிக் கூறியருப்பாரோ?

கே: [illegible] பெற்ற செனட் சபைத் தேர்தலில் அரசாங்கத்தினுல் நியமிக்கப்பட்ட முன்னுள் காலி மேயர் விஜயகுலசூரியாவின் தோல்வியும் அவர்களினுல் நிராகரிக்கப்பட்டு எதிர்க் கட்சியின் ஆதரவுடன் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டவரான திரு. திசநாயக்காவின் வெற்றியும் எதைக் காட்டுகிறது?

ப: அரசாங்கக் கட்சியிலுள்ள மூன்று கோஷ்டிகளும் மோதிக் கொள்ளத் தொடங்கிவிட்டன என்பதை அம்பலப்படுத்தியது செனட் தேர்தல்.

ஃ

யாழ்—வேல்வேந்தன்,
மவுண்ட்லெவனியா.

கே: தி. மு. கழகத்தின் வளர்ச்சி கண்டு கிலி கொண்ட காங்கிரஸ் ஆட்சி பிரிவினை தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. சட்டத்தை மட்டம் தட்டி கழகத்தை கல்லறைக்கு அனுப்ப அறிஞர் அண்ணு விரும்பவில்லை. அதன் காரணமாக ஜனநாயக முறைப்படி, பிரிவினை கோரும் திராவிட நாட்டுத் திட்டத்தை அண்ணு கைவிட்டுவிட்டார். இது எப்படித் தவருகும்? கேலி புரியும் புரியாத முட்டாள்களுக்கு தங்கள் விளக்கம் என்ன?

ப: தி. மு. க. தலைமையின் உபாயம் காங்கிரஸ் தலைமையின் உபாயத்தைச் சிதறடித்துவிட்டது. தி. மு. க. ஒழிந்ததென மனப்பால் குடித்தவர்களுக்குப் பெரும் அதிர்ச்சி.

கே: தி. மு. க. விலிருந்து விலகிய கண்ணதாசன் சம்பத்திடம் சரணடைந்தாரே. சம்பத், பெரியாரிடம் போகப்போகிறுரே, கண்ணதாசனின் அடுத்த பாய்ச்சல் இனி எங்கே?

ப: கூவம் ஆற்றில்.

ஆர். கருப்பையா, கண்டி.

கே: காமராஜரின் அரசியல் எதிரி, தேவர் குலச் சிங்கம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் காலமாகிவிட்டாராமே!

ப: ஆம், "நேத்தாஜி இன்னும் உயிருடன் இருக்கிறுர். இந்தியாவுக்கு வர தக்க தருணத்தை எதிர் பார்த்து கொண்டிருக்கிறுர்" என்று நமக்கு ஓயாது நம்பிக்கை ஊட்டிக் கொண்டிருந்த கடைசித் தலைவரும் மறைந்துவிட்டார். நேத்தாஜி மாண்டுவிட்டார் என்பதை ஒப்புக் கொள்வதைத் தவிர இனி நமக்கு வேறு வழி கிடையாது.

ஃ

ந. அரசு, பதுளை.

கே: தமிழ்வாணன் என்பவர் தனது பத்திரிகையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் ஆங்கிலம், இந்தி, ஆகிய இரண்டு மொழிகளைத் தவிர வேறு எந்த மொழிக்கும் இந்தியாவின் ஆட்சி மொழியாகும் யோக்கியதை கிடையாது எனக் கூறியிருக்கிருரே?

ப: தவறு. இந்திக்கும் அந்த யோக்கியதை கிடையாதே!

ஃ

செ. ஜெயபாலசிங்கம், வேலணை.

கே: மலையக மக்கள் போராட்டம் நடத்தாமல் உரிமைகள் கிடைக்குமா?

ப: சாத்தியமில்லை என்பது கடந்த 15 வருட அனுபவமாகும்.

ஃ

கு. தியாகு, தெரணியாகலை.

கே: தமிழ் வாணனைப் பற்றி ஒரு வார்த்தை...?

ப: தமிழ் மக்களிடம் பொதுவாகக் காணப்படும் "வீர வணக்க" உணர்ச்சியைப்பயன்படுத்தித் தானும் ஒரு வீரராக முயற்சி செய்யும் ஒரு பத்திரிகை ஆசிரியர்.

# நெஞ்சம் நிமிர்ந்து விட்டேன்

—"கலையரசன்"—

நெஞ்சம் திறந்ததடா—எனக்கு
நேர்மை பிறந்ததடா
கொஞ்சும் எழிலுடைத்தாய் தந்த
கொள்கை மலர்ந்ததடா.
பஞ்சம் பசி சூழ்ந்த—உலகின்
பாடுகள் தீர்த்திடவே
நெஞ்சம் திறந்துவிட்டேன்—பதவி
நீக்கி நிமிர்ந்து விட்டேன்.

வாட்டம் ஒழிந்ததடா—அடிமை
வாழ்வு கசந்ததடா
நாட்டம் பிறந்ததடா—என்றன்
நாட்டு வளர்ச்சியிலே
ஏட்டைக் கிளறி வந்த—கரங்கள்
ஏரைத் தழுவியதால்
நாட்டின் துயர்துடைக்கும்—அந்த
நாளும் பிறந்ததடா.

கந்தலுடை வரிந்து—நம்
கழனியிலே உழுது
வந்த சிறுகூழைப்—பகிர்ந்து
வயிறு கழுவிடினும்
சொந்தமொழி விற்றே—அதனுல்
சேர்த்த பெருவாழ்வும்
தந்த பெருவிருந்தில்—நாம்
பெறும் சுகம் மேலாமோ!

வாடகைக்கு—கிளிநொச்சியில்

நான்கு புதிய கடைகளும், மேல்வீட்டறைகளும், மோட்டார்கள் ராக்ரர்கள் திருத்தும் கருச் போடக்கூடிய நிலமும், கிளிநொச்சி ரவுண் மத்தியில் கண்டி ரோட்டில், டிசெம்பர் 1-ம் திகதி தொடக்கம் வாடகைக்கு இருக்கின்றன.

16, பவுண்டின் கவுஸ் லேன், மருதானை கொழும்பு-10.
16, Fountain House Lane, Maradana Colombo-10.




சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட
ரோஸ் பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்
இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வரங்கும்பொழுது
'ரோஸ்' பிராண்ட்
என்றே கேட்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இல்லாத புதுவகைச் சட்டம்

## நிதி மசோதா

—டாக்டர். நாகநாதன்

# தமிழ் பேசும் மக்கள் நாட்டின் வேண்டாத பிரஜைகளா?

—சிவசிதம்பரம்

## பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள்

நிதி மசோதாவின் 58-வது விதிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளும் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரமும் செவ்வாய்க்கிழமையன்று சனப்பிரதிநிதிகள் சபையில் உரை நிகழ்ந்துகையில் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். நிதி மசோதா, சபையில் கமிட்டி நிலையில் பரிசிலனை செய்யப்படும் பொழுது, 'இம்மசோதாவின் 58-வது பிரிவு தமிழ் பேசும் மக்களை இலங்கையின் வேண்டாத பிரஜைகளாக்க முயற்சிக்கிறது' என்று திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார். 'இந்தச் சட்டம் ஒரு ஏமாற்றுச் சட்டம்' என்று நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் இ.. மு. வி. நாகநாதன் குறிப்பிட்டார். திரு. சிவசிதம்பரம், டாக்டர் நாகநாதன் ஆகியோரின் உரைச் சுருக்கம் வருமாறு:

திரு. சிவசிதம்பரம் — உடுப்பிட்டி.

இந்தச் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளைப் பரிசிலனை செய்து பார்த்தால், அது அன்னிய நிறுவனங்களுக்கெதிராக இயங்குவதாகத் தெரியவில்லை. இலங்கையருக்கெதிராகவே இச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

சொத்து மாற்றுதல் இந்நாட்டில் நிகழும் பொழுது, சொத்து வாங்குவோர் தமது பிரஜாவுரிமையை நிலைநாட்ட, தமது சொந்தப் பிறப்புப் பத்திரத்தை விட, தந்தையர், பேரன்மாரின் பிறப்புப் பத்திரங்களையும் காட்டி நிரூபிக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது, அநியாயமாகும்.

இன்று இலங்கையில் சொத்து அல்லது நிலம் வாங்குபவர்கள் அன்னியரல்ல. அவர்கள் பெரும்பாலும் தமக்குரியனவற்றை விற்றுவிட்டு வெளியேறுகின்றனர். வாங்குபவர் இலங்கையரே. ஆகவே, இச் சட்டம் இலங்கையரையே பாதிக்கிறது. அவர்களுக்கெதிராகவே இயங்குகிறது. அதாவது— 'நாடற்றவர்', இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள் உட்பட்ட—இலங்கையர் எல்லோருக்கும் எதிராக.

ஒருவர் தனது பிறப்புப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் பொழுது, அதே அங்கீகரிக்கப்படாமல் விடப்படும் பட்சத்தில், அதில் காணப்படும் விபரங்கள் உண்மை என்று



டாக்டர் இ மு. வி. நாகநாதன்

நிரூபிக்க நாம் வேறெங்கு தான் செல்ல முடியும்? இது மிகவும் நியாயமற்றதாகும்.

நிதிச் சட்டத்தின் 31-வது பிரிவின் 58-வது விதியான இந்தப் பிறப்புரிமையை நிலை நாட்டக் கோரும் விதி, உண்மையிலேயே நீதிக்கு முரண்பட்டதாகும். இதன் பிரகாரம், இங்கேயே பிறந்து, வளர்ந்த எங்களிலும் பார்க்க, அரசாங்கத்தின் மூலம் தம்மைப் பதிவு செய்து கொண்ட பதிவுப் பிரஜைகள் மேலான வசதிகள் பெறுகின்றனர் என்று கூறலாம். அவர்கள் பதிவுப் பத்திரத்தைக் காட்டினால் போதும். ஆனால், நாங்களோ, எமது அப்பன், பாட்டன், பூட்டன் ஆகியோர் எல்லோரும் இலங்கையிலேயே பிறந்தனர் என்பதை அத்தாட்சிப்படுத்தச் சாட்சியங்கள் தேடித்திரிய வேண்டி இருக்கிறது

நிதி மந்திரி, நாங்கள் எல்லோரும் இலங்கையில் வேண்டப்படாத பிரஜைகள் என்றால் வாய்திறந்து அப்படியே சொல்லட்டும். தமிழரும், முஸ்லிம்களும் இந்நாட்டின் வேண்டாத பிரஜைகள் என்று சொல்லட்டும். அதை விட்டு விட்டு, இந்த மாதிரி மறைமுகமாக விதிகளைச் சட்டத்தினுள் புகுத்தி, எம் எல்லோரையும் இந் நாட்டுப் பிரஜாவுரிமையிலிருந்து நீக்க முயற்சிக்க வேண்டாம்.

டாக்டர் நாகநாதன்: இந்தச் சட்ட விதியின் முழு அர்த்தமும் இந்தச் சபையில் உள்ள சில அங்கத்தவர்களுக்கு விளங்கியுள்ளதாகத் தெரியவில்லை

இந்தச் சட்டத்தின் படி, ஒருவர் 1948-ம் ஆண்டு ஒக்டோபர் முதல் திகதியில், தமது பிறப்புரிமையை நிலை நாட்ட முடிந்தால், அவரே இந் நாட்டின் பிரஜையாகத் தகுதி வாய்ந்தவர். அந்தத் திகதியில் நீர் ஓர் இலங்கைப் பிரஜை என்பதை உம்மால் நிரூபிக்க முடியாவிடில், உமது குழந்தைகள், பேரக் குழந்தைகள் இங்கு பிறந்து, வளர்ந்து, வேலை செய்த போதும் கூட, நீர் பிரஜையாக மாட்டீர்.

உமது பிரஜாவுரிமையை நிலை நாட்ட என்ன தேவைகள் கோரப்பட்டுள்ளன? காகிதத்தில் பார்த்தால், மிகவும் சாதாரண விஷயமாகத் தெரியலாம். ஆனால், உலகச் சரித்திரத்தில் எந்த நாட்டிலும் இந்த வகையான சட்டம் இருந்ததில்லை.

நீர் 1948க்கு முன்னர் பிறந்திருந்தால், உமது பிறப்புப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கச் சொல்லிக் கேட்கிறது இச் சட்டம். நீர் வெளிநாட்டில் பிறந்திருந்தால், 1948க்கு முன்னர் உமது தந்தை இங்கு பிறந்தார் என்பதை நிரூபிக்க அவரது பிறப்புப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். அத்துடன், உமது தாய் உமது தந்தையைத்தான் திருமணம் செய்துகொண்டார் என்பதை நிரூபிக்க; உமது தாயின் திருமணப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். உமது தந்தை வெளிநாட்டில் பிறந்திருப்பின், உமது பேரனும், பூட்டனும், இலங்கையிலே பிறந்தவர்கள் என்பதை நிரூபிக்கும் அவர்களது பிறப்புப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவர்களுடைய திருமணப் பத்திரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்தச் சட்டம் ஓர் ஏமாற்றுச் சட்டம் என்று நான் கூறுகிறேன், ஏனெனில் இத்தகைய பத்திரங்கள் இலங்கையில் கிடையவே கிடையா.

### பிறப்பு பத்திரத்தையும் நம்பக் கூடாதாம்

"பிறப்புப் பத்திரங்களில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களைக் கூட நம்பக் கூடாது என்று கௌரவ நிதி மந்திரி, இலாகா அதிபர்கள் அனைவருக்கும் ஓர் சுற்றுநிருபம் அனுபபி ...வத்துள்ளார் என்பதைப் பத்திரிகைகள் வாயிலாக அறிய வருகிறேன். ஐயா, எங்கள் நீதிமன்றங்களில், பிறப்புப் பத்திரத்தையும் அதில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தையுமே, ஒருவருடைய பிறப்புக்குச் சிறந்த அத்தாட்சி என ஏற்றுக் கொள்கிறோம். இன்றோ, பிறப்புப் பத்திரங்களிலுள்ள விபரங்களைக் கூட அப்படியே நம்பிவிட வேண்டாம் என்று கௌரவ நிதி மந்திரி சுற்றுநிருபம் அனுப்பியுள்ளார். பிறப்புப் பத்திரங்களில்காணப்பெறும் விபரங்களையே நம்பாவிடில், எப்படி நாம் எமது பிரஜாவுரிமையை நிலைநாட்டப் போகிறோம் என்று கௌரவ நிதி மந்திரி அவர்களை நான் கேட்க விரும்புகிறேன்."

— திரு. மு. சிவசிதம்பரம், (உடுப்பிட்டி).

"எனக்கு அப்படியொரு சுற்றுநிருபம் அனுப்பியதாக ஞாபகமில்லை."

—அமைச்சர் இலங்கரத்ன.


## ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்.

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூபா 3-00**

**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு


# நிலம் வாங்கிக் கமம் செய்யும் உரிமை தமிழினத்திற்கு இல்லையா?

# நிதி மசோதா விவாதத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி உரை

செவ்வாய்க்கிழமை சனப்பிரதிநிதிகள் சபையில் நிதி மசோதா விவாதம் கமிட்டி நிலையில் வாதிக்கப்பட்ட பொழுது இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் காணி, சொத்து மாற்றம் செய்யும் சரத்துக்கள் அடக்கிய 58-வது பகுதிக்குப் பலத்த ஆட்சேபனை கிளப்பினர். 58-வது சரத்துச் சிங்களவரல்லாதாருக்கு எத்தகைய தீங்கை விளைவிக்கும் என்றும், பிரஜாவுரிமையை நிலைநாட்டும் பொறுப்பு சிறுபான்மையோர் மீது துவேஷ மனப்பான்மை காட்டும் ஒருவரிடம் கொடுத்திருப்பது ஆபத்தானது என்றும், அரசாங்க சேவையில்தான் தமிழ் பேசும் மக்களுக்கு இடமில்லையென்றால் ஒரு நிலத்தை வாங்கி, அதில் கமம் செய்யலாமென்றால் அதற்குக் கூட இந் நாட்டில் இடமில்லாதபடி இச்சட்டம் வழிவகுக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

இச்சட்டத்தின் கீழ் இந் நாட்டில் பிரஜைகள் யார் என்பதற்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியினால் இலங்கைப் பிரஜை என்று யார் ஏற்றுக் கொள்ளப்படுகிறாரோ அவர்தான் இலங்கைப் பிரஜையாகக் கணிக்கப்படுவர் என்று இம்மசோதாவிற் கூறப்பட்டிருக்கின்றது. இன்று பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக இருப்பவருடைய குணதிசயங்களை நான் இங்கு கூற வேண்டியதில்லை. அது நாடறிந்த விஷயம். இந்நாட்டு பௌத்த சிங்கள மக்களுக்கு மாத்திரந்தான் இந்நாட்டுப் பிரஜாவுரிமையுண்டென்ற கருத்துடையவர் திருவாளர் என்.கியூ. டயஸ். இத்தகைய ஒருவரை நிரந்தரக் காரியதரிசியாக அமர்த்தி அவருடைய கையிலே இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுட்பட, மக்கள் அனைவருடையதும் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பைக் கொடுப்பதென்றால் எப்படியிருக்கும்? எப்படியென்று இந்தச் சபைக்கு விளக்கிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### தனி நபர் கையில் அதிகாரம்

1948ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரஜா உரிமைச் சட்டத்தின்படி ஒருவர் தாம் இலங்கைப் பிரஜை என்பதை நிரூபிக்க வேண்டுமானால் 1948ம் ஆண்டுக்கு முன் தாம் இங்கு பிறந்திருந்தால் அவருடைய பிறப்பையும் 1948ம் ஆண்டுக்குப் பின் பிறந்திருந்தால் தம்முடைய தந்தையும் தந்தையுடைய தந்தையும் இங்கு பிறந்தனர் என்பதையும் ருசுப்படுத்த வேண்டும். பல



திரு. அ. அமிர்தலிங்கம்

சந்தர்ப்பங்களிலே நாங்கள் எடுத்துக் கூறியதைப்போல இந்நாட்டிலே பெரும்பாலான மக்களாக வாழ்பவர்கள் இச் சட்டத்தினால் பாதிக்கப்படாத வகையிலே இச்சட்டத்தில் ஒரு விதி வைத்திருக்கிறார்கள். அது என்னவென்றால் நிரந்தரக் காரியதரிசி இந்நாட்டின் பரம்பரை பரம்பரையான இலங்கைப் பிரஜை என எவரைக் கருதுகிறாரோ, அவர் இவ்விதமாக நிரூபிக்க வேண்டியதில்லை.

### தமிழரசுத் தந்தை சந்தேகப் பிரஜையா?

இந்தச் சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளுக்கு முன்பு எமது கட்சித் தலைவர் கனம்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ந்து வரும் தொழிலாளர் கழகமே

## மலையக மக்களுக்கு வாழ்வளிக்கும்

— வீ. தருமலிங்கம், கொட்டக்கலை —

உழைப்பையே இலட்சியமாகக் கொண்டு, இந்நாட்டின் உயர்வுக்காக உழைத்துவரும் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர் பல்லாண்டு காலங்களாக இங்கேயே வாழ்ந்துவிட்டனர். இவர்களின் அரசியல், சமூக உரிமைகள் பற்றிய திட்டவட்டமான கொள்கைகளை இதுவரை, இவர்கள் அங்கம் வகித்து வரும், எந்த அரசியல் கட்சிகளோ தொழிற் சங்கங்களோ அவர்களுக்குச் சரியான முறையில் உணர்த்தவில்லை.

குடியுரிமை பறிபோய், வாக்குரிமை பறிபோய், மொழியுரிமையும் பறிபோகக்கூடிய சூழ்நிலை இந்நாட்டில் உருவாகி வருகிறது. தொழில் உரிமையும், கல்வியுரிமையும், பறிக்கப்பட்டே வருகின்றன.

இக்கொடுமைகளை எதிர்த்து நிற்கும் சக்தியற்ற சங்கங்கள் எத்தனையோ இருந்து கொண்டு, 'நாடற்றவர், நாடற்றவர்' என்று தம்மையே இழிவாகக் கூறிக் கொண்டு சமாதானம் கூறித் திரிகின்றன. 'நாடற்றவர்' என்ற அவமானப் பட்டத்தைச் சூட்டி அரசோச்சுவோர் அகமகிழ்வதைக் கண்கொண்டு பார்த்துவிட்டு கட்சி, கட்சியென்று கத்தித் தீர்க்கின்றனர்.

### உரிமை பெற்றுத் தந்தனரா?

கடந்த காலங்களில் இந்த பத்து இலட்சப் பாட்டாளிகளுக்காகப் பரிந்து பாராளுமன்றத்திலே போராடி வந்தது இலங்கைத் தமிழரசுக் கட்சியே தவிர வேறெந்தக் கட்சி என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன்? அன்றும், இன்றும் இனி என்றும் போராட இருப்பது இத் தமிழரசுக் கட்சி ஒன்று தான் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

### அலுவலக முகவரி மாற்றம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் இரத்தினபுரி மாவட்டக் கிளையின் அலுவலகம் இம் மாதம் முதல் கீழ்க்காணும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் கழகம்
7/1. இன்னர் சேர்க்குலர் வீதி,
இரத்தினபுரி.

கடந்த ஆண்டுகளிலே தொழிலாளர்களின் சந்தாப் பணத்தால் கட்சி வளர்த்தவர்கள் உருப்படியான ஒரு திட்டம் செய்து, உழைப்பாளர்களுக்கு உரிமைபெற்று தந்துள்ளனரா? இன்று உதவிக்கு அழைத்தாலுங்கூட, தங்கள் கட்சி ஒன்றினால் தான் இழந்த உரிமைகளைப் பெறமுடியுமென்று மகுடி ஊதுகின்றனர்.

இவர்களால்தான் நம் இனத்திற்கு இத்தனை இன்னல்களும் ஏற்பட்டன. இந்த நபர்களை நம்பி, தாழ்வு நிலை எய்த இனியாரும் தயாராக இருத்தல் கூடாது.

### தொழிலாளர் ஓர் இனம்

தொழிலாளர் அனைவரும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்தும், இவர்களையே பல பிரிவுகளாகப் பிரித்துத் தங்கள் வாழ்வை செம்மைப் படுத்திக் கொள்ளும் 'சேவை'யைத் தவிர இவர்கள் செய்த நன்மைகள் என்ன? இந்நாட்டின் பொருளாதாரத்தில் முக்காற் பகுதியைத் தேடிக் கொடுக்கும் நம்மை ஒன்று படுத்தி உயர்வு காண்பதை விடுத்து, ஒவ்வொரு பிரிவுகளாகப் பிரிப்பது உயர்வா?

நாம் இன்னும் கேள்விக் குறிகளாகவே இருக்கிறோம் ஆட்சியாளருக்கு. இதற்கு விடை கூறவேண்டும், வினை விதைத்தவர்கள் வினை அறுக்க வேண்டும்.

தினம் தினம் வளர்ந்து வரும் இலங்கைத் தொழிலாளர் கழகம், இன விடுதலைக்கு நல்ல பல திட்டங்களைக் கொண்டு செயலாற்றி வருகிறது. இதுதான் நமது கழகம். இனம், இனத்தோடு சேர்ந்தே இழந்த உரிமைகளை மீட்கும். இன்னொருவர் நமக்காக வரிந்து கட்டிக் கொண்டு வந்து உரிமைப் போர் நிகழ்த்துவார் என்பது எங்கும் நடக்காத காரியம்.

நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்தல் வேண்டும் இதற்கு நல்ல வழிகளைக் கூறும் நல்லவர்களோடு இணைந்து நலன் தேடுவது தான் நன்மை.

நாட்டின் எதிர்காலம் நம் கரங்களில் தான் இருக்கிறது. தொழிலாளர் உழைப்பு இன்றேல் தூங்கி விடும் இந்நாடு. அதிலும் தமிழ்த் தொழிலாளர் இன்றேல் தொலைந்துவிடும் அத்தனையும்.

தொண்டுள்ளம் கொண்ட இத் தொழிலாளர்களைத்

(12-ம் பக்கம் பார்க்க)

ஒரு ஆரோக்கிய குழந்தையும் ...குதூகலிக்கும் தாயும்



...நன்றி லக்டோஜனுக்கே

உலகப் புகழ்பெற்ற குழந்தைகளுக்கான முழு ஆடைப் பால் உணவான லக்டோஜனில் இப்பொழுது ஒன்பது மேலதிக விட்டமின்களும் இரும்புச் சத்தும் அடங்கியுள்ளது. பலம் ஊட்டப்பட்ட இந்த விட்டமின்களால் லக்டோஜன் மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கிறது— உங்கள் குழந்தை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதைக் கவனியுங்கள். தாய்ப் பால் இல்லாவிட்டால்......லக்டோஜனை நாடுங்கள். அது உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும்.

| | |
|---|---|
| விட்டமின் A | கல்சியம் பண்டோதினேட் |
| விட்டமின் B | விட்டமின் $B_{12}$ |
| விட்டமின் $B_2$ | விட்டமின் C |
| விட்டமின் PP | விட்டமின் D |
| விட்டமின் $B_6$ | இரும்பு |




நீங்கள் லக்டோஜனை நம்பலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்யூனிச மண்டலத்தில் பிளவு

## தலைமைப் பதவி ஏற்பதில் ‘தத்துவப் போராட்டம்’

காரல் மார்க்சின் கருத்துக்களுக்கு நெருக்கடியான சோதனைக் காலம் உருவாகியுள்ளது. மழுங்கிய நிலையில்—கனவாக இருந்த கொம்யூனிச லட்சியத்தை நனவாக்கிக் காட்ட வேண்டுமென்பதற்காக காரல் மார்க்சின் தத்துவங்கள் உருவாயின. ஆனால், இன்று அதே தத்துவங்கள் கொம்யூனிசம் உருவாகி வருவதற்கான சாத்தியக்கூறுகளுக்குக் குறுக்கே வழி மறித்து வேலி போட்டு நிற்பதும் உண்மையாகிவிட்டது.

### பிளெட்டோசியம்

கொம்யூனிசம் அல்லது பொதுவுடைமை என்பது பிளெட்டோசியத்தின் ஒரு அங்கமே தவிர, அது முழு மார்க்சிசமல்ல. பிளெட்டோவின் காலத்தில் உண்மை ஜனநாயகம் ஓரளவு நடைமுறையில் இருந்தது உண்மை. அந்த ஜனநாயகம் மக்களுக்குச் சம உரிமையை அளித்ததே அன்றி, சம வாய்ப்பையோ, சமத்துவத்தையோ கொடுக்கவில்லை. எனவேதான், மக்களுக்கு வாழ்வின் தேவைகளை உரிய சம அளவில் பெற்று, சம அளவில் சுகபோகங்களை அனுபவிக்க; எல்லா நிலையிலுள்ள மக்களுக்கும் வாய்ப்பளிக்கக் கூடிய புதியதோர் அரசியலை வகுக்க வேண்டுமென்று பிளெட்டோ முயன்றார்.

உற்பத்திச் சாதனங்களும் பொருள்களும் பொதுவுடைமையாக்கப் பட வேண்டும், சக்திக்கு ஏற்ற உழைப்பை நாட்டுக்குக் கொடுத்து மக்கள் தேவைகளைப் பெற வேண்டும் என்பது பிளெட்டோ கண்ட தத்துவம். அந்தத் தத்துவமே காலத்தாலும் கார்ல் மார்க்சாலும் கொம்யூனிசமாக உருப்பெற்றது.

### மார்க்சிசம்

எனவே “மார்க்சிசம் என்றால் என்ன? என்ற கேள்வி எழுகிறது.

பிளெட்டோவின் தத்துவம் தெளிவற்ற நிலையில், நடை முறைச் சாத்தியக் கூறுகள் எதையும் காட்டவில்லை. ஆனால் மார்க்ஸ் இவற்றிற்கு வழிமுறைகளைக் காட்டினார். ஆனால் வரையறை செய்யும் போது ‘இதுதான் மார்க்சிசம்’ என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. மார்க்சிசம் தத்துவமல்ல; கொம்யூனிசம் என்ற மையத்தைச் சுற்றிச் சூழ்ந்துள்ள பல்வேறு கருத்துக்களேயாகும்.

“தத்துவங்களால் உலகில் மாற்றங்கள் உருவாவதில்லை. உலகில் நிகழும் மாற்றங்களால்தான் தத்துவங்கள் உருவாகின்றன.

“எனவே, கொம்யூனிசம் சிறந்த தத்துவம் என்பதற்காக அல்ல; அரசியல் நெருக்கடிகளால், இயந்திர வளர்ச்சியின் போட்டா போட்டிகளால், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் புழுக்கத்தால், நெருக்கத்தால், தொழிலாளர்களின்விழிப்புணர்ச்சியால் கொம்யூனிசம் உருவாகும்.

“கொம்யூனிசம் ஒரு நாட்டில் உருவாகின்ற போது நடக்கும் புரட்சி அல்லது மாற்றம், ஜனநாயகப் புரட்சியாக இருக்க முடியாது.

**பூங்குன்றன்**

இரத்தம் சிந்த வேண்டிய வன்முறைப் புரட்சியாகவே இருக்கும்—இருக்க வேண்டும். இந்தப் புரட்சிகரமான இயக்கம் சர்வதேச ரீதியில்-உலகரீதியில் இயங்க வேண்டும். கொம்யூனிச ஆட்சி ஒரு ஜனநாயக ஆட்சியாக இருக்க முடியாது. பாட்டாளிகளின் அதாவது தொழிலாளரின் சர்வாதிகார ஆட்சியாகவே இருக்கும்.”

ஏறக்குறைய இவைதான் மார்க்சிசத்தின் மையக் கருத்துக்கள் என்று கூறிவிடலாம். இந்தக் கருத்துக்களை அகிலம் அனைத்தும் ஏற்றுக்கொள்ள முடியுமா?

### சுதந்திரம் வேண்டும்

உண்மைச் சமத்துவத்தைக் கொம்யூனிசம் மூலம் பெறலாம் என்று எண்ணுபவர்கள் கூட, கொம்யூனிச ஆட்சி கண்டு அஞ்சுகிறார்கள்—அந்தக் கொம்யூனிச சர்வாதிகாரத்தைக் கண்டு ‘சுதந்திரமாகப் பட்டினி கிடந்து சாவது மேல்’ என்று எண்ணுகிறார்கள்.

கொம்யூனிசத்தை உருவாக்க இரத்தப் புரட்சி ஒன்றே வழி என்பது இன்று நடை முறைச் சாத்தியமல்ல. இடைப்பட்ட காலத்தில் பெரும்பான்மை நாடுகளில் சர்வாதிகார ஆட்சி நடைபெற்று வந்தது. அந்தக் காலத்தில் இந்தத் தத்துவம் பொருத்தமாக அமையும். இன்றும் கூட சர்வாதிகார ஆட்சி நிலவும் நாடுகளுக்கு இது பொருந்தும். ஆனால் மக்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஜனநாயக நாட்டிற்கு இது பொருந்தாது. நடைமுறைச் சாத்தியமானதுமன்று. பெரும்பான்மை மக்களின் சம்மதமின்றி ஏற்படும் எத்தகைய அரசையும் சக்தியற்றதாகச் செயல் இழக்கச் செய்துவிடுவார்கள். மக்களின் புறக்

(13-ம் பக்கம் பார்க்க)

## எந்தச் செய்தியையும் முந்தித் தருவது ‘சுதந்திரன்’


நாள் (11—11—1962) ஞாயிற்றுக்கிழமை ஜ. ஆசிரி 12 | இதழ்

தில் ரகசிய பேச்சு

கொம்யூனிஸ்டு பிரமுகர்-சீன அதிகாரிகள் சம்பாஷணை

இந்திய கொம்யூனிஸ்டு கட்சி அனுப்பிய அந்தரங்க அறிக்

இலங்கை கொம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. என். சண்முகதாசன் அவர்கள சீனச் சார்புடையவர் ‘சுதந்திரன்’ தனது 11—11—62ம் திகதி இதழில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது. அப்பொழுது கொம்யூனிஸ்டுக் கட்சிப் பிரமுகர்கள் ‘சுதந்திரன்’ மீது வசை பாடினார்கள். அதே கொம்யூனிஸ்டுக் கட்சிப் பிரமுகர்கள் ‘சுதந்திரன்’ செய்தி வெளிவந்த மூன்று மாதங்களின் பின்னர் தான், அதாவது 23—1—63ல் சண்முகதாசன் சீனச் சார்புடையவரா என்று சந்தேகமுற்றார்கள். பின்னர் 14—10—63ம் திகதி தான் சண்முகதாசன் சீனச் சார்புடையவர் என்பதை நம்பினார்கள். அன்று ‘சுதந்திரன்’ செய்தி பொய்யானது என்று யார் யார் எல்லாம் ‘சுதந்திரன்’ மீது சாடினார்களோ இன்று அவர்களே நமது செய்தியை ஏற்று, செயலிலும் இறங்கியுள்ளார்கள். எனவே, எந்தச் செய்தியையும் முதலில் தருவது ‘சுதந்திரன்’. அது ‘சுதந்திர’னின் கடமையும் கூட.

**அரசாங்க**

# விரோத நடவடிக்கையில் தமிழரசுக் கட்சி தீவிரம்

## ஆளும் கட்சிப் பத்திரிகை குற்றச்சாட்டு

“வட இலங்கையில் தேசியக் கட்சியாகவும் வகுப்புவாதக் கட்சியாகவுமுள்ள தமிழர்களின் ஸ்தாபனமான இலங்கைத் தமிழரசுக் கட்சி இப்பொழுது இரகசியமாக இலங்கை அரசாங்கத்துக்கு விரோதமாக ஐக்கிய நாடுகள் சபைக்கு குறைபாடுகளை எடுத்துக் கூறத் தீவிரமாக முனைந்துள்ளதாகத் தெரிகிறது.”

இவ்வாறு ஆளும் கட்சியின் பத்திரிகையான “சிங்களே” (31-10-1963) கூறுகிறது.

“பெடரல் முடிச்சு” என்று 8 பந்தி தலைப்பிட்டு முதற் பக்கத்தில் இச் செய்தியைப் பிரசுரித்துள்ளது.

இச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:—

“சிங்கள நாட்டில் சிங்களவர்களுக்கெதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரியவர்கள் தற்போது ஐ. நா. சபைக்கும் புகார் செய்யத் தொடங்கிவிட்டனர்.

1948 பெப்ரவரி 4ந் திகதி சுதந்திரம் கிடைத்த பின்னர், அது வரை வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளரால் அடக்கப்பட்டிருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு உண்மையான உரிமைகளை வழங்குதல் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகிவிட்டது. எனவே அதற்கேற்ப நாடு உருவாக்கப்பட்டு வருகிறது: நாடு அடிமைப்பட்டிருந்த காலத்திலே விசேடச் சலுகைகளைப் பெற்று வாழ்ந்த சிறுபான்மையோரின் ஒரு பகுதியினரான தமிழர்கள் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் “ஐம்பதுக்கு—ஐம்பது” கோஷத்தைக் கிளப்பியது அனைவருக்கும் தெரியும். கடைசியில் பொன்னம்பலம் “ஐம்பதுக்கு—ஐம்பது” என்ற அநியாயக் கோரிக்கையைக் கைவிட்டு, நாட்டின் பெரும்பான்மை இனத்துக்கு எதிராகச் செல்லாது, மந்திரிப் பதவியையும் வகித்தார் என்பது எல்லோருக்கும் இன்னும் நினைவிலிருக்கும்.

இதற்கிடையே தமிழரசுக் கட்சியை நிறுவிக் கொண்ட திரு. எஸ். ஜே. வி. செல்வநாயத்தைத் தலைவராகக் கொண்ட தமிழர் கோஷ்டியொன்று இலங்கையை இரு

(13ம் பக்கம் பார்க்க)

### சிங்கள இதழ்களில்...

**மந்திர சக்தியை நிரூபிப்பதற்கு**

உங்களுக்கு நிறைவேறவேண்டிய காரணங்களை நிறைவேற்றித்தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது. உங்கள் காரணங்களை அறிவிக்கவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மந்திராச்சாரியார்.

**பி. எம். திசாநாயக்க,**

கம்பளை.

## சந்தியில்....

இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் ருஷ்ய—சீனக் கோஷ்டிச் சண்டை வலுப்பெற்று வருவதாக முதன் முதலில் செய்தியை வெளியிட்டது சுதந்திரன் தான். திரு. என். சண்முகதாசன் சீனக்குழுவுக்கு அனுசரணையாக இருந்து வருகிறார் என்பதனையும் சுதந்திரன் சுட்டிக் காட்டியது.

இந்திய — சீன எல்லைப் போர் உச்சக் கட்டத்தில் நடந்து கொண்டிருந்தபோது கடந்த 6-11-62ல் சீனத் தூதராலயத்தில் திரு. சண்முகதாசன் சீனத் தலைவர்களுடன் அந்தரங்க மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார், என்ற செய்தியை 11-11-62ல் சுதந்திரன் பிரசுரித்தபோது, கொம்யூனிஸ்ட் குஞ்சுகள் கச்சை கட்டிக் கொண்டு சுதந்திரனுடன் போர் தொடுத்தன. அவர்களின் வார ஏடு கன்னாபின்னா என்று திட்டியது.

இன்று ‘சுதந்திரன்’ கூற்று மெய்ப்பிக்கப்பட்டு விட்டது.

★

சீனாவின் கொள்கையை உலகமெல்லாம் பரவும்படி செய்யத்தக்க வகையில் இயங்கும் ஒரு சர்வதேச ஸ்தாபனம் இரகசியமாக இயங்கி வருகிறதாம். ஆங்காங்கேயுள்ள தொழிற் சங்கங்களை வசப்படுத்திக் கொள்ள எவ்வளவானாலும் பொருள் செலவிடத் தயங்கக்கூடாதென்று இந்த ஸ்தாபனம் சீனச் சார்புடைய தொழிற் சங்கத் தலைவர்களைக் கேட்டுள்ளதுடன் ஏராளமான பொருளும் அளித்து வருகிறதாம.

★

தொழிற் சங்கத் தலைவர்களுக்கு முன்பு அளித்து வந்ததை விட இருமடங்கு அதிகமான வேதனத்தை சீனா வழங்கி வருகிறதாம். கொம்யூனிஸத் தாய்ச் சங்கத்திலிருந்து பிளவு பட்டாலும், தலைவர்களுக்குப் பணமுடை ஏற்படாது பாதுகாப்பளிக்கவே இந்தத் தொகை கூட்டப்பட்டுள்ளதாம்.

★

இலங்கையிலும் ரஷ்ய சார்புடன் இயங்கும் சில தொழிற் சங்கத் தலைவர்கள், சீனா அளிக்கும் ‘கொழுத்த பணத்’துக்கு மயங்கி விழுந்து விடுகிறார்களாம். இதனால் திரு. பீட்டர் கெனமன் மிகுந்த கவலை அடைந்துள்ளாராம்.

★

திரு. சண்முகதாசனை அப்புறப்படுத்தியதற்கான நியாயங்களை எடுத்துக் கூற, விரிவான சுற்றுப் பிரயாணமொன்றை திரு. கெனமன் மேற்கொண்டுள்ளாராம்.

★

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த சிங்களத் தொழிலாளர்களை திரு. சண்முகதாசனின் வலையிலிருந்து மீட்க ‘வகுப்புவாத’ப் பூதத்தைக் கிளப்பவும் சில சிங்களக் கொம்யூனிஸ்டுகள் ஆரம்பித்துள்ளனராம்.

★

வெள்ளவத்தையில் உள்ள தமதுவீட்டின் முன் முற்றத்தில் ஒரு பெரிய புத்தரின் படத்தை மாட்டி தூப தீப நெய்வேத்தியம் செய்வதில் ஒரு தமிழ்க் காங்கிரஸ் சைவப் பிரமுகர் ஈடுபட்டுள்ளாராம். இந்தக் காலத்துக்கு ஏற்றபடி இப்படித்தான் நடக்க வேண்டுமென்று தமது நண்பர்களிடம் பிரசாரம் செய்தும் வருகிறாராம்.

—அம்மான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளவந்தாரின் நரித் தந்திரத்திற்கு மக்கள் பலி

## அரங்கம் 21

உள் நாட்டு யுத்தத்தின் காரணகர்த்தாக்களில் ஒருவரான மைக்கேல் கொளின்ஸ் உயிர் நீத்துவிட்டார். அவருக்கு அப்பொழுது வயது 32 தான். இன்னுமொருவரான ஆதர் கிரிபித்தும் சில நாட்களுக்கு முன்னர்தான் காலமாகிவிட்டார். அதனல் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதற்காகப் பாராளுமன்றம் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாகிவிட்டது.

எதிர்வரும் 9-9-1922-ல் கூடப்போகும் பாராளுமன்றம் ஆங்கிலேயரின் கட்டளைப்படி கூடும் தென் அயர் நாட்டின் பாராளுமன்றமே என்பது குடியரசுவாதிகளுக்

பட்டார். குடியரசுவாதிகள் எவரும் இல்லாது பாராளுமன்றம் தொடர்ந்து நடைபெற்றது.

ஏமன் டி வேலராவக்குப் பின் ஆதர் கிரிபித், தோள் அயரினின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமையால் அவர் குடியதிபதியாகவே மதிக்கப்பட்டார். ஆனல் புதிய யாப்புமுறையின்படி அயர்நாடு ஒரு குடியரசல்ல. அதனல் குடியதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படத் தேவையில்லை. ஆயினும் இடைக்கால அரசாங்கத்தின் அதிபராக இருந்த மைக்கேல் கொளின்ஸின்

கள் நூறு பேரைக் கைது செய்து, ஆயுதங்களைப் பறித்து எடுத்துக் கொண்டபின் விடுதலை செய்தனர். குறிப்பாகக் கூறுவதானல், தீவின் மேற்குப் பகுதியில் ஆட்சியினரின் படைகள் புறமுதுகு காட்டிய வண்ணமே இருந்தன.

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

ஆயினும் நாட்டில் நிலைமை திருப்திகரமாக இருக்கவில்லை. இந்த இக்கட்டான நிலைமை நெடுநாளைக்கு நீடிப்பதை டி வேலரா விரும்பவில்லை. அவர் ஒரு திட்டத்தை வரைந்து குடியரசு இராணுவத்தின் வாரியத்துக்கு அனுப்பி வைத்தார்:

"1. தனது தலைமையிலுள்ள குடியரசுக் கட்சி ஆட்சி பீடத்தை அமைக்க வேண்டும். அல்லாவிட்டால்,

2. அயர் குடியரசு இராணுவத்தில் வாரியம் ஆட்சிபீடத்தைக் கைப்பற்ற வேண்டும். அல்லாவிட்டால்,

3. குடியரசுக் கட்சியும் அயர் குடியரசு இராணுவமும் சேர்ந்து நாட்டினைப் பரிபாலிக்க வேண்டும்"

இந்தத் திட்டத்தை அயர் குடியரசு இராணுவம் ஆராய்ந்து வந்தது. இரண்டாவது வழியைக் கையாளுவதானல் தானும் குடியரசுக் கட்சியும் பொதுசன சேவையிலிருந்து விலகி வாழத்

தாகச் சத்தியம் செய்த பின்னரே சபையில் பிரசன்னமாயிருக்கலாம்; பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்தச் சட்டத்தையும் ஆங்கில மன்னர் தாம் விரும்பினல் நிராகரிக்க முடியும். இவ்வாறு அடிமைச் சாசன முறையில் யாக்கப்பட்ட யாப்புமுறையில் நல்லதோர் அம்சம்—சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் சர்வசன வாக்கெடுப்பு நடாத்துவதற்கு வழிவகை செய்தமை.

பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் நாட்டில் அரசாங்கத்தின் படைகள்

வேறியது. 15-10-1922க்கு முன்னதாகத் தமது ஆயுதங்களை ஆட்சியாளரிடம் ஒப்படைத்துவிடும் குடியரசு வாதிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்படும் எனவும் அந்த நாளுக்குப் பின் ஆயுதம் கொண்டு செல்லும் எந்தக் குடியரசுவாதியும் மரண தண்டனையை எதிர் நோக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்தப் புதிய சட்டத்தைக் காரணமாகக்கொண்டு கத்தோலிக்கத் திருச்சபை மீண்டும் ஆட்சியினருக்கு ஆலவட்டம் பிடிக்கத் தொடங்கியது. பாவமன்னிப்புக் கேட்டுவரும் அனைவரிடமும் அவர்களின் அரசியல் சார்பை மதகுருமார்

## மக்கள் சபையில் விதண்டாவாதம்

குத் தெரியவந்தது. அதனல் கூட்டத்திற்குக் குடியரசுவாதிகள் செல்வதில்லை என முடிவு செய்தனர். எனினும் அந்தப் பாராளுமன்றத்தைத் தாம் மதிப்பதில்லை என்று எடுத்துக்கூறுவதற்காகக் குடியரசுவாதியான லோறன்ஸ் கினல் என்பவரை மட்டும் அனுப்புவதெனவும் முடிவு செய்தனர். ஈஸ்டர் வாரப் புரட்சி நடைபெற்ற காலத்தில், பிரித்தானிய மக்கள் சபையில் றெட்மண்டின் தலைமையிலிருந்த அயர் கட்சி உறுப்பினராக இருந்தவர் கினல்; பின்னர் சின்பீன் இயக்கத்தில் சேர்ந்து உழைத்தவர். சிறந்த பாராளுமன்றவாதியாக இருந்த கினல் ஆஜந்திஞவில் அயர் குடியரசின் தூதுவராக இருந்தார்.

குறிப்பிட்ட தினத்தில் பாராளுமன்றமும் கூடியது. கொளின்ஸ் இடைக் கால அரசாங்கத்தின் அதிபராக இருந்தகாலத்தில், துணை அதிபராக இருந்த விலியம் கொஸ்கிரேவ் தலைமை வகித்தார். கினலும் பிரசன்னமாக இருந்தார். எல்லா உறுப்பினர்களும் வரவு இடாப்பில் கையொப்பமிடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். கூடியிருக்கும் பாராளுமன்றம் தென் அயர் நாட்டுப் பாராளுமன்றமா அல்லது தோள் அயரினு என்பதைத் தெளிவுபடுத்திய பின்பே தான் கையொப்பமிட முன்வர முடியுமென கினல் கூறினர். ஏதாவது கேள்வி கேட்பதானல் சபாநாயகர் தெரிவு செய்யப்பட்ட பின்னரே கேட்க முடியும் எனக் கொஸ்கிரேவ் அறிவித்தார். எனினும் கினல் ஆட்சேபித்த வண்ணமே நின்றார். கினலைப் பொருட்படுத்தாது மற்றப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர் ஹேய்ஸைச் சபாநாயகராகத் தெரிவு செய்தனர். மீண்டும் கினல் தனது பிரச்சினையைக் கிளப்பினர். சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டு விட்டாராதலின் இனிமேல் எவ்வித கேள்விகளும் கேட்கப்படலாகாது எனக் கொஸ்கிரேவ் விதண்டாவாதம் பேசினர்! சில நிமிடங்களுக்கு முன் ஒரு வாதம்!! இப்பொழுது இன்னொரு வாதம்!!!

எனினும் லோறன்ஸ் கினல் ஆசனத்தில் அமர மறுத்துவிட்டார். அதனல் அவர் சபையிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்

இடத்திற்கு ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டியது அவசியம்.

இடைக்கால அரசாங்கத்தின் அதிபர் என்று அழைக்கப்படாது, விலியம் கொஸ்கிரேவ், பாராளுமன்றத்தின் தலைவர் என்று அழைக்கப்படும் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து கொஸ்கிரேவ் தனது மந்திரி சபையை நியமித்தார். புதிய மந்திரி சபை ஏறத்தாழ, கொளின்ஸின் மந்திரி சபையாகவே இருந்தது.

ஆங்கில மன்னரின் பிரதிநிதியாக அயர் நாட்டி

## ஆட்சியினர் படை புறமுதுகிட்டது

பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்தன. கொஸ்கிரேவ் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் ஐன் மக்னீலின் மகனும் குடியரசுவாதியுமான பிறயன் மக்னீல் 20-9-1922ல் சரணகதியடைந்த பின்னர் அரசாங்கத்தின்படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதேபோல் குடியரசு இராணுவத் தளபதியும் குடியரசுப் பாராளுமன்ற உறுப்பினருமான தளபதி தெவின்ஸும் இன்னும் நால்வரும் சரணகதியடைந்தபின் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தப் படுகொலைகளையெல்லாம் கண்டித்து அயர் நாட்டுக் கத்தோலிக்கத்

கள் அறியலாயினர். குடியரசுவாதிகளாயிருந்தால் அவர்களை எச்சரித்தனர்; ஏசினர். 15ம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்திடம் ஆயுதங்களை ஒப்படைக்காத குடியரசுவாதிகளைத் தாம் திருச்சபையிலிருந்து நீக்கப் போவதாகப் பயமுறுத்தினர். அவ்வாறு நீக்கப்பட்டால் மரணத்தின் பின் பிரார்த்தனை கூறப்படமாட்டாது எனவும் எடுத்தியம்பினர். ஆயினும் எல்லாம் வல்ல இறைவன் நிச்சயமாகக் குடியரசுவாதியாகவே இருப்பார் எனக் குடியரசுவாதிகள் திடமாக நம்பினர்.

நாட்டில் குடியரசுவாதிகளை அரசாங்கம் கொலை செய்வது நிறுத்தப்படவேயில்லை. 12-10-1922ல் டப்ளினையடுத்தமலைப் பகுதியில் ஒரு சவம் கண்டெடுக்கப்பட்டது. 3-7-1922ல் அரசாங்கத்தின் படையினரால் டப்ளினில் வைத்துக் கைது செய்யப்பட்ட சோண் லெமாஸின் சடலம் அது என்பது பின்பு மக்களுக்குத் தெரிய வந்தது. இவ்வகையான படுகொலைகளைக் கண்டிக்க எந்தத் திருச்சபையும் முன்வராதது மிகவும் வருந்தத்தக்கதே.

## போட்டி அரசாங்கம் உருவாக்கப்பட்டது

லிருந்த துணை மன்னர், புதிய பாராளுமன்றத்திற்குத் தனது ஆசிகளைத் தெரிவித்துள்ளதாகச் சபாநாயகர் அறிவித்துவிட்டுக் கூட்டத்தை ஒத்திவைத்தார். என்னே, நரிப்புத்தி! அயர் மகனையும் அயர் மகனையும் கொழுவி விட்டுத் தக்க வேளையில் நுழைகின்றனர் இந்த ஆங்கிலேயர்!

இத்தனைக்கும் கொஸ்கிரேவ், தேர்தலுக்கு முன் கொளின்ஸுக்கும் டி வேல

தயாராக இருப்பதாகவும் டி வேலரா குறிப்பிட்டிருந்தார்.

## அரங்கம் 22

பாராளுமன்றம் மீண்டும் 19-9-1922ல் கூடியபோது விலியம் கொஸ்கிரேவ் அயர் சுதந்திர மாநிலத்தின் புதிய யாப்புமுறையைச் சமர்ப்பித்தார். நாட்டிலே அமைதி ஏற்பட்டபின்னர் யாப்பு முறையைச் சமர்ப்பிக்கும்படி தொழிற் கட்சி விடுத்த

திருச்சபை அறிக்கை விடும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தமக்களை 24-9-1922ல் ஏமாற்றமும் அதிர்ச்சியும் தான் காத்திருந்தன. அரசாங்கத்தின் படைகளை எதிர்த்துப் போராடும் ஒவ்வொரு குடியரசுவாதியும் பாவம் செய்கின்றவன் எனத் திருச்சபை அறிக்கை விட்டது!

புதிய யாப்புமுறையின் மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட யாப்புமுறையின் மீதான விவாதம் முடிவடைந்து, 25-10-1922ல் அந்த யாப்புமுறை வாக்கெடுப்பில் நிறைவேறியது. எனினும் இதைக் கண்டு குடியரசுவாதிகள் வாளாவிருக்கவில்லை. அயர் குடியரசு இராணுவம் ஏமன் டி வேலராவை மீண்டும் குடியதிபதியாக நியமித்தது. அதன்படி டி வேலரா இன்னும் பன்னிருவரைக் கொண்ட மாநிலசபையொன்றை நியமித்தார். இந்தப் போட்டி அரசாங்கத்தை மக்களில் பெரும் பகுதியினர் வரவேற்றுலும் அரசாங்கமாகக் கடமையாற்றுவதில் அதற்குப் பல முட்டுக்கட்டைகள் இருக்கவே செய்தன.

(வளரும்)

## இரத்த வெள்ளம் அளித்த ஐரிஷ் விடுதலை

ராவுக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தம் பற்றியோ, கூட்டு மந்திரி சபை பற்றியோ ஒரு வார்த்தை தானும் கூறவில்லை—கூற எண்ணவில்லை.

எனினும் இதைப் பற்றிக் கவலைப்படுவதற்குக் குடியரசுவாதிகள் பதவிப் பித்துப் பிடித்தவர்களல்லவே. அவர்களோ தாம் பிரகடனப்படுத்திய குடியரசைப் பாதுகாப்பதற்காகக் கொரில்லாப் போர் புரிந்து கொண்டிருந்தனர். 12-9-1922-ல் அவர்கள், அரசாங்கத்தின் படைஞர்

வேண்டுகோளைக் கொஸ்கிரேவ் நிராகரித்துவிட்டார். எனினும் பெண்களையும் சேர்த்துப் புதிய தேர்தல் இடாப்புக்களைத் தயாரிக்கும்படி விடுத்த கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டார்.

புதிய யாப்புமுறையின்படி, ஆங்கில மன்னருக்குக் கீழ்ப்படிந்த மக்கள் சபையொன்றும் மூதவையொன்றும் அயர் நாட்டில் இருக்கும்; பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தாம் ஆங்கில மன்னருக்கு விசுவாசமாக இருப்ப

யில் புதிய பாதுகாப்பு மந்திரியான றிச்சட் மல்க்ககி, அரசாங்கத்தின் படைகளுக்கு எதிராகப் போர் புரிபவர்களைத் தண்டிப்பதற்காக இரகசியமாக விசாரணை நடாத்தும் இராணுவ நீதிமன்றங்களை இராணுவமே அமைத்துக் கொள்வதற்கு வழிவகை செய்யும் பிரேரணையைக் கொண்டு வந்தார். குடியரசுவாதிகளின் பிரசாரப் பொறுப்பாளரான ஏஸ்கின் சில்டேஸைக் கைது செய்து கொல்வதற்காகவே இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகிறது என உள் ஆட்சி அமைச்சர் கெவின் ஒஹிக்கின்ஸ் நேரடியாகவே கூறிவைத்தார். இந்தப் பிரேரணையைத் தொழிற் கட்சியினர் எதிர்த்தனர். எனினும் அது நிறை

## பாராளுமன்றத்திலிருந்து பலவந்தமாக குடியரசுவாதி வெளியேற்றப்பட்டார்

## காளான்களை சாப்பிடுகிறார்கள்

மழை பெய்தால், காளான்கள் முளைக்கின்றன வல்லவா? இவைகளை மேல் நாட்டில் சிலர் சமைத்துச் சாப்பிடுகிறார்கள் என்றால் நம்புவீர்களா? ஆனாலும், இது உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 நவம்பர் மாதம் 10-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## தரையில் வேரூன்றாது தடுக்கும் மசோதா!

நிதி மசோதா ஒரு கதம்ப மசோதா. அது தற்போது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுகிறது. பல "துண்டு" மசோதாக்களைக் கொண்டதே இந்த நிதி மசோதா. அவற்றுள் ஒன்றுதான் "பிரஜைகளல்லாதோர் நிலம் வாங்குவதற்குத் தடை—வாங்கினால் நூறு சத விகிதம் வரி செலுத்த வேண்டும்" என்ற விதி. பாராளுமன்றத்தில் தமிழரசுத் தலைவர்களும், உடுப்பிட்டிப் பிரதிநிதியும் இந்த மசோதாவின்மீது பலத்த தாக்குதலை நடத்தியுள்ளனர். இது தமிழ் பேசும் சமுதாயத்தையே கருவறுக்கும் மசோதா என அவர்கள் கண்டித்தனர்.

இந்த மசோதா இலங்கை வாழ் தமிழ், முஸ்லிம் மக்களையும், மலையகத்தில் தலைமுறை தலைமுறையாக வசித்து வரும் 10 இலட்சத்துக்கு மேற்பட்ட "நாடற்றவர்" என்ற தமிழ் மக்களையும் கடுமையாகப் பாதிக்கிறது. சிங்களவர்களைத் தவிர ஏனையோரை அன்னியராக்கும் விஷப் பூண்டுதான் இம் மசோதா.

இம் மசோதாவின்படி காணி வாங்க வேண்டுமானால் பிரஜாவுரிமையை நிரூபித்தாக வேண்டும். பிரஜாவுரிமையை நிரூபிக்கும்படி தமிழ் பேசும் மக்கள் மாத்திரமே கேட்கப்படுவர். பிரஜாவுரிமைச் சட்டத்தை அமுல் நடத்தும் விஷயத்திலும் அதுதான் நடைபெறுகிறது. பிரஜாவுரிமைச் சட்டத்தில் சிங்களவர்களுக்கு விதிவிலக்குக் கிடையாது. ஆயினும் பிரஜாவுரிமையை நிரூபிக்கும்படி அவர்களை என்றுமே கேட்பதில்லை. அவர்களுக்கு விதிவிலக்குக் கிடைக்கக்கூடியதாகப் பிரஜாவுரிமைச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறது.

திரு. டி. எஸ். சேனநாயக்காவின் பிறப்போ, அவரது தந்தையின் பிறப்போ, பாட்டனின் பிறப்போ பதிவு செய்யப்படவில்லை என்பதை டாக்டர் நாகநாதன் பாராளுமன்றத்தில் சரியாகச் சுட்டிக்காட்டியுள்ளார். ஏன், காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் தந்தையின பிறப்பையும் கூடப் பதிவு செய்திருகக முடியாது. பிறப்பைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற விதி அமுலுக்கு வந்ததே 1897ம் ஆண்டுக்குப் பிறகுதான். இந்த நிலையில் பிரஜாவுரிமையை நிரூபிக்கும்படி சிங்களவர்கள் கோரப்பட்டால், அவர்களில் 90 சத விதம் பேர் சட்டப்படி பிரஜாவுரிமையை இழந்துவிடுவர். எனவே நடைமுறையில் சிங்களவர்களுக்கு விதிவிலக்கு அளித்துவிட்டு, தமிழ் பேசும் மக்கள் மீது மட்டும் பிரஜாவுரிமைப் பாணம் பிரயோகிக்கப்படுகிறது. தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஏற்கனவே சந்தேகப் பிரஜைகளாக்கி வைத்துள்ளது பிரஜாவுரிமைச் சட்டம்.

இதே ஆயுதத்தைக் கொண்டு, தமிழர்களும், முஸ்லிம்களும் நிலம் வாங்குவதைத் தடுக்க இன்று முயற்சி செய்கின்றனர். இந்த மசோதாவின்படி எந்தத் தமிழனும், எந்த முஸ்லிமும் ஒரு வீடு கட்டி வசிப்பதற்காக ஒரு சிறு துண்டுக் காணி கூட இனி வாங்க முடியாது.

"பிரஜைகளல்லாதோர்" என மசோதாவில் மறைமுகமாகக் குறிப்பிட்டிருப்பது தமிழ் பேசும் மக்களையே. மசோதாவைச் செயல்படுத்தும் போதுதான் அந்த உண்மை தெளிவாகத் தெரியும்.

காணி வாங்கும் உறுதிப் பத்திரத்தில் சிங்களவர் பெயர் காணப்பட்டால் எதுவித ஆட்சேபமுமின்றி அதனைப் பதிவு செய்துவிடுவார் காணிப்பதிவு அதிகாரி. ஆனால் தமிழ்ப் பெயரோ, முஸ்லிம் பெயரோ காணப்பட்டால், உடனே 15 நாட்களுள் பிரஜாவுரிமையை நிரூபிக்கும்படி இல்லையேல் 100க்கு 100 வரி செலுத்தும்படி அந்த நபருக்குக் கட்டளையிடுவார் பதிவு அதிகாரி. இப்படித்தான் இம் மசோதா அமுல் நடத்தப்படுமென்பது திண்ணம். இதில் ஐயம் வேண்டாம்.

வெளிநாட்டார் இங்கு நிலம் வாங்குவதைத் தடுப்பது இந்த மசோதாவின் நோக்கமன்று. ஏனெனில் வெளிநாட்டார் யாருமே இப்போது இங்கு நிலம் வாங்குவதில்லை. கடந்த சில ஆண்டுகளாக அவர்கள் தங்களின் காணிகளையும் தோட்டங்களையும் விற்றுவிட்டு, நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். இன்று இந்நாட்டு நிலங்களை அன்னியர் கைப்பற்றும் அபாயம் எதுவும் அறவே கிடையாது. எனவே அயல்நாட்டினர் இங்கு நிலம் வாங்குவதைத் தடுக்கும் பிரச்சினையே எழவில்லை. அதற்கு மசோதாவும் தேவையில்லை.

இம் மசோதா முழுக்க முழுக்க தமிழ் பேசும் மக்களின் நிலவுரிமையை அபகரிப்பதற்காகவே தயார் செய்யப்பட்டதென்பது இதிலிருந்து தெளிவாகிறது. நிலத்தில் வேரூன்றவிடாது அவர்களைத் தடுத்து, அந்தரத்தில் தொங்கவிடுவதே இம் மசோதாவின் அடிப்படை நோக்கம். இதனைப் பாராளுமன்றத்திம தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார் உடுப்பிட்டிப் பிரதிநிதி.

இந்த மசோதாவின்படி தமிழ் பேசும் மக்களின் பிரஜாவுரிமையை நிர்ணயிக்கும் பொறுப்பு ஒரு நிரந்தரக் காரியதரிசியிடம் விடப்பட்டுள்ளது இந்திய, இலங்கைப் பிரதமர்களே இதுவரை தீர்க்க முடியாதிருக்கும் ஒரு பிரச்சினையை ஓர் அதிகாரியால் தீர்க்க முடியுமா? ஏன் இந்த ஏற்பாடு? பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களை இந் நாட்டுப் பிரஜைகளல்ல எனத் தனியாக ஒதுக்கி விடும் சதியே இது.

இன ஒதுக்கலின் இறுதி விளைவை ஆட்சியாளர் தற்போது உணராதிருக்கலாம். இம்மாதிரியான இன ஒதுக்கல் சட்டங்கள், ஒதுக்கப்பட்ட இனம் தனியாட்சி நிறுவ வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திவிடும் என்பதை ஆட்சியாளர்களுக்கு இடித்துக் காட்ட விரும்புகின்றோம்.

இம் மசோதாவின்படி தந்தை தன் சொத்தைத் தனையனுக்கு உரித்தாக்கத் தடை — இல்லையேல் 100 சத விகிதம் வரி, மக்களுக்கு ஒரு வீட்டையோ, ஒரு துண்டு காணியையோ நன்கொடையாக வழங்கத் தந்தைக்குத் தடை — இல்லையேல் 100 க்கு 100 வரி — இம்மாதிரியான ஒரு கொடிய வகுப்புவாத மசோதாவை அனுமதித்தல் தமிழ் பேசும் இனம் தற்கொலை செய்துகொள்ளுவதாகும் எனவே இந்த மசோதா [illegible] வேண்டும். நிதி மசோதாவிலிருந்து இந்தத் "துண்டு மசோதா"வை அடியோடு அகற்றிவிடும்படி கோரித் தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

# அன்னிய மொழியைப் படிப்பதற்கு மாணவப் பருவத்தைத் தாண்டி விட்டேன

## திறைசேரி சுற்று நிருபத்திற்கு தமிழ் ஊழியர் விளக்கம்

18-10-63-ல் திறைசேரியால் அரசாங்க ஊழியர்களுக்கு அனுப்பப்பட்ட 620 இலக்க சுற்று நிருபத்திற்கு விளக்கங்கொடுத்துள்ள ஒரு தமிழ் அரசாங்க ஊழியர் 'நான் மாணவப் பருவத்தைத் தாண்டிவிட்ட காரணத்தினால் அன்னிய மொழியைப் படித்து தேர்ச்சி பெறுவது இயலாத காரியமாகும்' என்று தெரிவித்துள்ளார்,

அச் சுற்று நிருபத்திற்கு அவர் கொடுத்துள்ள விளக்கத்தின் விபரம் வருமாறு:—

அத்தாட்சியுடன் நான் விளக்கியுள்ள பின் வரும் காரணங்களுக்காகவே, சிங்களத் தகுதி காண் பரீட்சை எதற்கும் தோற்றவோ, படிக்கவோ முடியவில்லை.

நான் ஆங்கில மொழி மூலமே அரசாங்க சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது, சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமென்ற நிபந்தனையுடன் எடுக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம் இருந்த விதிகளை நான் மாற்ற விரும்பவில்லை. அத்துடன், மாணவ வயதையும் நான் கடந்துவிட்டதோடு, எனக்கு அன்னியமான ஓர் மொழியில் படித்து, தேர்ச்சி பெறுவது இயலாத காரியமாகும்.

## அண்மையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் வாலிபர் இயக்கத்தைப் பலப்படுத்தி ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்துக்கும் ஒரு ஸ்தாபனம் வீதம் உடனடியாக நிறுவி பிரசார வேலைகளில் அவசரமாக ஈடுபடும்படி மந்திரிகளுக்கும், அரசாங்க எம். பி. களுக்கும், செனட்டர்களுக்கும், கட்சியின் பிரபல உறுப்பினர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மூன்று கட்சிகளும் அவசர அவசரமாக கட்சி அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருப்பதையும், ஆளும் கட்சி காட்டும் தீவிரமான அவசரத்தையும் நோக்கும் அரசியல் அவதானிகள் அடுத்த ஆண்டு முடிய முன்பு பொதுத் தேர்தல் நிச்சயம் நடைபெறுமென கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# பாத யாத்திரை கைமேற் பலன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிய போசனத்தில் திரு. அமிர்தலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. கதிரவேற்பிள்ளை, திரு. தர்மலிங்கம், திரு வி. என். நவரெத்தினம், ஜனப் அபுசாலி ஹாஜியார், ஜனப் உமர் அப்துல் காதர் ஆகியோர் தொண்டர்களோடு கலந்து கொண்டனர்.

ஆடுப்புங்காவல் முகாமில் வைத்து வழக்கறிஞர் திரு. சி. கதிரவேற்ப்பிள்ளை அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட "உமர்க் கையாம்" பாடல்களை திரு. கதிரவேற்பிள்ளை முஸ்லிம் அன்பர்களுக்கு அன்பளிப்புச் செய்தார்.

மீரானியாக் கல்லூரியில் தலைவர்களும் தொண்டர்களும் தங்கியிருந்த போது ஜனப் காதி எம். எம். சுல்தான் (வழக்கறிஞர்) ஜனப் பிராப்பிள்ளை ஹாஜியார், ஜனப் சு. மீ. முகம்மது முகையத்தீன் ஹாஜியார், ஜனப் உமர் அப்துல் ஹாஜியார், ஜனப் வி. எம். எஸ். அபுசாலி ஆகியோர் உட்பட பல முஸ்லிம் பிரமுகர்கள் சந்தித்து உரையாடினர். தொடர்ந்து கடும் மழை பெய்துகொண்டிருந்த போதும் மாலை 5க்குமணி மீண்டும் பாத யாத்திரை தொடங்கியது. திரு. சி. கதிரவேற்பிள்ளை தொண்டர்களை உபசரித்து ஆதரவு காட்டிய முஸ்லிம் மக்களுக்கு நன்றி கூறினார். திரு. அமிர்தலிங்கம் பாத யாத்திரையின் நோக்கங்களை எடுத்து விளக்கினார்.

### அன்னசத்திரத்தில்

அங்கிருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் குழுவினர் நாவலர் வீதியிலுள்ள கடையிற் சுவாமி குருவார அன்னசத்திரத்தை அடைந்தார்கள். இந்தப் பாத யாத்திரைக் குழுவினருடன் மாநகரசபை உறுப்பினர் ஜனப் அபுசாலி ஹாஜியார் தொடர்ந்து அன்னசத்திரம் வரை சென்றார். அன்னசத்திரத்தில் மாநகரசபை உறுப்பினர் திரு. கே. சி. மன்மதராயன், மாநகரசபை உறுப்பினர் திரு. என். ரி. செல்லத்துரை ஆகியோர், தலைவர்களையும் தொண்டர்களையும் வரவேற்று உபசரித்தனர். மாலை 7 மணியளவில் கடும் மழை பெய்தபோதும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்றிரவும், அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை பகலும் அன்னசத்திரத்திலேயே தங்கினர்.

அன்று மாலை 5 மணிக்கு மீண்டும் பாத யாத்திரை தொடர்ந்தது. நல்லூர் செம்மணி வீதியிலுள்ள சென்ற். ஜேம்ஸ் தேவாலயத்தை அடைந்தது. இடையிலே பல இடங்களில் மக்கள் பூரண கும்பம் வைத்து மாலைகள் அணிவித்து, சிற்றுண்டி தேநீர் வழங்கி வரவேற்றனர். றக்கா வீதியிலுள்ள மருதடிப் பிள்ளையார் கோவிலில் சகல மக்களும் சேர்ந்து வட்டார சங்கத் தலைவர் திரு. பீட்டர் சோமசுந்தரம் தலைமையில் வரவேற்பு உபசாரம் அளித்தனர்.

### கிறிஸ்தவ அன்பர்கள் உபசாரம்

சென்ற். ஜேம்ஸ் தேவாலயத்தை அடைந்த தொண்டர்கள், முத்திரைச் சந்தையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தேவாலயத்திலேயே தொண்டர்கள் இரவு போசனமுண்டு அங்கேயே தங்கினர். இரவு போசனத்தையும், அடுத்த நாள் காலை உணவையும் தேவாலயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ அன்பர்கள் அளித்தார்கள்.

4-ம் திகதி திங்கட்கிழமை காலை தேவாலயத்திலிருந்து புறப்பட்ட யாத்திரைக் குழுவினர் கல்வியங்காட்டிலுள்ள அமரர் வன்னியசிங்கம் படிப்பகத்தை வந்தடைந்தனர். மக்கள் வரவேற்று காலை உணவை படிப்பகத்திலேயே வழங்கினர். அங்கிருந்து புறப்பட்டு இருபாலைச் சந்திக்கு மதிய போசனத்துக்காக வந்தடைந்தனர். பிற்பகல் 3-30 மணிக்குப் புறப்பட்டு கோப்பாய் வடக்கு சரவணபவாநந்த வித்தியாசாலையை நோக்கிப் புறப்பட்டனர். கோப்பாய் சூரியோதயா சனசமூக நிலையத்தில வரவேற்பும், சிற்றுண்டியும் வழங்கப்பட்டன.

இரவு 7-30 மணியளவில் அம்மன் கோயிலடி சனசமூக நிலையத்திற்குக் குழுவினர் வந்து சேர்ந்தனா. இங்கு ஒரு பொதுக் கூட்டமும் நடைபெற்றது. கோப்பாய் கிராமச் சங்கத் தலைவர் திரு. பொ. தி. சம்பந்தன் தலைமை தாங்கினார். சனசமூக நிலையத்திலேயே இரவு தொண்டர்களும் தலைவர்களும் தங்கினர்.

### நீர்வேலியில்

5-ம் திகதி காலை அம்மன் கோயில் சனசமூக நிலையத்திலிருந்து பாதயாத்திரைக் குழுவினர் புறப்பட்டனர். நீர்வேலி, அச்செழு வழியாகத் தொடர்ந்தது. நீர்வேலி சிறி முருகன் சோடா நிலையத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது.

இரவு நீர்வேலி காமாட்சி அம்மாள் சனசமூக நிலையத்தில் உபசரணைகள் நடைபெற்றன. பொதுக் கூட்டம் நடைபெற்றது. உடுவில் பிரதிநிதி திரு. தர்மலிங்கம் தலைமை வகித்தார். இரவு உணவும் காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்திலேயே வழங்கப்பட்டது.

6-ம் திகதி காலை சிறுப்பிட்டி சைவ வித்தியாசாலைக்கு அருகாமையிலிருந்து புறப்பட்டு கோப்பாய் வடக்கை அடைந்தது. திரு. கு. பொன்னையா அவர்கள் இல்லத்தில் வைத்துச் சிறுப்பிட்டி மக்கள் காலை உணவை வழங்கினர். மதிய உணவு கோப்பாய் வடக்குச் சந்தியிலிருக்கும் திரு. க. துரைசிங்கம் அவர்களின் இல்லத்தில் கோப்பாய் மக்களால் வழங்கப்பட்டது.

### சாவகச்சேரி நோக்கி...

பிற்பகல் 4-30 மணியளவில் தொண்டர்கள் கோப்பாய்ச் சந்தியிலிருந்து புறப்பட்டு சாவகச்சேரித் தொகுதிக்குள் பிரவேசித்தனர். கைதடிச் சந்தியில் வைத்து சாவகச்சேரித் தொகுதி மக்கள் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞருக்குப் பாதுகாப்பு இல்லை

## தகாத முறையில் நடக்க இராணுவத்தினர் முயற்சி

### பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம் உரை

வட பகுதியில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினுல் தமிழ் பெண்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. மேலும் இராணுவத்தினர் இயற்கைக்கு விரோதமான செயல்களிலும் ஈடுபட்டு வருகிறுர்கள் என்பதைச் சபைக்கு வருத்தத்துடன் கூறவிரும்புகிறேன். பருத்தித்துறையில் இளைஞர்களுக்குக் கூடப்பாதுகாப்பு இல்லை. ஓர் இளைஞன் இராணுவமுகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளான். அவன் துடிப்புள்ள இளைஞன் என்ற படியினுல் தன்னிடம் தகாத முறையில் நடக்க முற்பட்ட இராணுவ வீரனுக்கு அடித்து விட்டான்.

கடந்த ஐந்தாம் திகதி பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது உரைநிகழ்த்துகையில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் வட பகுதியில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரின் தகாத செயல்பற்றியும் அவர்களின் பயங்கர ஆட்சி பற்றியும் எடுத்துரைத்தார்.

மேலும் அவர் கூறியதாவது:

மன்ஞரில் நடைபெறும் நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளைத்தானு அரசாங்கம் அதன் இராணுவத்துக்கும், பொலீசுக்கும் கொடுத்துள்ளது? இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்ட உதவி பொலீஸ் மேலதிகாரி திரு. இடமல்கொடவுக்குத் திரு. அழகக்கோன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்பது தெரியும். அப்படியிருந்தும், திரு. அழகக்கோன் கள்ளக் குடியேற்றக்காரர் என்று யாராவது தன்னிடம் முறையிட்டால், தான் திரு. அழகக்கோனைக் கைது செய்வாரெனக் கூறியுள்ளார்.

#### பருத்தித்துறையில்

வடக்குக் கரையோரப் பகுதியிலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள இராணுவத்தினரின் நடவடிக்கைகள் அல்லது துர்நடவடிக்கைகள் பற்றிக் கௌரவ உடுப்பிட்டி எம். பி. அவர்கள் குறிப்பிட்டார். பெண்களைத் தொந்தரவு செய்வது பற்றி அவர் கூறினுர். இயற்கைக்கு விரோதமான செயல்களிலும் ஈடுபட இராணுவத்தினர் துணிந்துள்ளனர் என்பதை நான் வருத்தத்துடன் கூற விரும்புகிறேன். பருத்தித்துறையில் இளைஞர்களுக்குக்கூட பாதுகாப்பு இல்லை.

ஓர் இளைஞன் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டான் ஆனுல் அவன் ஓர் துடிப்பான இளைஞன். தன்னிடம் தகாத முறையில் நடந்துகொள்ள முயன்ற இராணுவ வீரனுக்கு அடித்துவிட்டான்.



நீர்வேலி காமாட்சி அம்பாள் வாசிகசாலையில் தொண்டர்கள் ஒரு பகுதியில் இளைப்பாறிக் கொண்டிருக்கையில், மறுபுறத்தில் தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. சி. கதிரவேற்பிள்ளையைச் சில இளைஞர்கள் சூழ்ந்து நிற்கிருர்கள்.

இதற்குத்தானு அரசாங்கம் இராணுவத்தை அங்கு வைத்துள்ளது? இந்த மாதிரியான நடவடிக்கைகளால் தமிழ் மக்களைப் பயமுறுத்தி வெருட்டப் பார்க்கிறீர்களா? இதற்கு ஏதாவது மறுமொழி கிடைக்குமென நான் நம்புகிறேன். இந்த மாதிரி அட்டூழியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க, கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி உடன் ஏதாவது நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறேன்.

இரண்டாவது விஷயம், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீராவின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டதாகும்.

மாவட்ட இணைப்புக் குழுக் கள் [illegible] மில் பேசும் உரிமை எங்களுக்கில்லையா? தமிழை விட வேறு மொழி எதுவுமே தெரியாத கிராம சபைத் தலைவர்கள் பலர் அங்கு இருந்தார்கள். நீங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள உங்கள் அரசாங்க அதிபருக்கு அளித்துள்ள ஆலோசனைகளா இவை?

தமிழ் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பதே தனது கடமையென நினைக்கும் இப்பிரமுகரை — தேவையெனில், இராணுவ உதவியைக் கொண்டாவது — திருப்பி அழைக்கும்படி நாம் கௌரவ உள்விவகார அமைச்சருக்குத் தந்தி அனுப்பியிருந்தோம். இந்த விஷயத்தைப்பற்றிச் சிறிது விபரமான விளக்கம் எமக்குக் கிடைக்குமென நம்புகிறேன்.

இதுதான் உங்கள் அரசாங்கத் கொள்கையென்ருல், அப்படியே சொல்லுங்கள்; நாங்களும் அந்த நிலையில் வைத்து அதை எதிர்ப்போம். நியாயமான அளவு தமிழ் உபயோகம் பற்றிப் பேசுகிறீர்கள்; நான்கு அம்சங்கள் பற்றிப் பேசுகிறீர்கள்; ஆனுல், நடைமுறையில், தமிழில் பேசுவதற்குக்கூட ஒருவருக்கும் சந்தர்ப்பமே அளிக்கிறீர்களில்லை; வேறு மொழி தெரியாதவரைக்கூடத் தமிழில் பேசுவதற்கு அனுமதிக்கிறீர்களில்லை.

நாம் அனுப்பிய தந்திக்கு கௌரவ உள்விவகார அமைச்சரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. நடப்பது என்ன என்பதை இச் சபையும், நாடும் அறிய வேண்டுமென விரும்புகிறேன். கௌரவ மந்திரி பதிலும் தந்து, எமது தந்திமீது நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன்.

## இ. போ. ச.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதில் இருவர் தமிழர்கள். இருவருக்கும் அவர்களது நியமனக் கடிதம் கொடுத்த பிற்பாடு, அமைச்சரின் கட்டளையின் பேரில் இரு தமிழரினது நியமனங்களும் ரத்துச் செய்யப்பட்டன என்று அறியப்படுகிறது.

பலத்த ஆட்சேபனையின் பின்னர், சிங்களத்தில் வேலை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன், இவர்களில் ஒருவர் வேலைக்கு அமர்த்தப்பட்டாராம். முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு, முதலிலேயே நியமனமும் பெற்ற சிங்கள ஊழியர் இந்த நிபந்தனைக்கு உட்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றைய தமிழ் ஊழியரின் நியமனம் தற்பொழுதும் ரத்துச் செய்யப்பட்ட நிலையில் இருந்து வருவதுடன், குறைந்த பதவி வகித்த சிங்களவர் ஒருவர் இவ்விடத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார் என்றும் தெரிகிறது.

2. சபையின் தலைவர், பிரதம நிர்வாகி, முக்கிய கணக்காளர் முதலியோர்களை உள் அடக்கிய ஒரு குழுவினுல் ஏழு உதவிக் கணக்காளர்கள், சிரேஸ்ட கணக்காளர்களாக சிபார்சு செய்யப்பட்டுச் சபையின் வழமையான அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதென அறியப்படுகிறது.

இவ்வேழு கணக்காளர்களில் மூவர் தமிழர்களாவர். இச் சந்தர்ப்பத்திலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தொழிற் சங்கத்தின் எதிர்ப்புக்கு அமைய, குழுவினுல் சமர்ப்பிக்கப்படச் சிபார்சு, இரண்டு மாதங்களுக்கு மேலாக, சபைக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லையாம்.

இறுதியில் சபை, "சிங்களத்தில் எட்டாம் வகுப்பு சித்தி எய்தியிருந்தால் மட்டுமே நியமனம் கொடுக்கப்படலாம் என்ற நிபந்தனையுடன் இவ்வேழு கணக்காளர்களின் உத்தியோக உயர்வையும் அங்கீகரித்துள்ளதாம்.

இந்த முடிவினுல் சிங்களத்தில் ஒருவித தேர்ச்சியும் பெருத மூன்று தமிழ் ஊழியர்கள் உத்தியோக உயர்வின்றி வேதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

3. சபையின் எழுது வினைஞர் சேவையில் உள்ள எட்டு எழுது வினைஞர்கள் சேவையின் 2-ம் பிரிவிற்கு உயர்த்தப்படுவதற்கு சிபார்சு செய்யப்பட்டனராம். இந்த எண்மருடைய பெயர் அட்டவணை பிரதம நிர்வாகிக்குச் சமர்ப்பிக்கப்பட்டதென்றும், அவர் அந்த அட்டவணையில் இருந்த இரு தமிழ் ஊழியர்களின் பெயர்களையும் அவர்களுக்கு சிங்களம் தெரியாது என்ற ஒரே காரணத்தினுல் நீக்கி மற்றையோரை அங்கீகரித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட மிகுதி ஆறு சிங்கள ஊழியரால் தங்கள் அலுவலக வேலைகளைச் சிங்களத்தில் ஆற்ற முடியுமா என்பதைக் கவனத்திற்கு எடுத்து பிரதம நிர்வாகி இந்த அங்கீகாரம் கொடுத்தாரா என்பது சந்தேகமே!

4. சில மாதங்களுக்கு முன்னர் டிப்போ பரிசோதகர் பதவிக்குப் பயிற்சி பெறுவதற்காக ஊழியரில் சிலரை தெரிவு செய்வதற்கு ஒரு சோதனை நடாத்தப்பட்டது. இரண்டு பூரண நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் ஒன்பது தமிழர்கள் உட்பட பதினுன்கு ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

பிரதம நிர்வாகி இதையிட்டி அமைச்சருக்கு அறிவித்தாரென்றும் அமைச்சர் இந் நியமனங்கள் அனைத்தையும் ரத்துச் செய்யும்படி கட்டளையிட்டாரென்றும் கூறப்படுகிறது. போக்கு வரத்துச் சபையினருக்கோ இது பற்றிய விபரம் ஒன்றும் தெரியாதாம்.

இவ்வாருக இலங்கைப் போக்கு வரத்துச் சபையில் பணியாற்றும் தமிழ் ஊழியர்களுக்கு பலவித இன்னல்களை ஏற்படுத்துவதோடு, அவர்கள் உத்தியோக உயர்வு பெறுவதையும் மேலிடம் தடுத்து வருகிறதென்றும், அதன[illegible]களின் தொழிலுக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளதென்றும் அறியப்படுகிறது.

## பரீட்சைக்குரிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை ஆசிரியரின் சிபார்சுடன் கூடிய சாதாரண புகைப்படத்துடன் பரீட்சைக்குத் தோற்றலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சில கல்லூரித் தலைமை ஆசிரியர்கள் அச் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடமையாற்றப் பின் நிற்பதாகப் பல மாணவர்கள் புகார் செய்துள்ளார்கள். குறிப்பாக யாழ் நகரில் உள்ள மகளிர் கல்லூரி ஒன்றின் தலைமை ஆசிரியர் பற்றியே அநேக புகார்கள் கிடைத்துள்ளன.

ஆட்சியாளரின் சிங்களத் திணிப்புக்கு தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்ட எதிர்ப்புத் தெரிவிக்கையில், இருக்கக் கூடிய வசதிகளையும் நம்மவர்கள் பயன்படுத்தாது இருப்பது வருந்தத்தக்கது.

மீண்டும் மாணவர்களினதும் தலைமை ஆசிரியர்களினதும் பார்வைக்குப் பரீட்சை ஆணையாளர் அனுப்பிய அச் சுற்று நிருபத்தின் நாலாவது விதியின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது:

பின்வரும் குறிப்புக்களுடன் ஒரு கடவுச் சீட்டு (பாஸ்போட்) அளவு புகைப்படம்:

(அ) விண்ணப்பகாரரின் கையொப்பம்.

(ஆ) விண்ணப்பகாரரின் முழுப் பெயர்.

(இ) கல்லூரியின் பெயரும் முகவரியும்.

(ஈ) கல்லூரி அதிபரின் பெயர்.

(உ) கல்லூரி அதிபரின் கையொப்பம்.

(ஊ) திகதி.

இப் புகைப்படத்தில் கல்லூரி அதிபர் அல்லது தலைமையாசிரியர் மட்டுமே கைச்சாத்திடலாம்.


ஜீ. சீ. ஈ.
101
வினு விடைகளும்
கடந்த கால
வினு விடைகளும்

ஜீ. சி. ஈ. பரீட்சையில் சித்தியடைந்தோரிற் பெரும்பான்மையோர் எமது புத்தகங்களைப் படித்தவர்களே.

| | |
|---|---|
| தமிழ்ப் பாஷை | 3-75 |
| எண் கணிதம் | 3-75 |
| குடியியல் | 3-75 |
| சரித்திரம் | 3-75 |
| பூமிசாஸ்திரம் | 3-75 |
| சுகாதாரம் | 3-75 |
| ஆங்கிலம் | 3-75 |
| இந்து சமயம் | 3-75 |
| பயிற்சிச் சிங்களம் | 3-75 |

வி. பி. பி. கிடையாது
தபாற் செலவு
ஒரு புத்தகம் 50 சதம்
மேற்படும் ஒவ்வொரு புத்தகத்திற்கும் 25 சதம்

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரேட்,
கொழும்பு.



விகர்பில்ஸ்



விலை 30 மாத்திரைகள் ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. ஸி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியசர் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.
13. எஸ். என். குருமெடிக்கல் ஹால் (கிளை) 'மாஸ்டர் ஹவுஸ்', நிந்தவூர்.
14. எஸ். என். குருமெடிக்கல் ஹால் (கிளை) 12, ஒலிவ் வீதி, மட்டக்களப்பு.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால் 80 புதுச் செட்டித் தெரு கொழும்பு 13.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஏமாற்றம்

எழுதியவர்: சில்லாம்பட்டி—கண்ணன்

கொழும்பு நகரமெங்கும் வேலை நிறுத்த வியாதி பரவியிருந்த வேளை. திடீரெனப் புகையிரதப் பகுதியிலும் அவ்வியாதி புகுந்து கொண்டது. தினசரிப் பத்திரிகைகள் கொட்டையெழுத்துக்களால் அதனை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. வர்த்தக ஒலிபரப்பில் இடையிடையே வழக்கம் போல் நீண்ட தூரப் புகையிரதங்கள் ஓடிக்கொண்டிருக்கும் என்ற அறிவிப்புக்கள் வந்து கொண்டேயிருந்தன.

பத்திரிகைச் செய்தியை நம்புவதா? அல்லது வானொலி அறிவிப்பை நம்புவதா? என்ற நிலையில் பிரயாணிகள் பரதவித்தனர். புகையிரதம் ஓடுமா-ஓடாதா? போவோமா விடுவோமா? என்ற குழப்பமான நிலையிலிருந்த நான் செய்வதறியாது திகைப்படைந்தேன். எதற்கும் கோட்டை புகையிரத நிலையத்துக்கே போய் விடுவதென்ற முடிவோடு புகையிரத நிலையத்தை வந்தடைந்தேன். நான் வந்து சேர்வதற்கும், புகையிரத நிலைய மணிக்கூடு 'டங்' என ஒருமுறை ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது. மணியோசை கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். மணி ஒன்று என்பதை அது காட்டிக் கொண்டிருந்தது. புகையிரத நிலையத்தின் முன்பு ஒரு சிறு கூட்டம். அவ்விடத்தில் நின்ற ஒருவரிடம் நெருங்கிச் சென்று "ஏன்? இன்று ரயில் ஓடுமா" என்று கேட்டேன். அவ்வளவுதான் அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. முறைத்துப் பார்த்தபடியே, "நானென்ன போக்குவரத்து மந்திரியா, அல்லது தொழிற் சங்கத் தலைவரா" என்று உறுமினார்.

அதற்கு மேல் அவருடன் ஒரு வார்த்தை பேசாது நிலையத்தினுட் சென்று பிரயாணிகள் அமரும் ஆசனத்தில் அமர்ந்து, கையிலிருந்த பத்திரிகையை விரித்துப் படிக்க ஆரம்பித்தேன். "தம்பி, சாப்பிட்டு மூன்று நாளாச்சு... ஏதாவது..." என்ற வார்த்தைகள் என் காதில் விழுந்தன. நான் பத்திரிகையைப் படித்தபடியே திரும்பினேன். சோகமே உருவான மனித உருவம் ஒன்று என் பக்கத்தில் நிற்கக் கண்டேன். அந்த உருவத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தாலும், எனது பத்திரிகை வாசிப்பை தடை செய்துவிட்டதே என்ற ஆத்திரத்தில் அதன் மீது எரிந்து விழுந்தேன்.

"பிச்சை யெடுப்பதற்கு வெட்கமாக இல்லை" என்று கேட்டேன். அதற்கு ஒன்றுமே பதிலில்லை. ஆனால் அந்த உருவத்துக்குரியவன் என்னைப் பரிதாபகரமாக உற்றுப்பார்த்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அவனது கண்களிலிருந்து 'பொலு பொலு' எனக் கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. அம்மனிதரின் கண்ணீர் என் ஆத்திரத்தை அணையச்செய்தது. "வாருங்கள் சாப்பிடப் போகலாம்" என்று வாஞ்சையுடன் அழைத்தேன். அதற்கு ஒன்றுமே பேசவில்லை. "உங்களைத் தான் ஐயா, வாருங்கள் சாப்பிடப் போலாம்" என்று மறுமுறையும் அழைத்தேன். கல்லிலே அடித்த கடவுட் சிலைபோல் பேசாதிருந்தார் அவர். அவரது மௌனம் என்னை வாட்டியது. அவரை எப்படியாவது சாப்பிட அழைத்துச் செல்ல வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். 'ஏதோ அவசரத்தில் உங்கள் மனம் நோகக் கூடிய விதத்தில் சொல்லிவிட்டேன். அதனை மன்னித்துக்கொண்டு சாப்பிட வாருங்கங் ஐயா' என்றவாறே அவரின் கையைப் பற்றினேன். அதற்கு அவர் கையை உதறிக்கொண்டே 'உன்னை நோவதில் பயனில்லை தம்பி, எல்லாம் என் காலம் செய்யும் வேலை' என்று ஒரு பெரும் பீடிகையைப் போட்டார்.

காலத்தைப் பற்றிப் பிறகு ஆராயலாம், இப்பொழுது பசியைப் பற்றி ஆராய்வோம் வாருங்கள் என்றேன். அவர் என்ன எண்ணினாரோ தெரியாது, சரியென்று தலையை அசைக்கவே, இருவரும் அருகிலிருந்த புகையிரத நிலைய பிரயாணிகள் உணவு விடுதிக்குச் சென்றோம். அவர் சாப்பிட ஆரம்பித்ததும்...

எப்படியாவது அவரது வாழ்க்கையை அறிய வேண்டும் என்ற காரணமில்லாத ஓர் ஆவல் என் மனதிலே ஏற்பட்டுவிட்டது. எப்படிக் கேட்பது? கேட்டால் கூறுவாரா என்பது போன்ற காரணமற்ற சந்தேகங்களும் தோன்றத்தான் செய்தன. "உங்களைப் பார்த்தால் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவரைப் போலத் தோன்றுகிறது" என்ற பீடிகையுடன் அவர் கவனத்தை என்பக்கம் திருப்ப முயற்சித்தேன். "என்னைப் பார்த்தாலா...?" என்று கேட்டுவிட்டு அவர் பலமாகச் சிரித்தார். அச்சிரிப்பிலே உயிரோ உணர்ச்சியோ காணப்படவில்லை.

'தம்பி, எனது கதை உலகப் பெரியார்களது, சிந்தனைச் சிற்பிகளது, ஊருக்கு உழைத்த உத்தமர்களது வாழ்க்கை வரலாற்றைப் போன்றதல்ல. பிறந்த நாள் முதல் இன்றுவரை மகிழ்ச்சியின் காற்று வீசியதில்லை. அதற்குப் பதிலாக துன்பத்தின் கிரகணங்கள் படிந்திருக்கின்றன. நீ நினைப்பது போன்று என் வாழ்க்கைக் கதையில் ஒரு அணுவேனும் உன்னால் ரசிக்க முடியாது. துன்பத்தின் கொப்பளங்கள் மட்டுமே படிந்த ஓர் துயரக் கதை. பழைய சம்பவங்களை நினைத்தால் இப்ப இருக்கிற மன நிறைவும், அமைதியும் எங்கோ பறந்துவிடும். இருந்தாலும் பசியென்று வந்த எனக்கு புசியென்று தந்த உனக்கு என் கதையைக் கூறத்தான் வேண்டும்.

எனது சொந்த ஊர் கைதடி. கைதடியைப்பற்றி விபரமாகத் தெரிவிக்க வேண்டுமானால் அரசினர் வயோதிபர் விடுதி அங்கேதான் இருக்கின்றது. கைதடியிலிருக்கிற பல குடிசைகளின் மத்தியில் தான் எங்களது குடிசையும் இருந்தது. எனக்கு இரண்டு வயதானபோது ஒரு தங்கை பிறந்தாளாம். அவள் பிறந்து மூன்று மாதங்களாவதற்குள் எனது தந்தை இறந்துவிட்டதாக எனது அம்மா கூறியிருக்கிறார். எனது தங்கையை 'தகப்பனைத் தின்னி' என ஊரார் அழைப்பதிலிருந்தே இது இலகுவில் விளங்கக் கூடியதாக இருந்தது.

வண்டில் சக்கரம் போல் சுழன்று கொண்டிருந்த எங்கள் வாழ்க்கைக் கஷ்டத்திலே நான் ஒருவாறு தட்டுத்தடுமாறி எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தேன். [illegible] எனது தாய்க்கும் தங்கைக்கும் ஏற்பட்ட மகிழ்ச்சி சொல்லும் தரமன்று. என் மகன் பாஸ் பண்ணி விட்டான்... அப்பாடா...என் கஷ்டத்தில் பாதி குறைந்தது. இனி அவனுக்கு ஒரு வேலையும் கிடைத்து விட்டால் என் பாரம் முழுவதும் தீர்ந்துவிடும் என என் தாயார் அயல் வீடு முதல் அறிந்த வீடு வரை கூறி மகிழத் தவறுவதில்லை. நானும் வேலை தேடிச் செய்யாத முயற்சிகளில்லை. விண்ணப்பம் எழுதி எழுதி என் விரல்கள் தேய்ந்தன. நேர்முகப் பரீட்சைக்கு நடந்து நடந்து கால்கள் அலுத்தன. அத்தனைக்கும் பரிசாக எனக்கு கிடைத்தது ஏமாற்றம்......

எங்கள் கஷ்டத்தைப் பார்த்துச் சகிக்காமலோ அல்லது உதவி செய்ய வேண்டுமென்ற உயரிய மனப்பான்மையுடனோ எங்களுக்கு உதவி செய்ய ஒருவர் முன்வந்தார். அவருடைய உதவியால் எனக்கு எங்கள் ஊர் ஐக்கிய பண்டகசாலையில் மனேஜர்வேலை கிடைத்தது. அதுவும் எத்தனையோ போட்டிகளுக்கிடையே அவ்வேலையைப் பெற முடிந்தது. நடுக் கடலில் சிக்கி உயிருக்கு மன்றுடிக்கொண்டிருக்கும் ஒருவனுக்கு ஒரு சிறு மிதப்புக் கட்டை கிடைத்தால் எப்படி மகிழ்ச்சியும் உயிரில் நம்பிக்கையும் ஏற்படுமோ—அதே போன்று தான்—வேலை கிடைக்க வில்லையே, வறுமை தீர வழியில்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு அவ்வேலை கிடைத்தது சிறு ஆறுதலும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டன. நான் கற்ற கல்விக்கேற்ற உத்தியோகமில்லையே என்ற கவலை ஒருபுறமிருந்தாலும், ஊரோடு ஒரு உத்தியோகம் கிடைத்துவிட்டதே என்ற ஆறுதலுமிருந்தது...நான் கிராம மக்களிடம் நல்ல முறையில் நடந்து கொண்டதால் அவர்களின் அனுதாபத்தை மிகவும் இலகுவாகப் பெற்றேன். கைதடிச் சந்தியிலுள்ள இரண்டொரு சில்லறைக் கடைகளுக்கு வியாபாரம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது. வியாபாரக் குறைவால் ஆத்திரப்பட்ட ஒரு வியாபாரி இவன் எத்தனை நாளைக்குச் சங்கக் கடையை நடத்திடப் போறான், இன்னும் கொஞ்ச நாளைக்குள்ளே எல்லாத்தையும் சுத்திஒதுக்கிவிட்டு ஊர் ஜனத்துக்கு முழங்கையை காட்டுறானா? இல்லையா வென்று இருந்து பாருங்கோ என ஒரு சிலரிடம் எனக்கு விரோதமாக ஒரு சிறு பிரச்சாரம் செய்து வருவதுதான் அவருடைய பொழுது போக்காக இருந்தது.

எனக்குக் கிடைத்து வந்த சம்பளமும், அம்மாவின் உழைப்பால் கிடைக்கும் ஊதியமும் எங்கள் பொருளாதார நிலைமையில் அபிவிருத்தியை ஏற்படுத்தின. வறுமையின் பிடியிலிருந்து விடுபட்டு விட்டோமென்று ஆனந்தக் கோட்டை கட்டிக் கொண்டிருந்த நேரத்தில், அதைத் தகர்க்க வந்தது பேரிடி ஒன்று — அம்மாவின் சுகயீனம் என்ற உருவில். ஆம். என் தாயாரைத் திடீரென்று நெருப்புக் காய்ச்சல் மடக்கிவிட்டது. நானும் எத்தனையோ வைத்தியர்களிடம் காண்பித்தேன். அவர்கள் ஏதேதோ மருந்துகளை மாற்றி மாற்றிக் கொடுத்தார்களேயன்றி நோயில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. ஒரு நாள் இரவு ஒரு மணியிருக்கும். நடுநிசி. எங்கள் கிராமத்தில் முழுதும் பூரண அமைதி குடிகொளளும் வேளை. மாரிகாலத் தவளைகளின் அலறல் அந்த அமைதியான நிலையைச் சீர்குலைத்துக் கொண்டிருந்தன. மரங்களிலுள்ள இலைகள் ஆடாதபடி வாடைக் காற்று இலேசாக வீசியது. கொ......க்... ...கொக் என்று அம்மாவின் பயங்கர இருமல் சப்தம் என்னை எழுப்பியது. நான் திடுக்கிட்டுப் கண் விழித்துப் பார்த்தேன். அம்மா கட்டிலில் படுத்தபடியே மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தார். என் தங்கை சோகமே உருவாக அருகில் இருக்க, சின்னஞ்சிறிய சிமினி விளக்கு காற்றில் அணைந்து போவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தது. நான் அருகில் சென்று அம்மா அம்மா என்று அழைத்தேன். ஏதோ பேச முயற்சித்தார். முடியவில்லை. கையினால் ஏதோ சைகை காட்டினார்... ...என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சற்று நேரம் கழித்து தட்டுத் தடுமாறியபடியே 'எப்படியும் தங்கைச்சிக்கு உத்தியோக மாப்பிள்ளையாக எடுத்துவிடு...அப்பொழுதுதான் என் ஆத்மா சாந்தியடையும்' என்றுகூறி முடிப்பதற்குள் அவள் கண்கள் மூடின...இருதயம் நின்றது. தந்தையை இழந்திருந்த நாங்கள் தாயாரையும் இழந்து அனாதைகளானோம்.......

என் தாயாரின் லட்சியத்தைநிறைவேற்றி வைக்க மாப்பிள்ளை வேட்டையில் இறங்கினேன். எனக்கு அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் அத்தனைபேரின் உதவியையும் நாடினேன்...அடுத்தடுத்து முயன்றால் ஆகாதது ஒன்றில்லை என்பார்கள். ஆனால் என்விஷயத்தில் இது பொய்யாய், பழங்கதையாய் போயிற்று.

கடைசியாக யாழ்ப்பாணத்துக்கே உரிய பழக்கப்படி தரகர் சின்னப்புவின் உதவியை நாடினேன். எங்கள் கிராமத்தில் தரகர் சின்னப்புவைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. காரணம்: இன்று பிள்ளைகுட்டிகளோடு பலர் குடியும் குடித்தனமுமாக இருக்கக் காரண புருஷர் இந்தத் தரகர் சின்னப்புதான்.

"என்ன சின்னப்பு அண்ணே, என் தங்கச்சி விஷயத்தையும் கொஞ்சம் கவனிக்கக் கூடாதா?" "என்ன தம்பி இப்படிக் கேட்கிறாய்...இந்தத் தைக்குள்ளே நான் நல்ல மாப்பிள்ளை கொண்டு வருகி

(15-ம் பக்கம் பார்க்க)

## கதை, கட்டுரை, கவிதை அனுப்புவோருக்கு...

- பத்திரிகைக்கு அனுப்பப்படும் கதைகள் எழுதியவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்.
- நல்ல காகிதத்தில் இடையீடுகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். காகிதத்தின் மறு பக்கத்தில் எழுதக் கூடாது.
- கதை, கட்டுரை காகிதத்தில் நாலு பக்கந்திற்கு மேற்படாததாகவும், கவிதை காகிதத்தில் ஒரு பக்கத்திற்கு மேற்படாததாகவும் இருக்க வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படாத கதை கட்டுரை, கவிதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் அவற்றுடனேயே போதிய தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டும். தபால் தலைகள் வைத்து அனுப்பாதவற்றைத் திருப்பியனுப்புவதற்கில்லை.
- கதை, கட்டுரை, கவிதை சம்பந்தமாக எந்த விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்வதற்கில்லை.

—ஆசிரியர்.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கை அரசு

# தமிழரசுத் தலைவர்களின் குற்றச்சாட்டை தட்டிக் கழித்து விட முடியாது

—0—

## மன்னார் சம்பவம் பற்றி 'இந்தியன் எக்ஸ்பிரெஸ்' தலையங்கம்

"மன்னாரில் நீண்டகாலமாக வசித்துவரும் மக்களைக் 'கள்ளக் குடியேற்றக்காரர்' எனக் கூறி, தமிழ்ப் பகுதியான வடக்கில் பலரையும் கைது செய்து வருகிறார்கள் என்ற தமிழரசுக் கட்சித் தலைவர் ஒருவரின் குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கம் தட்டிக் கழித்து விட முடியாது. ஏனெனில், இந்தக் குற்றச்சாட்டை இந்தியத் தூதுவராலயமும் ஊர்ஜிதம் செய்திருக்கிறது" இவ்வாறு இந்தியாவில் வெளியாகும் ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை, 'இந்தியன் எக்ஸ்பிரெஸ்' தனது தலையங்கத்தில் 2-11-63 இதழில் குறிப்பிட்டுள்ளது. இத்தலையங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"தென்னிந்தியாவிலிருந்து வரும் கள்ளக் குடியேற்றக்காரரைத் தடுத்து நிறுத்துவதற்காக இராணுவத்துக்கும், பொலிசுக்கும பரந்த அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளமையால் அவை துர்ப்பிரயோகம் செய்யப்படுவதில் ஆச்சரியமில்லை. திரு. செல்வநாயகம் முறைப்பாடு செய்துள்ள 'பயங்கர ஆட்சி'க்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது, இலங்கை அரசாங்கம் தனது மக்களுக்கு ஆற்ற வேண்டிய பொறுப்பாகும்.

செப்டம்பர், 1954ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு நாளும் முப்பது இந்தியர்களுக்கதிகமாக இலங்கையை விட்டுச் சென்றுள்ளனர் என்று கணிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இப்பொழுது ஒன்பது வருடங்களில் ஏறத்தாழ 1,05,800 இந்தியர்கள் வெளியேறியுள்ளனர். நேர்முகமாகவும், மறைமுகமாகவும், அந்த நாட்டில் வாழ்க்கை நடாத்துவதையே, சிரமமாக்குவதற்கு அண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு முன்னர், 'நாடற்றவர்கள்' என அழைக்கப்படுவோரின் தொகை பத்து லட்சத்துக்கும் குறைவாகவே இருந்தது. ஜனத்தொகையின் இயற்கை உற்பத்தியை எடுத்துக்கொண்ட போதிலும் கூட, இப்பொழுது அந்த எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

"கள்ளக் குடியேற்றக்காரர்" ஒரு பிரச்சினையாகவும் இருந்துள்ளனர்; ஒரு பிரச்சாரப் பூதமாகவும் இருந்து வந்துள்ளனர். பிரச்சாரப் பூதம் பெருத்துக் கொண்டு வருகின்ற அதே நேரத்தில், பிரச்சினை சுருங்கிக் கொண்டு வருகிறது. ஏனெனில், பாக்குநீரிணைக்கு அப்பால் பாலும் தேனும் பாய்ந்தோடும் நாடொன்றுண்டு என்று தம்மைத் தாமே ஏமாற்றி வந்த மக்கள் தொகை வர வரக் குறைந்து விட்டது. அத்துடன், சென்னை ராச்சியத்தில் மேலும் மேலும் தொழிற்துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருவதால், இனிமேலும் சிங்களக் குறுகிய தேசியவாதத்தின் அனுதாபத்தில் நம்பிக்கை வைத்துச் சீவிக்க யாருக்கும் வினைவா பிறக்கப் போவதில்லை.

இலங்கையில் உள்ள இந்தியர் கட்டாயமாக வெளி

(13-ம் பக்கம் பார்க்க)

# அரசியல் நிலையும் கடமையும்

—திருநாவுக்கரசு—

பழந்தமிழ் இலக்கியம் படைத்துப் பாராண்டு பரணி பாட வாழ்ந்த திராவிடப் பெருங்குடி மக்கள் நாம் என்பதை, இளைஞர் குலத்திலகங்களே, உணருங்கள்.

இன்றைய சிங்கள ஆட்சி பீடம் எம்மைச் சிறுபான்மையோராக்கி எமது இனத்தையும் மொழியையும் எம் சொந்த நிலத்தையும் பறித்துவிடக்கங்கணம்கட்டி நிற்கிறது எமது இனமும் மொழியும் சின்னாபின்னப் படுத்தப்படும் இந்த வேளையில் வீர இனத்தில் உதித்த இளைஞர்களாகிய நாங்கள் ஊமைகளாக உணர்ச்சியற்றவர்களாக வாழ்வதா?

எந்த ஓர் இனத்தின் வாலிபர்கள் எழுச்சியற்று வாழ்கிறார்களோ அந்த இனம் அழிந்து போவது உறுதி. இதை நினைவுறுத்துங்கள்.

சுதந்திர தாகங் கொண்ட இலட்சக் கணக்கான இளைஞர்கள் உயிரோடு இருக்கையில் எமது தமிழ்த்தாயும் தாய்த்திருநாடும் அக்கிரமக்காரர் ஆட்சியில் அழிந்து போவதா? அஞ்சாத நெஞ்சுரம் கொண்ட இளைஞனே, புறப்படு. மங்காத புகழ் படைத்த தமிழ்த் தாய்க் குலமே, உன் தனயருக்கு விடை கொடு.

லாடா நாட்டில் இருந்து நாடுகடத்தப்பட்டு இந்த நாட்டின் கரையிலே வந்திறங்கிய விஜயனும் அவன் கூட்டத்தாருமே கள்ளத் தோணி, நாங்களல்ல, என்பதை நிலை நாட்டு. அடிமைத் தனத்தால் சூழப்பட்ட எமது தாய்த்திருநாடும் விடுதலை பெறும் வரை ஓயாதே!

தனது அழகிய கரங்களில் பூட்டப்பட்டிருக்கும் அடிமை விலங்கை உடைத்தெறியத் தன்வாலிப சமுதாயத்தைக் கூவியழைக்கிறாள் தமிழ் அன்னை. இளைஞனே புறப்படு, புறப்படு!

[இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி புங்குடுதீவுக் கிளையின் மாத வெளியீடான 'புங்குடுதீவுக்' குரலில் இருந்து எடுக்கப்பட்டது.]

## தமிழினம் உரிமை பெற்று....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பழம் பெருமை வாய்ந்த எங்களுடைய இனம் இன்று பரிதாபகரமான நிலையிலே நின்று பரதவிக்கிறது. இந்த நிலை நீடித்தால் நாளைய நிலை என்ன என்பதை நினைக்கவே நடுங்குகிறது. தமிழனை ஒழித்துக்கட்டத் தமிழனையே கருவியாக மாற்றத் துணிகரமாக இந்த அரசாங்கம் வஞ்சக வலையை விரித்து விட்டது. சிங்களத்தைப் படியுங்கள். நாட்டைச் சர்வ சிங்கள மயமாக்குங்கள். பதவி தருகிறோம். பட்டமும் பணமும் தருகிறோம் என்று அழிவுப் பாதைக்கு அழைக்கும் விலைமானதைப்போல் ஆசைகாட்டி மயக்குகிறது. சிலர் இந்த வலையிலே விழ்ந்துவிட்டார்கள். ஆனால் அந்த வலையை வெட்டியெறியும் வீரப் பணியிலே இன்று என்னுடைய அப்பாவைப் போன்ற ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பட்டம்-பதவி-பணம் என்ற பல விதமான பகட்டுகளையும்—'ப்பூ' என்றூதித் தள்ளியவர்களை வேறொரு சோதனை உன் போன்ற துரோக சிந்தனையுடைய மனைவியர் உருவில் நெருக்குகிறது.

### வீரத் தாய்மார்கள் வேண்டும்

எங்கள் இன விடுதலைப் போராட்டத்திலே அரசாங்க ஊழியர்கள் பங்கு மிகவும் முக்கியமான ஒன்று. அந்தப் போராட்டம் இன்று நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது. பதவி விரட்டுகிறது—அரசாங்கம் மிரட்டுகிறது-உடன் இருப்பவர்களின் துரோகம் வெருட்டுகிறது—எதிர்காலம் விழிகளை உருட்டி உருட்டிப் பயமுறுத்துகிறது. நான்கு திசைகளிலுமிருந்து வருகிற எதிர்ப்புகளையெல்லாம் துச்சமெனக் கருதிப் போரிடுகிறவர்களை உன் போன்றோர் திசை மாற்றினால் அதை எந்தக் காலத்திலும் மறக்க முடியாது! மன்னிக்க முடியாது!

எல்லாம் எங்களுடைய குழந்தைகளின் நலனுக்காகத்தானே? என்று எங்களைக் காரணமாகக் காட்ட முயல வேண்டாம். நாளைக்கு நாம் ஒரு துரோக பரம்பரையாக—ஒதுக்கித்தள்ளப்பட்டுக் காறியுமிழப்பட்டுத் தலை குனிந்து அவமானத்தைச் சுமந்து வாழ வைக்குமே உங்கள் துரோகம்? இதுவா எங்களுக்கு நீங்கள் தேடும் நலன்? வேண்டாமம்மா! இனிமேலாவது சரியாகச் சிந்திக்க முயலுங்கள். எங்களுடைய இனம் மானமாக வாழ வேண்டும். எங்கள் சமுதாயம் வாழ்ந்தால்தான் நாமும் வாழுவோம். அது தான் நமக்குப் பெருமை. எங்களுடைய போராட்டம் வெற்றிகரமாவதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம். அந்த ஒத்துழைப்பு உருவாவதற்கு ஒவ்வொரு பெண்ணும் வீரத் தாயாக மாற வேண்டும்.

ஆகவே அம்மா, உனது ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் தந்து அப்பாவைப் போராட்டத்திலீடுபடும்படி செய். புதியதொரு சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியிலீடுபடும்படி செய். எத்தனை துயர் வந்தாலும் எமது சமுதாயத்தின் விடுதலைக்காக அவற்றையெல்லாம் தைரியமாக எதிர்த்து முன்னேறுவோம் என்று உறுதிகொள். கட்டாயம் உனது கருத்தை நீ மாற்றிக் கொள்ள வேண்டும். உழைப்பிலே தான் உண்டு உயர்வு. உல்லாசத்திலல்ல. எமது இனத்தின் விடுதலைக்காக எதையும் தாங்குவேன் என்று இன்றே சபதமெடு.

## மக்கள் குரல்

### தூதுகோஷ்டி ஒன்று அனுப்புக

பின் வரும் காரணங்களுக்காக, இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்க முடியுமா?

(அ) வாழ்க்கையின் சகல துறைகளிலும் தமிழ் பேசும் மக்களுக்கெதிராகப் பாரபட்சம்.

(ஆ) தமிழ் பேசும் மக்களுக்கெதிராக, ஐக்கிய நாடுகள் சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படல்.


(இ) இலங்கை சுதந்திரமடைந்து 14 வருடங்களாகியும், தமிழ் பேசும் சிறுபான்மை இனம் சுதந்திரம், நீதி, அமைதி ஆகியனவற்றைப் பெறவில்லை. தமது தாயகத்திலேயே அவர்கள் தமது தாய் மொழியை உபயோகிக்க அவர்களுக்கு உரிமையில்லை. சிறுபான்மை உரிமைகள் இங்கு மீறப்பட்டுள்ளன.

(ஈ) இலங்கை ஐக்கிய நாடுகள் சபை அங்கத்தவராவதற்கு இந்தியப் பிரதமர் உதவி செய்தார். தமிழ் பேசும் மக்களுக்கெதிராகப் பாரபட்சம், அவசர கால நிலை 1958 இவற்றை எல்லாம் அவர் அறிந்திருந்தும், இந்த அநீதிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்காததுடன் 'உள் நாட்டு விவகாரங்களில் குறுக்கிடு செய்ய முடியாது' என்று விட்டார். 'உள் நாட்டு விவகார'மான தென் வியற்நாம் விஷயத்தில் ஈடுபட்டாரே, அதை எப்படி அவரால் செய்ய முடிந்தது?

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அங்கத்துவ நாடாகிய பின், இங்கு பல ஐ. நா. கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் சபைக்கு, இதுவரை ஒரு தனி நபராவது இங்குள்ள நிலைமையைக் கவனத்துக் கொண்டுவரத் தைரியமுள்ளவராக இருக்கவில்லை என்பது பரிதாபத்துக் குரியதாகும். அதே நேரத்தில், தென் வியற்நாமில் நிலவி வந்த நிலைமை குறித்துப் பலரும் முதலைக் கண்ணீர் வடித்ததுடன், ஐ. நா. சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினர். உண்மை நிலையை அறிந்து வர. ஐ. நா. சபை ஒரு தூது கோஷ்டியை வியற்நாமுக்கு அனுப்பி வைத்தது. ஆனால் சிறுபான்மையினர்—முக்கியமாகத் தமிழ் பேசும் சிறுபான்மை இனம், இங்கு எவ்விதம் நடாத்தப்படுகின்றனரென்பதை அறிய இவ்வித தூது கோஷ்டி அனுப்பப்படவில்லை.

கே. எஸ். சவுந்தரநாயகம்
மானிப்பாய்


Dial 2739




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து நகைச்சுவை ஜோடியினர் ஒரே படத்தில்

## பாடல்களை ஈழத்துக் கவிஞர் எழுதுகிறார்

(நமது சென்னை நிருபர்)


**சந்திரபாபுவின் கதை; சந்திரபாபுவின் டைரக்‌ஷன்; சந்திரபாபு உட்பட ஐந்து நகைச்சுவை ஜோடியினர் இந்தப் படத்தில் நடிக்கிறார்கள் என்றால், சிரிப்புக்குக் கேட்கவா வேண்டும்?**

அண்மையில் ஐந்து நகைச்சுவை ஜோடியினரும் இணைந்துள்ள காட்சியொன்றை ஜுபிலி ஆர்ட்ஸின் 'மாடி வீட்டு ஏழை' படத்துக்காகப் படமாக்கினார்கள்.

சந்திரபாபு, டி. ஆர். ராமச்சந்திரன், சுதன், ராமசாமி, சண்முகம் ஆகியோரின் ஜோடிகளாகப் 'பெரிய இடத்துப் பெண்' புகழ் மணிமாலா, ஜி. சகுந்தலா, சுகுமாரி, ஜெயந்தி, திலகம் ராஜகுமாரி ஆகியோர் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

எம். ஜி. ராமச்சந்திரன், சாவித்திரி, பாலாஜி முதலியோர் பிரதான பாகங்களில் நடிக்கிறார்கள். ஆரூர் தாஸ் வசனம் எழுதியுள்ளார்.

இப்படத்திற்கான மூன்று பாடல்களை இலங்கை மட்டக்களப்பைச் சேர்ந்த கவிஞர் காசி. ஆனந்தன் எழுதியுள்ளார்.



சந்திரபாபு

"காசையா வந்தாரய்யா
ஆசையைத் தந்தாரய்யா
ஏழையை விட்டாரய்யா
மாடியைத் தொட்டாரய்யா"

சந்திரபாபு வயிற்றிலே தாளம் போட்டு இந்தப் பாட்டைப் பாடும் காட்சி ஒன்றும் அண்மையில் படமாக்கப்பட்டது.

# நிலம் வாங்கிக் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறைப் பிரதிநிதி (திரு. எஸ்.ஜே. வி. செல்வநாயகம்) அவர்கள் வெளிநாடு செல்வதற்கான பிரயாணப் பத்திரத்திற்கு மனுப் பண்ணியபொழுது அவர் மலேயா நாட்டில் பிறந்த வரானபடியால் தனது தந்தையும் பேரனும் இந்த நாட்டில் பிறந்தவர்கள் என்று நிரூபிக்க முடியாது போன காரணத்தினால் பிரித்தானியா பிரசை என்று அவருக்குப் பாஸ்போட் வழங்கப்பட்டது. இவ்விதமான பாஸ்போட்டைத்தான் வழங்க முடியுமென்று பாதுகாப்பு வெளிநாட்டு விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி அந்த நேரத்தில் கூறியபொழுது அக்கூற்றைத் தன்னால் ஒப்புக்கொள்ள முடியாதென்று அவர் கூறிவிட்டார். இந்த விதமான நிலையில் கனம் காங்கேசன்துறைப் பிரதிநிதியவர்களைப் போன்றவர்களே இருக்கும் பொழுது இந்த நாட்டிலுள்ள சாதாரணத் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எவ்வாறு தாங்கள் இந்த நாட்டுப் பிரசைகள்தான் என்று சுலபமாக அத்தாட்சிப்படுத்த முடியும்? நான், இங்கே குறிப்பிடுவது இந்த நாட்டிலுள்ள இந்தியத் தமிழர்களையும் இந்திய முஸ்லிம்களையும் மட்டும் பாதிக்கும் விஷயமல்ல. இந்த நாட்டில் தமிழ்ப் பெயரோடும் முஸ்லிம் பெயரோடும் இருக்கக்கூடிய சகல பிரசைகளையும் சந்தேகப் பிரஜைகளாக்கக் கூடிய பிரச்சினை இது. பிரஜாவுரிமைச் சட்டத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் அமைச்சர்களுக்கு வாய்ப்பானவர்களும் தப்புவதற்கு விதி செய்திருக்கிறார்கள்.

### வகுப்புவாத மனப்பான்மை

யார் யாரையெல்லாம் பரம்பரையான இலங்கைப் பிரஜைகள் என்று அமைச்சர் ஏற்றுக்கொள்ளுகிறாரோ அவர்கள் தங்கள் பிரஜாவுரிமையை நிரூபிக்கத் தேவையில்லை. அதைப் போல இந்தச் சட்டத்திலும் ஒரு விதியிருக்கிறது. பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி ஒரு குறிப்பிட்ட நபருக்கு அவர் இலங்கைப் பிரஜையென்று ஒரு நற்சாட்சிப் பத்திரம் வழங்கினால் போதும், அவர் இலங்கைப் பிரஜையாக ஏற்றுக்கொள்ளப்படுவார் என்று இங்கே விதியிருக்கிறது. யார் யாருக்கெல்லாம் இவ்வித அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும்? சிங்கள மக்களுக்கெல்லாம் இவ்வித அத்தாட்சிப் பத்திரங்கள் தங்குதடையில்லாமல் வழங்கப்படும். உண்மையில் சிங்களவர்கள் வேறு நாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு வந்திருக்கவும் முடியாதுதான். எனவே உண்மையில் இந்த விதி யாரைப் பாதிக்கப் போகிறது என்றால் இந்த நாட்டிலுள்ள சிங்களவர்கள் அல்லாத மக்கள் அனைவரையுந்தான் பாதிக்கப் போகிறது. அவர்களுக்குத்தான் கஷ்டங்களை ஏற்படுத்தப் போகின்றது. சிங்களப் பெயரோடு ஒருவர் நிலம் வாங்க விரும்பினால் அவருக்குத் தாராளமாகத் திரு. என். கியூ. டயஸ் அனுமதியளிப்பார். அதிலும் அவர் பௌத்தராக இருந்தால் சந்தேகமேயில்லாமல் நற்சாட்சிப்பத்திரத்தைக் கொடுத்து விடுவார். ஒரு வேளை பெர்ணண்டோ, பெரேரா போன்ற பெயரை உடையவர்களுக்கு அவர்கள் சிங்களப் பெயரைக் கொண்டிருந்தாலும் கூட, கத்தோலிக்கர்கள் என்ற காரணத்தால், இப்படியானவர்கள் தூத்துக்குடி போன்ற இடங்களிலும் இருக்கக் கூடும் என்று அவர் நினைத்து மறுக்கக் கூடும். அப்படியாக நினைக்கக் கூடிய மனப்பான்மை உள்ளவர்தான் திரு. டயஸ் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும்.

### முஸ்லிம்கள் படும் கஷ்டம்

இவ்வித மனோபாவமுள்ள ஒருவரின் கையில்தான் இப்படியான ஒரு அதிகாரத்தை இன்று ஒப்படைக்கிறார்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

## 'எனது தாய்' சித்திரக் காட்சி

### ஜப்பானில் நடைபெறும்

'எனது தாய்' சித்திரக் காட்சியொன்று ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் ஏப்ரல், 1964ல் நடைபெறவிருக்கின்றது. இச்சித்திரக் காட்சி குழந்தைகளுக்கானது உலகனைத்திலுமுள்ள நாடுகளிலிருந்து சிறுவர், சிறுமியர் அனுப்பிய சித்திரங்கள் இக் காட்சியில் இடம் பெறும்.

இந்த 'எனது தாய்' உலகச் சித்திரக் கண் காட்சியின் நோக்கம், தாயின் மகிமையையும், பெருமையையும் வலியுறுத்துவதும், குழந்தைகளின் நல்வளர்ப்பிற்கு தாயின் பங்கு எவ்வளவு அவசியமென்பதை எடுத்துக் காட்டுவதுமேயாகும்.

'எனது தாய்' என்ற தலைப்பில், குடும்ப வாழ்வில் தாய் நடுநாயகமாக விளங்குவதைச் சித்தரிக்கும் காட்சியை வரைய வேண்டும். அல்லது, தாயின் வாழ்வில் ஒரு கட்டத்தையும் வரையலாம். ஆனால், எந்த வகையிலும் தாய் தான் சித்திரத்தின் நாயகியாக இருக்க வேண்டும்.

கண் காட்சிக்கு அனுப்பப்படும் படங்கள் ஏப்ரல், 1963 லிருந்து வரையப்பட்டதாக இருக்க வேண்டும். பங்கு பற்றும் சிறுவர், சிறுமியரின் வயது 6க்கும் 14க்குமிடையே இருக்க வேண்டும். வரையப்படும் சித்திரத்தின் அளவு குறைந்தது, 30 அங்குலம் நீளமும், 20 அங்குலம் அகலமுமாக இருக்க வேண்டும். படங்கள் அனுப்ப வேண்டிய முடிவு திகதி, ஏப்ரல் 1, 1964 ஆகும்.

இலங்கையிலுள்ள சிறுவர், சிறுமியரும், இவ்விதிகளுக்குட்பட, இக் காட்சியில் பங்கு பற்றலாம்.



பம்பாய் நகரில் இருபத்தைந்து வாரங்கள் வெற்றிகரமாக ஓடி வெள்ளி விழாக் கொண்டாடிய இந்தி இசைச் சித்திரமான 'ஜிஸ் தேஷ் மே கங்கா பெஹ்தி ஹை'யில் பத்மினியும் ராஜ் கபூரும் இப்படித் தோன்றுகிறார்கள். தீபாவளி வெளியீடாக [illegible] திரை ஓவியம் காட்சியளிக்க விருக்கிறது.

## எமது விமர்சனம்

# ஸ்பூட்னிக் சுருட்டு

சிறந்த வானொலி நாடகங்களை சிருஷ்டித்து, நாடக ஆசிரியராக முன்னணியில் நிற்கும் திரு. சி. சண்முகம் அவர்களின் 'ஸ்பூட்னிக் சுருட்டு' என்னும் நாடகம் 3-11-63 ஞாயிற்றுக்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் நடந்தேறியது. இந்நாடகத்தை நோக்குமிடத்து, அவரின் சந்தேகம் போல் 'கதையில்லாமல்', மூன்று மணித்தியாலமும் சலிப்புத் தட்டாமல் நடிக்கப்பட்டதென்றால் பண்டாவாக நடித்த திரு. எஸ். ஆறுமுகம், கந்தப்புவாக நடித்த திரு. எஸ். எஸ். கணேசபிள்ளை (வரணியூரான்) ஆகிய இருவருமே போற்றுதலுக்கு உரியவர்கள். இருவரும் தம் நடிப்பையும் எதிர்காலத்தையும் இந்நாடகம் மூலம் காப்புறுதி செய்துள்ளார்கள் என்றால் மிகையாகாது.

கதையைக் காண முடியாவிட்டாலும், நாடகக் கலையின் வளர்ச்சியின்மைக்குரிய காரணங்களை எடுத்துக் காட்டி, கலைஞர்களுக்குள்ள இடர்ப்பாட்டினை வெளிப்படுத்தி நகைச்சுவையாக எழுதப்பட்ட காரணத்தினாலோ என்னவோ, இவர்கள் வெளிப்படுத்திய காரணங்களும் 'நடிப்பு'த்தான் என்று எண்ண வைத்துவிட்டன. இல்லையெனில், கலைஞர்களுக்குள் ஏற்படும் 'காதல்' நோயை நாடகக் கலை வளர்ச்சியின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகக் கூறிவிட்டு நாடகத்தின் முடிவை நடிகை ஒருத்தியின் காதல் திருமண முடிவாக அமைத்திருக்கத் தேவையில்லை.

வரணியூரான் தனது அனுபவத்தையும் வல்லமையையும் வேலாயுதமாக நடித்த திரு. ஆர் விக்டர் அவர்களின் நடிப்புப் பாணியைத் திருத்துமிடத்தும், நிர்மலாவாக நடித்த நிர்மலா ஜோர்ஜின் பேச்சில் குழைவில்லை என்று கூறுமிடத்தும், விறுவிறுப்பான வில்லன் பாகம் ஏற்று, கணபதியாக நடித்த திரு. அலெக்சாண்டரின் உச்சரிப்பு உளறுபடியை உறுக்கித் திருத்துமிடத்தும் காண்பித்துவிட்டார். ஆங்கிலக் கலப்புடன் உரையாடல் நடைபெற்றதாயினும் சுப்பையாவாக நடித்த திரு வி. சுந்தரலிங்கம் தனது ஆங்கில உச்சரிப்பைக்கொலை செய்ததுடன், அதிகமாக உடலை அசைத்து நகைப்புக்கு இடமாக இருந்திருக்கத் தேவையில்லை.

பெண் பாத்திரங்களைப் பற்றிக் கூறுமிடத்து யோகம்மாவாக நடித்த இராஜேஸ்வரி சண்முகம், உண்மையான நவநாகரிக நங்கையாக நடித்ததுடன், கொடுக்கப்பட்ட சிறிது வேளையில் தனது நடிப்பின் தராதரத்தை நல்ல முறையில் பதிய வைத்துவிட்டார். எவரையும் கவரக் கூடியதாக மிகவும் கசிதமாக முகபாவனைகளைக் காட்டி நடித்த போதும், நிர்மலா ஜோர்ஜ் அவர்கள் சில சமயங்களில, சோகமே உருவாக நிற்க வேண்டிய வேளையில்-சக நடிகர்களின் நகைச்சுவை தம்மைச் சிரிக்க வைத்துவிட விடுகிறார். இவர் தன்னிலை மறவாமையைமுக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

நாடகத்தின் வெற்றிக்கு வசனமும், பாத்திர அமைப்பு முறையுமே முக்கிய காரணங்கள் என்று கூறினால் மிகையாகாது.

ஒலி, ஒளி, மேடை அமைப்பு, சங்கீத அமைப்பு அழகாக அமைந்திருந்தன. இரசிகர்கள் கூக்குரலிடாமல் ஒழுங்காக இருந்திருந்தால் நாடகம் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும். மொத்தத்தில் 'ஸ்பூட்னிக் சுருட்டு' கதையின் சாரம் போல் புகைந்து சாம்பலாகாமல் 'செம்பிலே பாலில்லாத பாற்காவடி' என்றே கூற வேண்டும்.

—சிங்கம்.

# வளர்ந்து வரும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தான், செய் நன்றி மறந்த இவ்வரசு நாடுகடத்த வேண்டும் என்று திட்டம் போடுகிறது. திட்டம் போட்டுத்தான் தொழிலாளரை வஞ்சிக்கின்றனர்.

### நம்பிக் கெட்டோம்

இருக்கின்ற அத்தனை தொழிலாளரும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏன் நமக்கு மட்டும் இந்த தாழ்வு நிலை? எல்லாம் நாம் நம்பிக் கெட்டதுதான் காரணம். அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று அறிவிழந்து, எவர் சொன்னதையும் ஆராய்ந்து பாராமல் அடிமைப்பட்டு அல்லல்பட வேண்டியுள்ளது.

சுயநலத்திற்காகக்கட்சி நடாத்தி வந்த கதையை இன்று தொழிலாளர் உணர்ந்து வருகின்றனர். ஆகவேதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இலங்கைத் தொழிலாளர் கழகம் எல்லா வழியிலும் வகையிலும் செயலாற்றி இழந்த உரிமைகளை மீட்க, தமிழினத்தை இணைந்து நின்றுபோராட அழைக்கிறது.

### ஒன்று கூடுவோம்

அடிப்படை உரிமைகளை இழந்து அஞ்சி அஞ்சி வாழ்வதா, என்று அத்தனை தொழிலாளரும் கேட்கின்றனர், அடிமை வாழ்வு அகற்றப்பட வேண்டும்! அனைவரும் திரண்டெழுவீர், ஆதரவு தாரீர். ஆண்ட இனம் மீண்டும் ஆளவேண்டும்! நாளும் பொழுதும் வளர்ந்து வரும் கழகம் நல்லோரை அழைக்கிறது, நாடுவோம். கூடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்யூனிச மண்டலத்தில்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கணிப்பு கைமேல் பலனைக் கொடுக்கும்.

### கொம்யூனிசத்தின் உண்மை

அடுத்து, உலக ரீதியில் கொம்யூனிசம் இயங்கவேண்டும் என்ற பின்னைய தத்துவமே இன்று கொம்யூனிச வளர்ச்சியைத் தடுப்பதற்குப் பெரும் அரணாக விளங்குகிறது. இந்தக் கொள்கை கொம்யூனிச இயக்கத்துள்ளேயே ஐந்தாம் படை வேலை செய்கிறது.

கொம்யூனிஸ்டுகள் உலக ரீதியில் தங்களைக் கட்சிக்கு ஒப்படைத்துக் கொண்டார்கள். உலகத்திலுள்ள பெரும்பாலான கொம்யூனிஸ்டுகளின் எண்ணத்தையே, எந்த நாட்டின் கொம்யூனிஸ்டுகளும் பிரதிபலிக்க வேண்டும். தன் தாய்நாட்டு நலனுக்கு உலக கொம்யூனிஸ்டுகள் குறுக்கே நிற்க நேர்ந்தால் அப்போதும் தன்னை கொம்யூனிஸ்டாக-உலக கொம்யூனிஸ்டின் ஓர் அங்கமாக ஒரு கொம்யூனிஸ்டு வாதியால் எண்ணிக்கொள்ள முடியுமே தவிர, தன் தாய் நாட்டிற்கு தன் நெஞ்சில் முதலிடம் இருக்க முடியாது. அப்படித் தன் தாய் நாடுதான் உயிர் என்று எண்ணுகிறவன் உலக கொம்யூனிசத்தில் அங்கமாக இருக்க முடியாது. இது தான் இன்றைய கொம்யூனிசத்தின் உண்மை நிலை.

இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி ஒரு கொம்யூனிஸ்டாகவே தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்தான். ஆனால், கொம்யூனிசம் தனது நாட்டுப் பற்றிற்குத் தடைக் கல்லாக இருப்பதைத் தெரிந்து கொண்டதும், கொம்யூனிஸ்டுக் கட்சிக்கு முழுக்குப் போட்டான்.

அமெரிக்காவில் கூட கொம்யூனிஸ்டுக் கட்சிக்கிளை உண்டு. ஆனால், அமெரிக்கரும், ரஷ்யரும் எதிலும் நான் முந்தியா? நீ முந்தியா? என்ற எதிரும் புதிருமான நிலையில் - மனப்பான்மையில் வாழ்பவர்கள். எனவே அமெரிக்க மக்களைப் பார்த்து ரஷ்ய தலைமையை ஏற்றுக் கொள்ளும்படி கொம்யூனிஸ்டுகள் கூறினால் ஒப்புவரா?

### சீன-இந்திய யுத்தம்

பாரதத்தின் மீது சீனா ஆக்கிரமிப்பு நடாத்திய பொழுது, பாரத நாட்டில் உள்ள கொம்யூனிஸ்டுகள் மௌனமாகவும் சிலர் சீனாவுக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டார்கள். எந்தக் கொம்யூனிஸ்டும் சீனாவைப் பகிரங்கமாகக் கண்டிக்கவோ அல்லது பாரதத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்றவோ ஏனைய இயக்கங்கள் செயல் பட்டளவு செயல்படவில்லை. அவர்கள் உலக கொம்யூனிஸ்டுகளாகவே இருந்துவிட்டார்கள்.

'உலகத் தொழிலாளர் கழகத்தை' நடாத்திய மார்க்ஸ், கொம்யூனிஸ்டு இயக்கமும் உலக ரீதியில் இயங்க வேண்டுமென்று விரும்பினார். உலக ரீதியில் கொம்யூனிசம் இயங்க வேண்டுமென்ற தத்துவம், இயக்கம் வளர்ந்த நிலையில், முரண்பாட்டை உருவாக்கும். இன்று அந்த முரண்பாடே சீன-ரஷ்யப் பிணக்கு.

கொம்யூனிசத்தின் தலைமைப் பீடம் ரஷ்யாவில் இருப்பது சீனக்கொம்யூனிஸ்டுகளுக்கு ஏதோ சுயமரியாதை இழந்தது போன்ற நிலையை உருவாக்கியுள்ளது. இந்த மன வேக்காடு இன்று விசுவரூபத்தை அடைந்துள்ளது.

ஒன்றி நின்ற கொம்யூனிச மண்டலம் இரண்டு பட்டுவிட்டது. 'உலக ரீதியில் கொம்யூனிசம் உருவாக வேண்டும்' என்ற மார்க்சிச தத்துவக் கோட்பாடு மீண்டும் எங்கோ எட்டாத தூரத்தில் உள்ள கற்பனைக்கதையாகிவிட்டது. இதை உணர்ந்த குருஷ்சேவ் மார்க்சிச தத்துவத்திற்குள் ஒரு புரட்சியை செய்துள்ளார். அது 'வேறுபட்ட அரசியல் கருத்துள்ளவர்களிடமும் கொம்யூனிஸ்டுகள் ஒத்து வாழ வேண்டும்' என்பதேயாகும்.

இன்று சீனக் கொம்யூனிஸ்டுகளுக்கும் ரஷ்யக் கொம்யூனிஸ்டுகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் பிணக்கு தாய்நாட்டுப் பற்று என்ற சுய கௌரவத்தினால் ஏற்பட்ட வேறுபாடேயாகும்.

ஆனால் ஏனைய நாடுகளில் இருக்கக்கூடிய கொம்யூனிஸ்டுகளும் இன்று பிளவுபட்டு நிற்கிறார்கள். இவர்கள் பிளவுபட்டிருப்பதன் நோக்கம் யாருடைய தலைமையை ஏற்பது என்பதே. இதற்கு அவர்கள் மொழியில் கூறுவதானால் 'தத்துவப் போராட்டம்.' தலைமைப் பதவியை ஏற்கும் 'தத்துவப் போராட்டம்.'

(அடுத்த இதழில் முடியும்)

### 80-வது வில்லுப் பாட்டு

மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம் வில்லுப்பாட்டுக் கலைக் குழுவினர் அண்மையில் ஆரையம்பதி மகா வித்தியாலயத் தமிழ்ச் சங்கத்தில் 80-வது வில்லுப் பாட்டுக் கச்சேரியை அரங்கேற்றினர்.

அன்றைய நிகழ்ச்சியில் "நகைச்சுவைக் குமரன்" மாஸ்டர் சிவலிங்கம், 'இசைக் குமரன்' முருகப்பா, கவிஞர் குணரெத்தினம், ஆர். டி. கிருபைரெத்தினம் ஆசிரியர், ஜீ. பாஸ்கரன், கந்தசாமி, சிவராசா, தவராசா ஆகியோர் பங்குபற்றினர்.

---

### 'மன்னிப்பின் மகிமை,

மட்டக்களப்பு அர்ச். சிசிலியா கொண்வெண்டில் 'மன்னிப்பின் மகிமை' என்ற சரித்திர நாடகம் அரங்கேற்றப்பட்டது. அரசராகச் செல்வி இரவீந்திர இராசதுரை, இளவரசனாகச் செல்வி அன்ரநெற் மரிய செல்வம், இளவரசியாகச் செல்வி சந்திரவதனி செபமாலை, மந்திரியாகச் செல்வி எலிசபெத், இளவரசரின் தாயாராகச் செல்வி திருமலை ராணி ஜோண்மேரி, ராஜகுருவாகச் செல்வி ஜோசப்பியன் ஆசதுரை, குறத்தியாகச் செல்வி பிறிச்சட் ஆகியோர் தோன்றித் திறம்பட நடத்தனர்.

---

# தமிழரசுக்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றப்படுவதுடன், "நாடற்றவர்கள்" எனப்படுவோருக்கெதிராகக் கடுமையான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. ஆகவே தான், மன்னாரில் இராணுவத்தினரதும், பொலீசாரதும் நடவடிக்கைகள் அளவுக்கு மீறி மேற்கொள்ளப்படுகின்றன. வேண்டாதவர்களை வெளியேற்ற இலங்கை அரசாங்கத்துக்குரிய உரிமையிலும் மேலதிகமாகச் செல்கின்றன இந்த நடவடிக்கைகள்.

இந்தப் பரந்த உலகில், தேடிப் பார்த்தாலும் கூட, பரஸ்பர ஒத்துழைப்புக்கும், ஒற்றுமைக்கும் பாத்தியமான இரு நாடுகளை வேறெங்கிலும் பார்க்க முடியாத போதும், இந்த விதமான கொடூரமான நடவடிக்கைகள் இரு நாடுகளுக்குமிடையே நட்புறவு வளர்க்கக் கூடியதாக அமையமுடியாது.

# நிலம் வாங்கிக் கமம் செய்யும்....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வெளி நாடு செல்ல ஒரு பிரயாணப் பத்திரத்தையே பெற முடியாது கஷ்டப்படும்பொழுது ஒரு காணியை வாங்கவோ ஒரு தொழிலைத் தொடங்கவோ தமது பிரஜாவுரிமையை நிரூபிக்க எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை இச்சபையில் உள்ள அங்கத்தவர்கள் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். மெக்காவிற்கு யாத்திரை செய்ய வேண்டுமானால் தமது பாஸ்போட்டுக்களைப்பெறுவதற்கு இந்த நாட்டு முஸ்லிம் மக்கள் படுகின்ற கஷ்டங்கள் பற்றி நாங்கள் அறிவோம்.

அவர்கள் தாங்கள் இலங்கைப் பிரஜைகள் என்பதை அத்தாட்சிப் படுத்தும்படி கேட்கப்படுகிறார்கள். சாதாரணப் படிப்பற்ற பொது மக்களின் பிறப்புக்கள் இந்த முறையிலே எங்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன? 1897ம் ஆண்டுக்கு முன் பிறப்புக்களைப் பதிவது கட்டாயமாக இருக்கவில்லை. இந்த நிலையிலே தாங்கள், இச்சட்டத்தின்படி, இலங்கைப் பிரஜைகள் என்பதை எப்படி அத்தாட்சிப்படுத்த முடியும்? இந்த நிலையிலே இச்சட்டத்தைக் கொண்டு வருவது சரியா? வெளி நாட்டவர்கள் இந்நாட்டவரைச் சுரண்டும் நோககத்தோடு இந்நாட்டுச் சொத்துக்களை வாங்காமல் ஆக்குவதுதான் இச் சட்டத்தின் நோக்கம் என்றால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், இன்றைய நிலையில், மனித நீதிக்குக் கொஞ்சமாவது தமது மனத்தில் இடமுள்ளவர்கள் இச் சட்டத்தை எதிர்க்காமலிருக்க முடியாது என்பதை இச் சந்தர்ப்தில் இங்கு கூற விரும்புகிறேன்.

### இத்தகைய சட்டம் எங்கே உண்டு?

அது மாத்திரமல்ல, இச் சட்டத்தின் கீழ் ஒரு தந்தை தன்னுடைய மகனுக்கு ஒரு நன்கொடையைக் கொடுக்க விரும்பினாலோ அல்லது மரணச் சாசனத்தில் தன்னுடைய சொத்தை மகனுக்கு விட்டுச் செல்ல ஏற்பட்டாலோ அந்த மகன், தான் இலங்கைப் பிரஜை என்பதை அத்தாட்சிப்படுத்தினாலொழிய அவர் அச் சொத்தை அனுபவிக்க முடியாது! அப்படி அவர் அச்சொத்தை அனுபவிக்க வேண்டுமானால் அச் சொத்து அத்தனையுடையதும் பெறுமதியை அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் எந்த அரசாங்கமாவது இந்த உலகத்திலுண்டா?

### தொழில் இல்லை இருக்க இடமுமில்லை

சிறுபான்மைச் சமூகத்தினர் ஒவ்வொரு துறையிலும் நசுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள். அரசாங்க சேவையிலுள்ள சிறுபான்மையினர் தாங்கள் இலங்கைப் பிரஜைகள் என்பதை நிரூபிக்கக் கேட்கப்படுகின்றார்கள்; அரசாங்க சேவையிலிருப்பதென்றால் சிங்களம் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றனர்; அப்படிச் சிங்களம் படிக்காவிட்டால் வெளியேறும்படி செய்யப்படுகின்றனர். சிங்களவரைக் கொண்டதாக, அதிலும் பௌத்த சிங்களவரைக் கொண்டதாக — நான் நினைக்கிறேன் இனி, இதிலும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைக் கொண்டதாகத்தான் அரசாங்கசேவையிருக்க வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். அரசாங்க சேவையில்தான் தமிழ் பேசும் மக்களுக்கு இடமில்லையென்றால் ஒரு நிலத்தை வாங்கி, அதில் கமம் செய்யலாமென்றாலும் அதற்கும் இந்த நாட்டில் இடமில்லையா? அதற்குமா தடை? அதற்குமா நிரந்தரக் காரியதரிசியிடமிருந்து அத்தாட்சிபெற வேண்டிய கேவலமான நிலைமைக்குச் சிறுபான்மையினர் உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள் என நான் கௌரவ நிதி அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

### அக்கிரமமான சட்டம்

நெற்றி வியர்வை நிலத்தில் விழ இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குழைத்த 10 இலட்சம் மலைப் பிரதேச ஏழைத் தொழிலாளர்கள் தம் வருவாயில் ஒரு பகுதியைச் சேமித்து வந்தார்கள், தாங்கள் குடியிருப்பதற்கு ஒரு நிலத்துண்டை வாங்கலாமென்ற எண்ணத்துடன். அதற்குமா தடை? அவர்கள் அப்படி இருப்பதற்குக் கூடத் தடை போட்டால் அது மனிதாபிமானத்திற்கு உட்பட்டதாவென்று நான் இச்சபையில் இருக்கின்ற கௌரவ அங்கத்தினர்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். எனவே 1948ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் சந்தேகப் பிரஜைகளாக்கப்பட்ட தமிழ் பேசும் இலங்கை மக்கள் அத்தனை பேரையுமே இந்த விதி பாதிக்கின்றது. இந்த நாட்டில் நாடற்றவர்களாக்கப்பட்ட ஆனால் பிரஜாவுரிமைகு மனித நீதிப்படி உரித்துள்ள மலை நாட்டுத் தமிழர்கள் அத்தனை பேரையுமே இந்த விதி பாதிக்கின்றது. இந்த விதமான அக்கிரமச் சட்டத்தை மனிதாபிமானமுள்ள ஒவ்வொருவரும் இச்சபையில் எதிர்க்க வேண்டிய கடமையுள்ளவர்கள். இந்த மசோதா வெறுமனே நிதியோடு — அரசாங்கப் பண வருவாயோடு மட்டும் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. இந்த நாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படுத்தக்கூடிய சட்டம் இது. நிதி மசோதா என்ற போர்வையில் இந்த நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள ஒரு அக்கிரமமான சட்டம் இது.

# விரோத நடவடிக்கையில்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுக்கி, தங்களுக்குத் தனியாக ஓர் அரசை நிறுவிக் கொள்ளும் நோக்கத்துடன், நாட்டின் உண்மையான உரிமையாளர்களான சிங்களவர்களின் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்ளும் நியாயமான கோரிக்கைக்கு முட்டுக் கட்டை போட்டு வருகின்றது.

பெரும்பான்மையோரின் மொழியை மீண்டும் அரியாசனம் ஏற்றுவது தங்களின் உரிமைகளைப் பறிப்பதாகுமெனக் கூறுகின்றனர் இந்தத் தமிழ் வகுப்புவாதக் கட்சியினர். ஆயினும் ஆசியாவில் சில நாடுகளிலும், ஆபிரிக்காவில் சில பிரதேசங்களிலும் வசிக்கும் தமிழர்களுக்கும், ஏன், தென்னிந்தியத் தமிழர்களுக்கும் கூட அந்தந்த அரசாங்கங்களால் சட்டபூர்வமாக வழங்கப்படாத உரிமை எமது நாட்டிலே வசிக்கும் தமிழர்களுக்குத் தமிழ் உபயோகச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளதைத் தமிழரசுவாதிகள் பகிரங்கமாகக் கூற மறுக்கிறார்கள்.

உலகில் எந்த நாட்டிலும் பிரஜைகளல்லாதோருக்கு வழங்கப்படாத பல வசதிகள் பிரஜைகளல்லாத 15 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்களுக்கு இந்நாட்டில் அளிக்கப்பட்டுள்ளதையும் தமிழரசுக்கட்சியினர் பகிரங்கமாகக் கூற மறுக்கிறார்கள். இவ்வளவும் செய்தும் கூட, இலங்கையை ஒரு சின்ன சென்னையாக மாற்றி, இந்நாட்டின் உண்மையான [illegible] ங்கள இனத்தை அழித்துவிடுவதற்காக அன்னியர்களுடன் கைகோத்துள்ள செல்வநாயகங்கள் ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசி யூ. தாண்டுக்கு ஒரு மகஜர் சமர்ப்பித்திருப்பதாக அறியப்படுகிறது. இந்த மகஜரில் இலங்கை அரசாங்கத்துக்குத்துரோகமாகப்பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளனர்."


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## பொன்மொழிகள்

### அன்பு

அன்பு என்பது தியாகமே. அது எதையும் எடுத்துக் கொள்வதில்லை. கொடுத்துக் கொண்டேயிருப்பது தான் அதன் இயல்பு.
— சுவாமி விவேகாநந்தர்.

வாழ்வைக் குறித்த ஒரே விதி அன்பு. அன்புடையவன் தான் வாழ்கிறான். சுயநலக்காரன் செத்துக் கொண்டே இருக்கிறான். ஆதலால் அன்புக்காகவே அன்பு செய்.
— சுவாமி விவேகாநந்தர்.

### தெய்வ பக்தி

மக்கள் தெய்வத்தைத் தேடுவதும் பராசக்தியை நாடுவதும் ஒரு இயற்கை வேகம். காந்தம் இரும்பை இழுப்பது போல், கற்பூரம் நெருப்பைத் தேடுவது போல், மின்சக்தி எப்போதும் பூமியில் குதித்து மறையக் காத்திருப்பது போல், உயிரானது தான் பிரிந்த தெய்வத்தைத் தேடுகிறது. இதுவும் ஒரு இயற்கைப் பசி.
— ராஜாஜி.

தொகுத்தவர்:
செல்வி ஜெயராணி சபாபதிப்பிள்ளை,
மல்லாகம்.

### பதக்கம் பெற்றார்

மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் கல்லூரியால் வருடா வருடம் பொதுநல சேவைக்கென வழங்கப்படும் தங்கப் பதக்கம் இம்முறை செல்வி இந்திராணி மகேசனுக்குக் கிடைத்துள்ளது. செல்வி இந்திராணி மட்டக்களப்புச் சிறுவர் கலைக் கழகத்தைச் சேர்ந்தவராவர்.

## நீவிர் அறிவீர்!

உலகிலேயே மிக நீண்ட மலைத்தொடர் அண்டீஸ் மலைத்தொடராகும். இது ஆபிரிக்காவில் உள்ளது. இதன் நீளம் 5000 மைல்.

உலகிலேயே மிக உயர்ந்த உருவச் சிலை விடுதலைச் சிலை (The Statue of Liberty) யாகும். இது ஐக்கிய அமெரிக்காவிலே நியூயோர்க் நகரத் துறைமுகத்திலுள்ள பெட்லோஸ் தீவில் நிற்கின்றது. அமெரிக்காவின் நூறுவது ஆண்டு விடுதலைக் கொண்டாட்டத்தின் போது இது பிரான்சு அரசாங்கத்தால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது. இதன் உயரம் 150 அடி.

மிக நீண்ட பிரகாரம் (Corridor) எது தெரியுமா? இந்தியாவிலுள்ள இராமேஸ்வரக் கோவில் பிரகாரம். இதன் நீளம் 4000 அடி.

உலகத்திலேயே மிகப் பெரிய ஆறு அமேஸன் ஆறு. இதன் கழிமுகம் 2,702,800 சதுர மைல். மிக நீண்ட ஆறு மிசூரி மிசுப்பி. இதன் நீளம் 4,060 மைல்.

கலினன் என்ற வைரம் தான் உலகிலேயே மிகப் பெரிய வைரம். இது திரான்ஸ்வாலில் 1905 ல் எடுக்கப்பட்டது. இதன் நிறை 3,026¾ கரட். இதனுடைய விலையின் மதிப்பு 25,000 பவுண் வரை!

சேகரித்தவர்:
பாப்பா சரவணமுத்து,
திருநெல்வேலி.

குறிப்பு: செல்வி இந்திராணி மகேசனுக்கு மாமாவின் பாராட்டுக்கள்.

எனது கிராமம்

## வேம்போடுகேணி

[மு. சின்னத்துரை]

எனது கிராமம் வேம்போடு கேணி, பளையில் இருந்து மூன்று மைல் தொலைவில் இருக்கின்றது. இதன் விஸ்தீரணம் நான்கு சதுர மைல். வேப்ப மரங்கள் முற்காலத்தில் கூடுதலாக நின்றபடியால் இப்பெயர் பெற்றது. இதனைச் சிலர் "நீர் விழுந்த கேணி" என்றும் அழைப்பார்கள்.

கிழக்கே கச்சார் வெளியும், மேற்கே முகமாலையும், வடக்கே புகையிரத வீதியும், தெற்கே சிறு கடலும் எமது கிராமத்துக்கு எல்லையாக உள்ளன.

இங்கே இருநூறு மக்கள் வரை வசிக்கின்றனர். இவர்கள் அனைவரும் சைவசமயத்தவர்களே ஆவர். இங்குள்ள அனைவரும் தெய்வபக்தி உள்ளவர்கள். இங்கே புதுமை பெற்ற கண்ணகி அம்மன் ஆலயமும், வையிரவர் ஆலயமும் உள்ளன. எங்கள் கிராமத்தில் ஒரு தமிழ்க் கலவன் பாடசாலை உள்ளது. இங்கு சுமார் நூற்றியைம்பது மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இங்குள்ளவர்கள் அதிகமாகப் புகையிலைக் கன்று, மிளகாய்க்கன்று போன்ற காய்கறித் தோட்டம் செய்கின்றனர். சிலர் பருவ காலத்தில் நெற்பயிர் செய்கின்றனர். இன்னும் சிலர் தென்னந் தோட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

எங்கள் கிராமம் பச்சிலைப் பள்ளித் தொகுதியில் உள்ளது. திருவாளர் சிவசுந்தரம் அவர்களைப் பிரதிநிதியாகக் கொண்ட எமது கிராம மக்கள் விடுதலையுணர்ச்சியுள்ளவர்களாக இருக்கிறார்கள். சென்ற போராட்டத்தில் பங்கு கொண்டவர்கள். இனி வரும் போராட்டத்திலும் குதிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள். இங்குள்ள மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவே வாழ்கின்றனர்.

## புதிய மருமக்கள்

3807 சி. பூபாலேந்திரா, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

3808 குழந்தைவேல் வீரப்பன், புதிய நாகவத்தை ப. க., பண்டாரவளை.

3809 சோ. கருணாகரன், கலட்டி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

3810 கந்தசாமி சுப்பிரமணியம், சின்னலன் எஸ்டேட், எல்ல.

3811 முத்துசாமி வேலு, காக்கொல்லை தோட்டம், அப்புத்தளை.

3812 கொ. உதயவண்ணன், ஹிந்தகொட, பதுளை.

3813 ஆர். அசோகன், வாழைச்சேனை.

3814 ந. நகுலசிகாமணி, [illegible] வல்வெட்டித்துறை.

3815 [illegible] கணபதிப்பிள்ளை, மருதங்குளம், காக்காப் பள்ளி.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

#### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 7

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## 'புதுமைத் திருடன்' பரிசுத் திட்டம்

அன்புள்ள மருமக்களே!

மாஸ்டர் சிவலிங்கம் தமது 'புதுமைத் திருடன்' மர்மத் தொடர்கதை மூலம் உங்களை எல்லாம் சில வாரங்களாகப் பரபரப்பில் ஆழ்த்தியிருந்தார்.

இப்பொழுது, 'புதுமைத் திருட'னும் எங்களிடமிருந்து விடை பெற்று விட்டான். என்றாலும், எம்மால் அவனை மறக்க முடியாது.

ஆகவே தான், 'புதுமைத் திருடன்' கதையில் உங்களுக்கு மிகவும் பரபரப்பூட்டிய கட்டம் எதுவென்று நீங்கள் எழுதி அனுப்பினால், அவற்றுக்குள் சிறந்தனவற்றுக்கு மூன்று பரிசுகள் வழங்கலாம் என எண்ணியுள்ளேன்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் 'வளர்மதி' அங்கத்துவப் பத்திரங்கள் மூன்று நிரப்பி அனுப்ப வேண்டும். கட்டுரைகள், தாளின் ஒரு பக்கத்தில், மையினால், தெளிவாக எழுதி அனுப்பப்படல் வேண்டும். கட்டுரையின் நீளம் 150 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

முதற் பரிசு ரூ. 10/- பெறுமதியான புத்தகமாகவும், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் முறையே ரூ. 5/-, ரூ. 2/- பெறுமதியான புத்தகங்களுமாகும்.

முடிவுத் தேதி: புதன்கிழமை 20—11—63 ஆகும்.

சரி. போட்டியில் பங்கு கொள்ள வேண்டியது தானே இனி?

வணக்கம்.

உங்கள் அன்பின்,
வளர்மதி மாமா

## இதையும் தெரிந்து கொள்ளுங்கள்!

"ருட்வின் ஒஸ்றின்" சிகரம் எங்குண்டு?

முதன் முதல் வங்கி எப்போது திறக்கப்பட்டது?

இலங்கையில் அடிமை முறை ஒழிக்கப்பட்டது எத்தனையாம் ஆண்டு?

இருண்ட கண்டமென அழைக்கப்படுவது எது?

ஐக்கிய நாட்டுக் காரியதரிசி யார்?

விடை

இமயமலையில்.
1841ம் ஆண்டு.
1844ம் ஆண்டு.
ஆபிரிக்கா.
ஊ தாண்ட்.

அனுப்பியவர்:
மதியரசு,
செட்டிபாளையம்.

## உங்கள் சிந்தனைக்கு

கோடிக்கணக்கான ஏழைகள் பசியினாலும் அறியாமையினாலும் பீடிக்கப்பட்டுள்ள வரை, அவர்களது உழைப்பின் பயனை அனுபவித்துக் கல்வி கற்று அவர்களையே கவனியாதிருக்கும் ஒவ்வொரு மனிதனையும் துரோகி என நான் கருதுகிறேன்.
—சுவாமி விவேகாநந்தர்.

## இதோ விளக்கம்...

"கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" — இப்படியொரு பழமொழி பல்லாண்டு காலமாக தமிழர் சொற் பழக்கத்திலிருந்து வருகிறது. கல்லைக் கணவனாகவும், புல்லைப் புருஷனாகவும் வரித்து வாழ்ந்த வனிதையரைப் பற்றிய வரலாறுகள் புராணங்களில் ஒரு வேளை இருக்கலாம், ஆனால் பகுத்தறிவுக் கொவ்வாதது. அப்படியானால் இப்பழமொழியின் கருத்தென்னவென்பதைச் சிந்திக்கும் பொழுது கல்மனம் கொண்டவன் கணவனானாலும், புல்லைப் போன்ற உருவ, மென்மையான, உள்ளம் கொண்டவன் புருஷனானாலும், தொட்டுத் தாலி கட்டிய கணவனைக் கண்கண்ட தெய்வமாக மதித்து வாழ்வதே கற்பரசிகள் கடமை என்ற கருத்துத்தான், கதை, கட்டுரை, கவிதை, நாடகம், திரைப்படங்கள் மூலமாக எமக்குக் கிடைத்து வருகிறது. ஆனால் விளக்கம் வேறு விதமாகவும் அமைகிறது. இப்படி—

கல்லான் + ஆனாலும் —கல்லானானாலும்
புல்லன் + ஆனாலும்—புல்லானானாலும்

"கல்லானானாலும் கணவன், புல்லனானாலும் புருஷன்." கல்வியறிவில்லாதவன் கணவனானாலும், பகையுணர்ச்சி, ஈவிரக்கமற்ற போக்கிரி புருஷனானாலும், கணவனை மதித்து நடப்பதே மங்கையர்க்கழகு.

இக்கருத்தைக் கொண்ட, கல்லானானாலும் கணவன் புல்லனானாலும் புருஷன் என்ற பழமொழிதான் ஓரிரு சொற்களைச் சுருக்கிக் கொண்டு நாளடைவில் திரிந்து "கல்லானாலும் கணவன். புல்லானாலும் புருஷன்" என்ற பழமொழியாக மாறியிருக்கிறதென்பதை பகுத்தறிவால் உணர்ந்து பார்த்தால் நன்கு புரியும்.

அனுப்பியவர்:
யாழ்-வேல்வேந்தன்,
மவுண்ட் லெவினியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

றே... எனக்கு எப்பவென்றாலும் சம்மதம்தான். ஆனால் மாப்பிள்ளை மாத்திரம் கவுண்மேந்து வேலையாக இருக்க வேண்டும். இதெல்லாம் எனக்குத் தெரியாதா தம்பி...அமுதாவின் அழகுக்கும் குணத்துக்கும் 'பஸ்ட் கிளாஸ்' ஆளாய் கொண்டு வர மாட்டேனா...எதற்கும் மற்றக் கிழமை உன்னைச் சந்திக்கிறேன்'' என்று கூறிச் சென்ற தரகர் சின்னப்பு, ஒரு வார காலத்துக்குப் பின் என்னை மீண்டும் சந்தித்தார். "எப்படிச்சின்னப்பண்ணே... வாங்கோ, வாங்கோ...எப்படி விஷயமெல்லாம்'' என அவரை வாய் நிறைய வரவேற்றேன். "சின்னப்புவை என்னவென்று நினைத்தாய் தம்பி? அருமையான மாப்பிள்ளை. கொழும்பு காணிக் கந்தோரில் வேலை. நல்ல குணம்'' என்றார். அதிகம் வளர்த்துவானேன், தரகர் சின்னப்புவின் முயற்சியில் திருமணம் முடிந்தது. எனது தங்கையும் கணவனும் கலந்துரையாடிய காட்சியைக் கண்ட மாத்திரத்தே என் உள்ளத்திலிருந்த ஒரு பாரம் குறைந்தது போல இருந்தது. அந்தக் காட்சியைக் கண்டு மகிழ அம்மா உயிருடன் இல்லையே என்ற கவலை அந்த நேரத்தில் என் உள்ளத்தில் எழாமலில்லை.

'அமுதா இவ்விடம் இருக்கட்டும். நான் சீக்கிரம் யாழ்ப்பாணத்துக்கே வேலையை மாற்றிக்கொண்டு வந்து விடுகிறேன்' என்று கூறிய அவர் இரண்டொரு நாட்களில் கொழும்பு போய் விட்டார். மாப்பிள்ளையைப் பற்றி விசாரித்து எழுதும்படி கொழும்பில் உள்ள என் நண்பன் ஒருவனுக்கு எழுதியிருந்தேன். அவன் கடிதம், விவாகம் முடிந்து, மாப்பிள்ளை கொழும்பு போன பின்தான் எனக்குக் கிடைத்தது. கடிதத்தைப் பிரித்தேன்......எனக்கு உலகமே சுழல்வது போல் இருந்தது...... 'நீ எழுதியபடி காணிக்கந்தோரில் விசாரித்தபோது அப்படிப்பட்ட ஒருவரே கிடையாது என்பது தெரியவந்தது. நீ எழுதிய குறிப்புக்களைக் கொண்டு மேலும் விசாரித்துப் பார்த்ததில் அவனொரு ஏமாற்றுப் பேர்வழி எனத் தெரிகிறது. நாசூக்காக உடை தரிப்பானாம். ஆள் வாட்டசாட்டமாம். எந்த வியாபாரிகளிடமும் தன்னை ஒரு வர்த்தக ஏஜன்ட் எனக் கூறி அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டும், வேலைதேடித் திரிபவர்களிடம் வேலை எடுத்துத் தருவதாகக் கூறி பிடுங்கக் கூடியதைப் பிடுங்கிக்கொண்டும்...இதற்குமேல் என்னால் படிக்க முடியவில்லை. காரியம் முடிந்துவிட்டது. இதை அமுதாவிடம் கூறிப் பயனில்லை. புதுமண இன்பத்தில் கோட்டை கட்டும் அவள் உள்ளத்தில் ஏன் விசாரத்தைப் புகுத்துவான்? என் வேதனையை அடக்கிக் கொண்டு நடைப்பிணமாகத் திரிந்தேன்.

ஒரு நாள் பகல் வழக்கம் போல் பண்டகசாலையை மூடிவிட்டு பகல் சாப்பாட்டுக்காக வீட்டுக்குப் போனேன். அங்கே அமுதாவும், அவள் கணவனும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவனைப் பார்த்ததும் எனக்கு ஆத்திரத்தினால் கைகால்கள் வெடவெட என்று நடுங்கின. என்றாலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, 'வாங்க, எப்பவந்தீங்க, ஒரேயடியாக மாறி வந்து விட்டீர்களா?' எனக் கேட்டேன். ஆமாம் என்ற ஒரே வார்த்தையில் கதையை முடித்து விட்டார், அவர்.

அதன்பின் ஒவ்வொரு நாளும் காலை எட்டுமணிக்கெல்லாம் கந்தோருக்குப் போவதாகக் கூறிப் புறப்பட்டால், இரவு 6 மணிக்குத்தான் வீடு திரும்புவார்; உலகமே தெரியாத என் தங்கை தன் கணவன் பெரிய உத்தியோகத்தன் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து வந்தாள். உத்தியோகத்தரின் மனைவியாகிவிட்டோமென்ற எண்ணம் அவளது பாரம்பரிய கிராமப் பண்பாட்டை மாற்றவில்லை.

அவர் கொழும்பிலிருந்து வந்து ஒரு மாதமாவதற்குள் எங்கள் வீடு மதுக்கடையாக மாறியது. முன்பின் அறியாதவர்களுடைய வரத்துப் போக்கும் அதிகரித்தது. அக்கம் பக்கத்திலிருந்து புரளிக் கதைகள் பறக்கத் தொடங்கின.

ஆம் இவர் உண்மை நிலை என்ன? எங்கே செல்கின்றார் என்பதை அவர் பின்னாலேயே திரிந்து அறிய வேண்டுமென முடிவு செய்தேன். வழக்கம்போல மிடுக்காக உடுத்துக்கொண்டு கைதடிச் சந்திக்கு வரவே யாழ்ப்பாணம் பஸ் வருவதற்கும் சரியாக இருந்தது. ஏறிக் கொண்டார். துரதிர்ஷ்டவசமாகவோ, அல்லது அதிர்ஷ்டவசமாகவோ எனக்கு அதில் இடமில்லை என்று கையை விரித்து விட்டான் கண்டெக்டர். நான் அடுத்து வந்த ஒரு வானில், தொத்திக் கொண்டேன். இரண்டு வண்டிகளும் சுமார் பத்து யார் தூரத்தில் ஓடிக்கொண்டிருந்தன. சரி...... யாழ்ப்பாணம் கோட்டடி வந்தது. பலர் இறங்கினர்கள். காணிக் கந்தோரில் உத்தியோகம் பார்க்கும் என் மைத்துனர் மாத்திரம் இறங்கவில்லை. அந்த நிமிஷமே எனக்கு யாவும் புரிந்துவிட்டது, பஸ் யாழ்ப்பாணம் பஸ் நிலையில் நின்றது. அவர் இறங்கி நடக்க ஆரம்பித்தார். நானும் அவர் அறியாமல் அவரைப் பின்பற்றினேன். அவர் காங்கேசன்துறை றோட்டிலுள்ள ஒரு அடைவுகடைக்குள் உள்ளிட்டார். நான் அருகிலுள்ள புத்தகக் கடையில் புத்தகங்கள் வாங்குபவன் போன்று பாசாங்கு செய்து கொண்டே தெருவை நோக்கிக்கொண்டிருந்தேன். அவர் அடவுகடையை விட்டு நடக்க ஆரம்பித்தார். மீண்டும் அவரைப் பின் தொடர்ந்தேன். அவர் பல தெருக்களையும் ஒழுங்கைகளையும் கடந்து பிரம்படியில் ஒரு முடக்கை அடைந்து ஒரு வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு உட்புகுந்தார். நான் முன்பின் தெரியாத வீட்டுக்குள் எப்படிப் புகுவதென்று தயங்கியபடியே அந்த இடத்திலேயே சுழன்று கொண்டிருந்தேன். அந்த வழியால் வருவோர் போவோர் எல்லாம் என்னை வெறித்து வெறித்துப் பார்த்தார்கள். சுமார் ஐம்பது வயதுடைய ஒரு பெரியவர், வாயில் பெரிய சுருட்டொன்றுடன் அவ்விடம் வந்தார். 'என்ன தம்பியோசிக்கிறாய். கச்சேரி இந்நேரம் துவங்கியிருக்குமே! வா,' என்றபடி உள்ளே புகுந்தார். நானும் உண்மையை அறியவேண்டுமென்ற எண்ணத்துடன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவரைப் பின்பற்றினேன். பெரியவரின் தலைக்கறுப்புத் தெரிந்ததுதான் தாமதம்... 'வாங்க அம்மான், வாங்க அம்மான்' என்ற ஒரே தடபுடலான வரவேற்பு. அவ்வரவேற்பைப் பார்த்தால் அச்சூதாடிச் சங்கத்தின் நிரந்தர தலைவர் அப்பெரியவர் தான் என்பதை அவர்களிடம் கேட்காமலே தெரிந்து கொண்டேன். இந்த வரவேற்பில் எல்லாம் பங்கு பற்றாமல் சீட்டாட்டத்திலேயே முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தார் என் தங்கையின் கணவர். நான் அவர் பின்னே சென்று 'எப்படி அத்தான் ஆட்டம்?' என அவர் முதுகில் தட்டினேன். திடுக்கிட்டு நிமிர்ந்தார்...... எதிர்பாராத அதிர்ச்சி அவரை திகைக்கச் செய்தது. அக்காட்சியைப் பார்க்க என் மனம் சகிக்கவில்லை. இப்படியே விட்டுக்கொண்டு போனால் என் தங்கையின் வாழ்க்கை பாழாகிவிடுமே என்ற பயத்தால் பலவாறு எடுத்துக் கூறினேன். அத்தனையும் செவிடன் காதில் சங்காக — விழலுக்கிறைத்த நீராக வீணாயிற்று.

அமுதாவின் உடலை அழகுபடுத்திக் கொண்டிருந்த ஆபரணங்கள் ஒவ்வொன்றாக மறைய ஆரம்பித்தன. கல்லானாலும் கணவன் என்ற மொழிக்கேற்ப கணவன் மனம் கோணாது கேட்கக் கேட்கக் கழற்றிக் கொடுத்தபடியே இருந்தாள் அவள். ஒரு நாள் காதுத் தோட்டைக் கழற்றிக் கொடுக்கும்போது கண்ட நான், 'அமுதா இப்படியே ஒவ்வொன்றாகக் கழற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தால் எத்தனை நாட்களுக்குத்தான் கொடுத்துக் கொண்டிருப்பாய்?' என்று கேட்டேன். இருக்கிறவரைக்கும், என்றாள் அவள். உடனே அவர் யோகியர் போல் 'எனக்கு உன் நகைகள் ஒன்றும் வேண்டாம் அமுதா' என்று கூறியபடியே வெளியே நடக்க ஆரம்பித்தார். 'எத்தனை நாட்களாக எங்கள் குடும்பத்தைக் கெடுப்பதென நினைத்துக்கொண்டு இருந்தாய் அண்ணா?' என்று கேட்டாள் அவள், என் அருமைத் தங்கை.

என்னையறியாமலே 'அமுதா' எனக் கத்தி விட்டேன்.

யாரிடமிருந்து அன்பையும் பாசத்தையும் எதிர்பார்த்தேனோ, யாருக்காக ஓடாக உழைத்தேனோ, அவள் எனக்களித்த பரிசு இது. இதற்குமேல் நான் அங்கு நிற்கவில்லை. பண்டகசாலைக்குச் சென்றுவிட்டேன். ஆனால் பண்டகசாலையில் என் மனம் எதிலும் ஈடுபடவில்லை. என் பருவ உணர்ச்சிகள் அலைஅலையாகப் பொங்கி வந்தபோதெல்லாம் அமுதா மேல் கொண்ட பாசத்தால் அவ்வுணர்ச்சிகளை உள்ளடக்கி, புழுங்கிக் கிடந்தேன். என் வாழ்க்கை இன்பத்தைவிட அமுதாவின் இல்வாழ்க்கையைக் கண்டு அமைதியாக வாழலாம் என்று நம்பியிருந்தேன்.

ஆனால்,

அமுதாவின் அவ்வார்த்தைகள் என் உள்ளத்தை அணு அணுவாகத் துளைத்துக் கொண்டிருந்தன. அன்றிலிருந்து நான் அவர்கள் குடும்ப விஷயத்தில் தலையிடுவதை நிறுத்திவிட்டேன். வழக்கம் போல போவேன்; அங்கேயும் வழக்கப்படி நடக்கும். ஆனால் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை. பந்தபாசம் அறுபட்டவன் போல் அவ்வீட்டில் வசித்து வரலானேன்.

அவனோ போதையில் வருவான். இவளோ அப்பாவி. இருவருக்குமிடையே வாக்குவாதங்கள் நடக்கும். அதையெல்லாம் கவனித்த நான் ஊமையன் கண்ட கனவு போல இருந்தேன். எவ்வளவு காலத்துக்குத்தான் நான் அப்படியே இருக்க முடியும்? எங்காவது கண்ணுக்கெட்டாத்தூரம் போய்விடலாமா என்று எண்ணுவேன். உடனே அம்மாவின் கடைசி வார்த்தைகள் உள்ளத்தில் [illegible] யிருக்கும். நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அமுதாவின் கணவன் நல்ல வெறியோடு தட்டுத்தடுமாறி வீட்டுக்குள் வந்தபடியே... ஏ... அமுதா எங்கே உன் தாலிக் கொடி எடு... எங்கே? என உளறினன்.

அவ்வளவுதான், அமுதா அதிர்ச்சியால் செயலற்று நின்றாள். 'அத்தான் என் உயிரை வேண்டுமானால் தருகிறேன். ஆனால் தாலிக் கொடியை மாத்திரம் கேளாதீர்கள்' என்றாள். அதைப் பார்த்த எனக்கு ஆத்திர உணர்ச்சி மேலிட்டது. அன்று அமுதா கூறிய கூற்றால் என் ஆத்திரத்தை அணையிட்டுத் தடுத்தேன். 'உயிரையே தருகிறாயா... ஹூம்' என்று உறுமியபடியே உள்ளே சென்றார் அவர். பற்பல நினைவுகளால் அலுப்புண்ட நான் எப்போது தூங்கினேனோ தெரியாது— விழித்தபோது நன்றாக விடிந்து விட்டது. அமுதா எங்கேயென்று என் கண்கள் தேடின......

ஆ...... என் சொல்வேன்?

என் தங்கை மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். அவள் கைகள் தாலிக்கொடியைப் பற்றிய வண்ணமே இருந்தன. அருகே நகைப் பெட்டி அலங்கோலமாகக் கிடந்தது.

அமுதா அமுதா என அலறினேன்......சுவரில் தலையை மோதிக்கொண்டேன். நிகழ்ச்சிகள் துரிதமாக நடைபெற்றன. என்னை எப்படியாவது அவமானப் படுத்த வேண்டும் என்று செயலாற்றிக் கொண்டு வந்த எனது கிராமத்திலுள்ள ஒரு சிலருக்கு இச்சம்பவம் சாதகமாகியது. தங்கையைக்கொன்ற கொலைகாரனாக என்னைக் குற்றவாளிக் கூண்டிலேற்றினர். பத்து வருடக் கடுங்காவல் தண்டனை பரிசாகத் தரப்பட்டது. வெளி உலகில் நான் அனுபவித்த தண்டனையைவிட இது குறைவானது என்ற நம்பிக்கையுடன் தண்டனையை ஏற்றுக் கொண்டேன். சிறைவாசத்தின் போது என் குடும்பத்தைக்கெடுத்த அக்கயவனைப் பழிக்குப்பழி வாங்குவதென சங்கற்பம் செய்து கொண்டேன். மகரகமச் சிறையிலிருந்து விடுதலையாகி மூன்று தினங்களாகிவிட்டன. அவனைத் தேடுகிறேன்-தேடிக் கொண்டே இருக்கிறேன்....'

இவ்வாறு கூறிய அவர் என்னை நிமிர்ந்துபார்த்தார். 'என் வினை இது' என்றார் அப்பெரியவர், மிக்க பச்சாதாபத்தோடு. பத்து வருடங்களாகத் தேவனின் கை வண்ணத்தாலும் சிறைவாசத்தாலும் மாறுதலடைந்திருந்த அம்முகத்தை உற்று நோக்கினேன்...என் நெஞ்சு துடித்தது...எவளை என் கையால் கழுத்தை நெரித்துக் கொன்றேனோ—எவளை என் மனைவியாக்கி மரணத்துக்குப் பலியாகக் கொடுத்தேனோ அவளை—அந்த உத்தமி அமுதாவை அங்கு கண்டேன்..... சோகத்தால் துவண்ட என் நெஞ்சை இறுகப் பிடித்துக் கொண்டேன். உலகமே சுழல்வது போலத் தோன்றியது...தன்னுடைய சோக வரலாறு என்னைத் தாக்கி விட்டது போலும் என்ற எண்ணத்துடன், தம்பி தம்பி என்று என்னை அன்பு சொட்ட அழைத்தது அந்தத் தியாகச் சின்னம். எவனைப் பழிவாங்க வேண்டுமென்று துடி துடித்துக் கொண்டிருந்தாரோ-அவனை -அவர் தங்கையின் வாழ்வைப் பாழாக்கிய பாதகனாகிய என்னை அடிக்கடி தம்பி தம்பி என்று வாஞ்சையோடு அழைத்தார். அப்புனித உருவத்தின் முகத்தைப் பார்க்கவே என் மனம் கூசியது. அமுதாவின் மரணத்தின் பின் மனச்சாட்சியின் சவுக்கடியால் நல்லவனாகத் திருந்திவிட்டாலும் கூட அவரை ஏறிட்டுப் பார்க்க என் மனம் துணியவில்லை. அப்படியே அவரின் கால்கள் இரண்டையும் இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டு "அத்தான்! நான்தான் அந்தக் கயவன். இப்போது திருந்திவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்றேன். 'ஆ...நீயா......'என்றவாறே என்னைத் தூக்கி அணைத்துக் கொண்டது அத் தியாகச் சின்னம்.

(யாவும் கற்பனை)


## 'சுதந்திரன்'
## புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி—அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

## சுதந்திரன் அச்சகம்,

தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் தீபாவளி விருந்து! வியாழன் 14ம் திகதி முதல்!!



**ரீகல்** (கொழும்பு) **எல்பின்ஸ்டன்** (மருதானை) **றெக்ஸி** (வெள்ளவத்தை) **அசோகமாலா** (நீர்கொழும்பு)
**வேல்ஸ்** (கண்டி) **நெல்சன்** (திருகோணமலை) **இம்பீரியல்** (மட்டக்களப்பு) **கிங்ஸ்** (பதுளை)
**வின்சர்** (யாழ்ப்பாணம்) இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

4 வருடங்களில் 40 லட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டது!
இந்தியாவின் தலைசிறந்த நடனமணி கமலா லக்ஷ்மணனைப் பாருங்கள்!

கமலா லக்ஷ்மண் - ஜெமினி கணேசன் - மனோகர் - சாவித்திரி
குசலகுமாரி - ராமதாஸ் - கே. சாரங்கபாணி - டி. பி. முத்துலட்சுமி நடித்த

# கொஞ்சும் சலங்கை

தயாரிப்பு-டைரக்ஷன் : எம். வி. ராமன் — இசை : எஸ். எம். சுப்பையா நாயுடு
பாடல்கள் : கண்ணதாசன், பாலசுப்பிரமணியம், சிதாராமன்

நவம்பர் 14ம் திகதி வியாழன் தொடக்கம், கிழமை நாட்களில், ரீகலில் மட்டும் காலை 10 மணிக்கு விசேஷ காட்சிகள்.

உங்கள் பல்கனி டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

கட்டணங்களில் மாற்றம் இல்லை. இலவச பாஸ்கள் செல்லுபடியாகா,

கடைசி வாரம்!
**எல்பின்ஸ்டன்** **றெக்ஸி**
மற்றும் திரைகளில்!
## வீரத் திருமகன்

கெயிட்டியில் 2வது வாரம்!
சிவாஜி கணேசன் —பத்மினி—ஜெமினி கணேசன்
ராகினி—ஓ. ஏ. கே. கே. தேவர் நடித்த
## வீரபாண்டிய கட்டபொம்மன்



2வது வெற்றி வாரம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **ராஜ்** (நீர்கொழும்பு) **விஜயா** (மட்டுநகர்)
மற்றும் 4 திரைகளில்

விஜயகுமாரி—முத்துராமன் — பாலாஜி
சகஸ்ரநாமம்—புஷ்பலதா — சந்திரபாபு
மற்றும் பலர் நடிக்கும்

# போலீஸ்காரன் மகள்

திரைக் கதை - வசனம் - டைரக்ஷன்: ஸ்ரீதர்

தீபாவளித் திரை விருந்து!
நவம்பர் 14ம் திகதி வியாழன் முதல்!!

**கெப்பிட்டல்** (கொழும்பு) **ராஜ்** (நீர்கொழும்பு) **மொடர்ன்** (பதுளை)
**விஜித** (அட்டன்) **கல்யாணி** (நாவலப்பிட்டி) **ஜெமினி** (ராகலை)



ஆனந்தன்—புதுமுகம் சி. லிலா
எம். ஆர். ராதா—ஜெமினி சந்திரா
டி. ஆர். நடராஜன்—மனோரமா
நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

# நாகமலை அழகி

கலர் நடனம்:
சத்தியவதி—ராஜேஸ்வரி



அனேக நாட்களாக ஆவலோடு எதிர்பார்த்த அற்புதப் படைப்பு!
ஆரம்பம் : நவம்பர் மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை!!

**காமினி** (மருதானை) — **சபையர்** (வெள்ளவத்தை) — **வெம்பிளி** (கண்டி)

இதயம், மனது, ஆத்மா, யாவும் படைத்த ஓர் திரைச் சித்திரம்!
ராஜ்கபூர்—பத்மினி—பிராண்—சஞ்சல் மற்றும் பலர் நடிக்கும்

## ஜிஸ் தேஷ் மேன் கங்கா பேஹ்தி ஹை [ஹிந்தி]



2வது மாதம்!

**சென்ட்ரல்** [மருதானை] **ராணி** [யாழ்ப்பாணம்] **ராஜேஸ்வரா** [மட்டக்களப்பு]
**சென்ட்ரல்** [நாவலப்பிட்டி] **மீபுர** (நீர்கொழும்பு) **சென்ட்ரல்** (பருத்தித்துறை)
**சீகிரியா** (பண்டாரவளை)
மற்றும் பல திரைகளில்!



பாய்ந்து வரும் புலியைத் தாக்குவதோடல்லாமல் பகையையும் சாடுகிறார் புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி,
எம். ஆர். ராதா, எம். ஆர். ஆர். வாசு, அசோகன்,
பி. கண்ணாம்பா, சாண்டோ சின்னப்பா தேவர்
மற்றும் பலர் நடித்த

# தாயைக் காத்த தனயன்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 10 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org